بسم الله الرحمن الرحيم

"

மார்க்கத்திலிருந்து
நூஹுக்கு எதனை
அவன் உபதேசித்தானோ
அதனையே
உங்களுக்கும் அவன்
மார்க்கமாக்கியுள்ளான்.
(நபியே!) உமக்கு நாம்
வஹீ அறிவித்தோமே
அதுவும், இன்னும்
எதனை இப்ராஹிமுக்கும்,
மூஸாவுக்கும், ஈஸாவுக்கும்
நாம் உபதேசித்தோமோ
அதுவும் என்னவெனில்
"இம்மார்க்கத்தை
நிலை நாட்டுங்கள் ;
இதில் நீங்கள் பிரிந்து
விடாதீர்கள்" என்பதாகும்.
(அல்குர்ஆன் - 42:13)

"


- சிரியாவில் நடப்பது என்ன? - 4
- அமெரிக்க, ஐரோப்பிய சதிகள் இன்னும் விவரமாக - 19
- வஞ்சிக்கப்படும் சிறுபான்மை சமூகம் - 23
- தொடரும் சிலுவை யுத்தம் 2.0 - 24
- மோடிகளின் பண மோசடிகள் - 29
- திருப்பூரில் கலவரம் ஏற்படுத்த காவிகள் சதி, துணை போகும் காவல்துறை - 34
- ஜாகிர் நாயக் மீது பாரபட்சம்... - 37
- துப்பாக்கி - 38
- சிரியாவில் நடப்பது என்ன? கருத்தரங்கம் - 40
- தாஃவா நிகழ்ச்சி - 44
- அய்.ஏ.எஸ், அய்.பி.எஸ் அதிகாரிகளை இந்துத்துவ ஆதரவாளர்களாக மாற்ற மத்திய அரசு சதித்திட்டம் - 47
- வரலாற்றைத் திருத்தி அமைக்க பாஜகவின் புதிய திட்டம் - 48
- கர்நாடக தேர்தல் 2018 - 50
- கன்னட தேர்தல் பறிபோகும் முஸ்லிம்களின் வாக்குகள் தென்னகத்தில் பாசிஸ்ட்டுகளின் மாபெரும் சதி அம்பலம் - 52
- எது முதலில்? - 54
- இஸ்லாமிய வங்கி முறை - 57
- மால்கம்X நினைவு தின கருத்தாய்வு கூட்டம் - 58
- தலித்துக்கள் மீதான தாக்குதல் பற்றி எப்போது வாய் திறப்பீர்கள் - 61
- இஸ்லாம், அரசியல், அதிகாரம், அரபுலக எழுச்சி - 62



ஏப்ரல்-2018 ஷாஃபான்-1439

# வைகறை
## வெளிச்சம்

ஆசிரியர்
**மு. குலாம் முஹம்மது,** M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
**கே.எம். இலியாஸ் ரியாஜி,** M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

http:/www.facebook.com/vaigarivelicham



# சிரியாவில் நடப்பது என்ன?

## முஸ்லிம் உலகம் குழம்பி போயிருக்கின்றது.

## முஸ்லிம்களே முஸ்லிம்களைக் கொலை செய்துக் கொள்கிறார்கள்.

பெண்களும் குழந்தைகளும் கொலை செய்யப்படுகின்றார்கள். அதிகளாக முஸ்லிம்கள் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்கின்றார்கள். அங்கே அதிகளாக வரும் முஸ்லிம்களை கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றிட கட்டாயப்படுத்துகின்றார்கள். பெண்களை கேவலமாகப் பயன்படுத்துகின்றார்கள், ஒரு நேர சோற்றுக்கு இளம் பெண்களை, குமரிகளை விற்பனை செய்கின்றார்கள்.

இந்த முஸ்லிம்கள் அகதிகளாக சென்ற நாடுகளில் இவர்கள் ஆபத்தானவர்கள் என பார்க்கின்றார்கள், பிரச்சாரம் செய்கின்றார்கள். அவர்களை அகதிகள் முகாம்களிலேயே கொலை செய்வதே தவறில்லை.அது சிறந்த தேசிய சேவை எனப் பிரச்சாரங்கள் நடக்கின்றன.

"They are comming to eat your food and they will take away your jobs"

அதாவது, அவர்கள் உங்களுக்காக இருக்கும் உணவை உண்ண வருகின்றார்கள். அவர்கள் உங்கள் வேலைகளைப் பிடுங்கிக் கொள் வார்கள்" என்ற பிரச்சாரம் ஐரோப்பா முழுவதும் நடத்தப் படுகின்றது.

இந்த முழக்கத்தை மையமாகக்கொண்டு அரசியல் கட்சிகள் தொடங்கப்படுகின்றன. ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளில் இந்த முழக்கங்களை முன்வைத்த கட்சிக்கோ எதிர்க்கட்சிகளாக உள்ளன.

இத்தனைக்கும் காரணம் "வேறு யாருமல்ல முஸ்லிம்கள்தாம். அவர்களாக ஈராக், சிரியா ஆகிய நாடுகளில் தொடங்கிய உள்நாட்டுப் போர்தான் என்றொரு பிரச்சாரம் அழுத்தமாகச் செய்யப்பட்டு வருகின்றது."

அதிலும் குறிப்பாக சியாக்கள் என்றொரு பிரிவுக்கும், சன்னி முஸ்லிம்கள் என்றொரு பிரிவுக்கும் ஏற்பட்ட பிளவாம். சண்டையாம் என்று பகைக்கும், போருக்கும் பக்குவமாக விளக்கங்கள் சொல்லப்படுகின்றன. இடை விடாமல் செய்திகள், காட்சி ஊடகங்களில் காண்பவர்கள் கண்ணீர் சிந்திடும் அளவில் காட்சிகள் இவை காட்டப்படுகின்றன.

விடா மழையான இந்தச் செய்திகள் கொட்டும்போது முஸ்லிம்கள் தங்களையே வெறுக்கின்றனர். நாமே சரியில்லையே எப்படி அடுத்தவர்களை இஸ்லாத்திற்கு அழைப்பதும் என அங்காலாயிக்கின்றனர்.

சண்டையிடுவதில் யாரை முஸ்லிம்கள் அல்ல எனச் சொல்லிடலாம், அதற்காக என்னென்ன காரணங்களை இட்டுக்கட்டலாம் என்ற ஆராய்ச்சிகள் வேகமாகவும் விறுவிறுப் பாகவும், நடக்கின்றன.

மொத்தத்தில் முஸ்லிம் உலகையும் முஸ்லிம்களையும் குழப்புவதில் வெற்றிகண்டு விட்டனர் இஸ்லாத்தின் எதிரிகள்.

இப்படி முஸ்லிம் உலகைக் குழப்பிவிட்ட தால், அவர்கள், இஸ்லாத்தின் எதிரிகள் தாங்கள் போட்ட நீண்ட நாள் திட்டங்களில் பெரிதாக வெற்றி பெற்றுவிட்டனர்.

இந்தச் சந்தடி சாக்கில் இன்னொன்றும் அவர்களுக்கு அதிகச் சிரமமில்லாமல் கிடைத்து விட்டது. அது அவர்கள் பல ஆண்டுகளாக முஸ்லிம் உலகில் செய்த அழிவுகள், அட்டூழி யங்கள், அழித்த இஸ்லாமிய அடையாளங்கள், கலாச்சாரங்கள், பிம்பங்கள் கொன்று குவித்த மக்கள், வேட்டையாடிய மழலைகள், சுரண்டிய இயற்கை வளங்கள், கொள்ளை கொண்ட கனிமங்கள் இவற்றையெல்லாம் கூட முஸ்லிம்கள் மறந்து விட்டனர். அவற்றிற்கும் சேர்த்து நாம்தான் காரணமோ என மயங்கவும், விரக்தியடையவும் தொடங்கி விட்டனர்.

இத்தனையையும் செய்தவர்கள் இஸ்லாத் தின் எதிரிகள், எகத்தாளமாய் அறிக்கைகள் விட்டுக் கொண்டிருக்கின்றார்கள். நாம் இஸ்லாத்தின் எதிரிகளைப் பற்றியும் அவர்களின் சதித் திட்டங்களைப் பற்றியும் எள்ளவும் சிந்திப்பதில்லை. ஏன் அந்தத் திசையில் ஏறெடுத்துப் பார்ப்பது கூட இல்லை.

சிரியாவில் இன்று நடப்பவை எல்லாமே 2010/2011 ஆம் ஆண்டுகளில் அரபு நாடுகளில் ஏற்பட்ட அரசு வசந்தத்திலிருந்து தான் தொடக்கம் என ஓரளவு வரலாற்றை எட்டிப் பார்ப்பவர்கள் கூட ஒரு கனம் நின்று அந்த அரபு வசந்தத்தில், முஸ்லிம்கள் கிளர்ந்தெழுந் தார்களே ஆண்டாண்டு காலமாக அதிகார பீடங்களில் இருந்தவர்களுக்கு எதிராக அந்த எழுச்சி என்ன ஆயிற்று? என்று கூட ஆலோசிப் பதில்லை. அதற்கான நேரத்தை நமது ஊடங் கங்கள் தருவதில்லை. சதா சர்வகாலமும் நமது கவனத்தை வேறு பக்கமே வைத்துக் கொண்டி ருக்கின்றன. நமது சிந்தனையை நம்மைப் பற்றியத் தாழ்வு மனப்பான்மையிலேயே மூழ் கடித்து விடுகின்றன.

அந்த அரபு எழுச்சியில் மக்கள் பெருந்திர ளாக ஒன்று திரண்டார்கள். இஃது துனீசியா நாட்டில் டிசம்பர் 18, 2010-ல் தொடங்குகிறது - பின்னர் எகிப்திற்கு வந்தது. துனீசியாவில் கொடுங்கோலன் ஜெய்னப் அலீ ஆப்தீன் என்பவரை பதவியிலிருந்து தூக்கி வீசியவுடன், அமெரிக்காவும் இதர நாடுகளும் துனீசியாவின் நித்திய நடப்புகளில் தலையிட்டன. இஸ்லாமிய ஆட்சியைக்கொண்டு வந்திட வேண்டும் என விரும்பி ராஷீத் கன்னவ்சியை ஆட்சியில் அமர விடாமல் பார்த்துக் கொண்டார்கள்.



இஸ்லாமிய ஆட்சியைக் கொண்டு வந்து, இஸ்லாமிய பொருளாதார முறையை நிலை நிறுத்திட வேண்டும். ஊழலையும் ஆட்சியாளர் களின் ஊதாரித்தனத்தையும் ஒழித்துவிட்டு, சுரண்டல், வட்டி ஆகியவற்றை குழிதோண்டி புதைத்துவிட்டு பொருளாதார வளர்ச்சியையும், இஸ்லாமிய ஒழுக்க மாண்புகளையும் நிலை நாட்டிட விழைந்த ராஷீத் அல் கன்னவ்சியை பதவியில் அமரந்திட விடாமல் பார்த்துக் கொண்டார்கள்.

ராஷீத் கன்னவ்சி அவர்களும் ஏற்பட அரபு எழுச்சியை எதிரிகள் வீழ்த்தி மீண்டும் பரம்பரை பண்ணை ஆட்சியைக் கொண்டு வந்திடாமல் தடுத்தால்போதும் என்ற நிலைக்கு வந்து விட்டார். ஆக அங்கே இஸ்லாமிய ஆட்சியைத் தடுத்துவிட்டார்கள்.

எகிப்தில் அரபு எழுச்சியைத் தொடர்ந்து நடந்த வாக்களிப்பில் மகத்தான வெற்றிகளைக் குவித்த இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தைத் சார்ந்தவர்கள், சிறையில்! அமெரிக்காவின் சூழ்ச்சியை அப்படியே செயல்படுத்திடும் கொடுங்கோலனின் ஒற்றைக் குடும்ப ஆட்சியை அங்கே கொலுவேற்றி வைத்திருக்கின்றார்கள் இஸ்லாத்தின் எதிரிகள்.

எகிப்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சிறையில் மட்டுந்தான் அடைக்கப்பட்டார்கள் என்றில்லை. அவர் களில் பலரது சிரம் துண்டிக்கப்பட்டுவிட்டது. இன்னும் பலரை தூக்கில் போடும் நடவடிக் கைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

ஆக. அரபு எழுச்சி இவர்களின் வார்த்தை களில் அரபு வசந்தம் மக்கள் விரும்பிய இஸ் லாத்தை ஆட்சியில் இருத்திட பயன்படவில்லை. இஸ்லாத்திற்காக களம் கண்டவர்களை கழுவேற்றிடவும். அப்பாவி முஸ்லிம்களை கொன்று குவிக்கவுமே பயன்பட்டது. அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் கைப்பாவைகளே ஆட்சியில் இருக்கின்றனர்.

இந்த அரபு எழுச்சிக்காக அரபுலகத்தில் கூடிய சாதாரண சாமானிய மக்களைக் கொன்று குவித்தவர்கள், பிணங்களைக் கொண்டு குற்றுகளை எழுப்பியவர்கள் முஸ்லிம் பெயர் தாங்கிகள். அப்போதெல்லாம் அங்கே சியாக்களையும் - சன்னிகளையும் நாம் தேட வில்லை. ஏன் அங்கே முஸ்லிம் பிணங்களைக் குவிக்க எல்லாவிதத்திலேயும் உறுதுணையாக இருந்த இஸ்லாத்தின் எதிரிகளை, அமெரிக்க ஐரோப்பிய நாடுகளை, நாம் கண்டுகொள்ள வில்லை. அவர்களுக்கெதிராகக் கனைத்துக் கூட காட்டிடவில்லை.

அரபு எழுச்சியை வழிமறித்து. அதையும் முஸ்லிம்களைக் கொன்று குவிக்கப் பயன்படுத் தியபின்இவர்கள்தங்கள்கொலைப்படலங்களை சிரியாவில் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நமது சகோதரிகளையும். குழந்தைகளையும் நம்மவர்களே இவ்வளவுக் கோரமாகக் கொலை செய்வார்களா? என்பதை நாம் எண்ணிப் பார்க்கத் தவறி விடுகின்றோம்.

**இந்தியாவில் நடந்து என்ன?**

இந்தியாவிலும் நமது கண்களுக்கு முன் னாலேயே நாம் இதைப்பார்க்க வில்லையா? மே-18, 2007 ஹைதராபாத் மக்கா பள்ளி வாசலில் வெள்ளிக்கிழமை-இல் ஜும்ஆ தொழுகையின்போது குண்டு வைத்தார்கள். முஸ்லிம்களைப் பிணமாகக் குவித்தார்க்ள. அங்கே தொழுகை நடத்துவதற்காக நியமிக்கப் பட்டிருந்த எட்டு இமாம்களில் ஒருவரின் மகனையும் சேர்த்து 96 முஸ்லிம்களைச் சிறை பிடித்தார்கள்.

நாம் எடுத்த எடுப்பிலேயே காட்சி ஊடகங்கள் காட்டிய காட்சிகளையும் அரசின் தரப்பில் கூறப்பட்ட, குற்றஞ்சாட்டப்பட்ட, இந்தியன் முஜாஹித் என்ற அமைப்பையும் நம்பினோம்.

10 ஆண்டுகளுக்குப்பின் இந்தியாவை இந்து ராஷ்டிரமாக ஆக்கிடத் துணிந்தோரின் ஈனச் செயல் அது என்பது தெரியவந்தது. அசிமா னந்தா என்ற சுவாமிஜி தானே முன் வந்து ஒத்துக்கொண்டார். ஆனால் நாம் நமது சமுதாய அரங்குகளிலும், தனிப்பட்ட விவாதங் களிலும் என்ன பேசிக் கொண்டோம். நமக் குள்ளே தீவிரவாதிகள் இருக்கின்றார்கள்.

சில முஸ்லிம்கள், திருக்குர்ஆனையே தவ றாகப் புரிந்துகொண்டிருக்கின்றார்கள். நாம் சரியில்லை. நம்மவர்களில் அறை குறைகள், ஆர்வக் கோளாறுகள் இருக்கின்றார்கள்



என்றெல்லாம் தப்புக் கணக்குப் போட்டோம்.

இங்கே சன்னிப்பிரிவு - ஷியா பிரிவு எனப்பேசி இருப்போம். ஆனால் ஈராக்-ஐ போல் சிரியாவைப்போல் இங்கே ஷியாக்களும் சன்னிகளும் விரவி வாழ்ந்திடவில்லை.

ஹைதராபாத் மக்கா மஸ்ஜித்-இல் என்ன நடந்ததோ, அதுவே அஜ்மீர் தர்காவிலும், அக்.11, 2008 அன்று நோன்பு திறக்கும் நேரத்தில் குண்டுகள் வெடித்தன. நமக்கு ஊடகங்கள், செய்திகள், காட்சிகள், விவாதங்கள் இவற்றில் என்ன சொல்லித் தந்தன. சலபி ஜிஹாதிகள் என்ற தர்கா வழிப்பாட்டை வெறுக்கும் முஸ்லிம்கள்தான் இதனைச் செய்தார்கள் என்றார்கள். பிப்ரவரி 11, 2007 அன்று ஹம்ஜோத்தா எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்புகளிலும் இதுவே நடந்தது.

இங்கெல்லாம் குண்டு வைத்தவர்கள் சங்கப் பரிவாரத்தினர், செத்துப் பிணமானது முஸ்லிம்கள். பழியைச் சுமந்ததும் முஸ்லிம்கள். முஸ்லிம்களாகிய நாமும் நம்மில் சிலர் இப்படி சிந்திக்கின்றார்கள் என நொந்து கொண்டோம்.

அதேபோல் தான் கோவை 1998 குண்டு வெடிப்பிலும், தெஹல்காவின் ஆய்வும், சட்ட மன்ற உறுப்பினர் ஏ.வி.நாசர் அவர்களின் "கோவை கலவரத்தில் எனது சாட்சியங்கள்" என்ற நூலும் வெளிவரும் வரை நாமும் கோவை குண்டு வெடிப்புகளின் மூளைகளைத் தெரிந்திட இயலவில்லை.

இன்று நாட்டை உலுக்கிய 16 குண்டு வெடிப்புகள் - சங்கப்பரிவாரத்தால், நடத்தப் பட்டவை இலட்சியம் இந்து ராஷ்ட்ரா "அகண்டபாரதம்" என்பவையே! இதை முன்னாள் மராட்டிய மாநில காவல்துறை அதிகாரி ஹேமர்ந்த் கர்கரே கண்டுபிடித்தார், அதனால் உயிரை இழந்தார். எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் எழுதிய அதனை நூலாகத் தந்தார்கள்.

இவையெல்லாம் ஓர் உண்மையை உரக்க முழங்கும். அது, இஸ்லாத்திற்கெதிரான - முஸ்லிம்களுக்கெதிரான தொடர் சதிகள் நாள் தவறாமல் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இந்த உண்மையின் பின்னணியில் நாம் சர்வதேச நிகழ்வுகளையும் பார்க்கப் படித்துக் கொள்ள வேண்டும். எதிரிகள் ஓய்வு ஒழிச்சலின்றி நமக்கெதிராக சதிகளை நிறைவேற்றிக் கொண்டே இருக்கின்றார்கள். நமக்கெதிராக முஸ்லிம்களுக்கெதிராக இந்தப் பின்னணியைப் புரிந்துகொள்ளாவிட்டால் நாம் இந்தப் பிரச்சனைகளைப் புரிந்துகொள்ளவே மாட்டோம்.

"வைகறை" வாசகர்களைப் பொறுத்தவரை இந்தச் சதிகளை அடுக்கடுக்கான ஆதாரங்களோடு இந்த பின்னணிகளை தொடர்ந்து வெளியிட்டு வருகின்றோம்.

இதனை நாம் இன்று நேற்றல்ல!, நாம் நிறுவி நடத்திவந்த "செய்திமடல்", "விடியல் வெள்ளி" ஆகியவற்றிலும் நிரம்பவே விளக்கி இருக்கின்றோம்.

ஆனால் இப்போது சிரியாவின் கவுட்ட "Ghouta" பகுதியை ரஷ்யா நடத்திய தாக்குதல் உலக மக்களின் கவனத்தை ஒன்றாக இந்தப் பக்கம் திருப்பிவிட்டது.

இந்தப் பின்னணியில் சிரியாவில் நடப்பதை மையப் படுத்தி சர்வதேச சதிகளை இங்கே பட்டியிலிடுகின் றோம். - அதற்குமுன் ஆறுத லான செய்தி ஒற்றை உள்ளங் களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகின்றோம்.





ஆறுதல்,,,

சோதனைகளுக்கிடையேயும் ஓர் ஆறுதல், தாருல் இஸ்லாம், நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம், வைகறை வாசகர் வட்டம், இவற்றின் பிரதான பணி, மக்களை இஸ்லாத்தின் பக்கம் அழைப்பதாகும்.

இந்த அழைப்பில் பெரும்பாலும் பொது வுடமைவாதிகளையே நாம் எதிர்கொள்கின் றோம். இந்தப் பொதுவுடமைவாதிகள் நமது பணியை திசை திருப்பிட, சிரியாவிலும், இதரப் பகுதியிலும் நடப்பனவற்றை சுட்டிக் காட்டி இந்த மார்க்கத்தையா நாங்கள் ஏற்றிட வேண்டும் என்பார்கள்

ஆனால் அவர்களுக்கு அந்தப் பின்னணி யைச் சொன்னால் புரிந்துகொள்கின்றார்கள். உண்மையை உணர்ந்து கொள்கின்றார்கள். இப்போது அவர்களும் தங்களது பேச்சுகளிலும் எழுத்துக்களிலும் இந்தச் சதியை அம்பலப் படுத்தி வருகின்றார்கள்.

இதேபோல நமது இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கின்ற பெரும் பணியில் நாத்தி கர்களும் வருகின்றார்கள். ஆனால் அவர்கள் இந்தப் பின்னணிகளை நன்றாகப் புரிந்தவர் களாக இருக்கின்றார்கள். எடுத்துக்காட்டாக "விடுதலை" இதழில் இடம்பெற்ற இரண்டு கட்டுரைகளைக் குறிப்பிடலாம். இந்த இரண்டு கட்டுரைகளுக்கும், தலைப்பு "இந்துந்துவாக்களின் அகண்ட பாரதம் போல் இஸ்ரேலின் அகண்ட இஸ்ரேல் கனவிற்காக பலியாகும் சிரியா" (விடுதலை 9-3-2018 மற்றும் 12-3-2018)

இன்னொரு நிகழ்வை (திருப்பூரில் நாங்கள் நடத்திய விழிப்புணர்வு கருத்தரங்கத்தில் நடந்ததை) நமது திருப்பூர் நிருபர் சொல்லி இருக்கின்றார். இந்த இதழில் இடம் பெற் றிருக்கும் செய்திக் கட்டுரையைப் படிக்கவும்.

இதில் மிகப்பெரும் வேதனை என்ன வென்றால், நாத்திகர்களுக்கும், பொதுவுடமை வாதிகளுக்கும் தெரிந்த அளவுக்குக்கூட நம்ம வர்களுக்கு தெரிந்திடவில்லை என்பதுதான்,

அவர்களெல்லாம் முஸ்லிம் நாடுகளில் நடந்து கொண்டிருப்பவை, அமெரிக்காகவும், ஐரோப்பாவும் இஸ்ரேலும் இணைந்து நிறைவேற்றும் சதி எனக் குறிப்பிடும்போது, நம்மவர்கள் மட்டும், அது ஷியா. சன்னி சதி என மார்பில் போட்டுக் கொள்கின்றனர்.

**வரலாறு - கி.பி. 634 முதல் 2018 வரை**

இன்று நடப்பவற்றைப் புரிந்துகொள்ள நாம் வரலாற்றில் சற்றுப் பின்னோக்கிப் போக வேண்டும்.

கி.பி. *634* முதல் *638* வரை உலகை புரட்டிப்பேடும் அந்த நிகழ்வுகள் நடந்தன.

இந்த நிகழ்வுகளின் தாக்கம் இன்றளவும் குறைந்தபாடில்லை. உண்மையைச் சொன்னால்

அவற்றின் வேகமும் விறுவிறுப்பும் கூடியே இருக்கின்றது.

ரோமர்கள், பெருமானார் (ஸல்) அவர்களின் காலந்தொட்டே இஸ்லாத்திற்கெதிராக திட்டங்களைத் தீட்டிக் கொண்டே இருந் தார்கள். மன்னன் கிராக்கிளியஸ் என்பவனை ரோம நாட்டுப் பாதிரிகள் தூண்டி விட்டுக் கொண்டே இருந்தனர். இஸ்லாம் வேகமாகப் பரவிக் கொண்டே இருக்கின்றது. அதனை தடுத்து நிறுத்தியாக வேண்டும். அது ரோம நாட்டு எல்லைகளை தீண்டுவதற்கு முன்னால், எனச் சொல்லிக்கொண்டே இருந்தார்கள். வெறுமனே சொல்லிக்கொண்டிருக்கவில்லை. மாறாக, பெரும்படையையும் திரட்டிக் கொண்டிருந்தார்கள்.

ரோமபேரரசால் பெரும்படையொன்று திரட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்ற பெரும் செய்தி ஷாம் (சிரியாவின் அன்றைய பெயர்) தேசத்திலிருந்து இஸ்லாமிய ஆட்சியின் மார்பிடம் மதினாவுக்கு எண்ணெய் கொண்டு வந்து வியாபாரம் செய்து கொண்டிருந்த வியா பாரிகள் மூலம் வந்து சேர்ந்தது. (Source : The Sealed Nactar)

ஒரு கட்டத்தில் ரோமர்களை 40,000 பெரும் படையை ஒன்று திரட்டிவிட்டதாகவும், இஃதல்லாமல் பல, குலங்களும், கோத்திரங் களும் அவர்களுக்கு உதவி செய்திட முன் வந்திருப்பதாகவும் செய்திகள் பெருமானார் (ஸல்) அவர்களை வந்து சேர்ந்துகெண்டே இருந்தன.

இந்தச் செய்திகள் மதீனாவின் வீதிகளிலும் பேசப்பட்டது. எந்த அளவுக்கு என்றால் யாராவது மதீனாவில் விரைந்து வருவதாக இருந்தால் ரோம நாட்டுப் படைகள் வந்து விட்டனவைா என மதீனாவாசிகள் எண்ணிடும் அளவுக்கு இந்தச் செய்தி பேசப்பட்டது.

இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள், இதுபோன்ற எச்சரிக்கைகளை கண்டுகொள்ளா மலிருப்பவர்கள் அல்ல. அவர்கள் முஸ்லிம்களை ஒன்று திரட்டி ரோமர் படைகளை "தபூக்' என்ற எல்லைப் பகுதியில் சந்தித்து விடுவது என்று முடிவு செய்தார்கள். ரோமர்களின் படைகளை இஸ்லாமிய எல்லைகளுக்கு உள்ளே விட்டுவிட்டு அதன்பின் பொருதிடுவது பலனளிக்காது என முடிவு செய்தார்கள். அத்தனை சிரமங்களுக்கிடையேயும் 30,000 பேரை திரட்டி தபூக் என்ற ரோமப் பேரரசின் எல்லைக்கு வந்தார்கள்.

ஆனால் ஹிராக்கிளியஸ் என்ற ரோமப் படை தளபதிக்கு தைரியம் வரவில்லை. முஸ்லிம்களின் படைகளைச் சந்திக்க. அவன் போருக்குப் புறப்படவே இல்லை. ஆனால் இஸ்லாத்திற்கெதிராகப் படைகளைத் திரட்டு வதை அவன் நிறுத்தவே இல்லை.

இந்நிலையில்தான் கி.பி. 634-இல் கலீபா உமர் (ரழி)-இன் ஆட்சியின் போது கிராக்கி ளியஸ் கிருத்தவ பாதரிகளும் முஸ்லிம்களுக் கெதிராக ஒரு பெரும் போருக்குத் தயாராகிக் கொண்டிருந்தார்கள் என்ற செய்தி வந்தது.

கலீபா உமர் (ரழி) அவர்கள் பெரும் படையைத் திரட்டி அனுப்பி இருந்தார்கள். இரண்டு மாதங்களாக 'யர்முக் ஆற்றங்கரையில் முஸ்லிம் படை வீரர்கள் முகாமிட்டிருந்தார்கள். ரோமர்கள் மலைமேலிருந்து கீழே இறங்கி வருவார்கள், தாக்கிடலாம் எனக் காத்திருந்தனர் முஸ்லிம்கள்.

ஆனால் கிருத்தவர்கள் முஸ்லிம்கள் ஆற்றைக்கடந்து வந்து மலையின் மேல் ஏறு வார்கள் தாக்குவதற்கு எளிதாக இருக்கும் எனக் கருதி காத்து நின்றார்கள் காத்துக்கிடந்ததில் இரண்டு மாதங்கள் கடந்துவிட்டன. இறுதியில் கிறிஸ்தவ பாதிரியார்களே பொறுமையை இழந்தார்கள். ஹிராக்கிளியஸ் (ரோம படைகளை வழி நடத்திய மாமன்னன்)-ஐ ஏவி தாக்குதலை தொடங்கினார்கள். ஆகஸ்ட் 30/634-இல், வாய்ப்பை வாகப் பயன்படுத் தினார்கள் முஸ்லிம்கள், ஆறே நாள் போரில் 40,000 முஸ்லிம்கள் படையைக் கொண்டு 2,40,000 இரண்டு லட்சத்து நாற்பதாயிரம் ரோமப் படையை வென்றார்கள். Short History of Sanacers.

வெற்றி முகட்டில் நின்ற முஸ்லிம்கள் மிகக்குறுகிய காலஅளவில் சிரியாவை அன்றைய "அஷ்ஷாம்" பகுதியை வென்றார்கள். சிரியாவின் ஒரு பகுதியாக இருந்த பாலஸ்தீனும் முஸ்லிம்களின் கைகளில் வந்தது. அடுத்து

முஸ்லிம் படைகள் ஜெருசலத்தின் பக்கம் திரும்புவார்கள் என்பதை நன்றாக அறிந்த ஜெருசலத்தின் தலைமைப் பாதிரியார் சோஃப் ரோஜியுஸ், ஜெருசலத்தை முஸ்லிம்களிடம் ஒப்படைக்கத் தயாரானார். அதற்கான நிபந் தனைகளை விதித்தார். முதன்முதலில் ஜெரு சலம் என்பது எங்களுக்கு மிகவும் புனிதமானது. ஆகவே நாங்கள் ஜெருசலத்தின் திறவுகோலை உங்கள் அதாவது முஸ்லிம்களின் ஆட்சித் தலைவராகிய கலீபா உமர் (ரழி) அவர்களைத் தவிர வேறு யாரிடமும் ஒப்படைக்க மாட்டோம்.



அடுத்து யூதர்களை இந்தப் பகுதியில் வாழ்ந்திட அனுமதிக்கக் கூடாது. இந்தச் செய்தியை அறிந்ததும் கலீபா உமர் (ரழி) அவர்கள் தலைமை பாதிரியாரின் உணர்வு களைப் புரிந்துகொண்டு தானே நேரில் வந்து ஜெருசலத்தின் சாவியைப் பெற்றுக் கொள்வ தாக ஒப்புக் கொண்டார்கள்.

வரலாற்றில் வரை இட்டுக்காட்டிட வேண்டிய நிகழ்வு ஒன்று அங்கே நடந்தது.

இஸ்லாமிய உலகின் தலைவரும், கிறிஸ்தவ உலகின் தலைவரும் (பாதிரியும் Chief Patirarch) ஒன்றாய் அந்த ஜெருசலத்திற்குள் நுழைந் தார்கள். (கிபி : story of Saracens, Pages 39, 40)

அதன்பின் அங்கே நடந்த நிகழ்வுகள் ஒவ்வொற்றையும் வரலாற்றில் பதிய வேண்டும். ஏற்கனவே நான் பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதி களான வரலாறு, பைத்துல் முகத்திஸ் ஆகிய நூல்களில், வைகறையில் இடம்பெற்ற கட்டுரை களிலும் விரித்துறைந்திருக்கிறேன். எழுதிய பைத்துல் முகத்திஸ் என்ற நூலில் விரிவாகச் சொல்லி இருப்பதால் இங்கே விட்டு விடு கின்றேன். ஒரே நிகழ்வை மட்டும் தருகின்றேன்.

அது ஜெருசலத்தில் வாழ்ந்த அத்தனை சமூகங்களும் சுமூகமாக வாழ்வதற்கு ஏற்பாடு களைச் செய்தார்கள் கலீபா உமர் (ரழி) அவர் கள். கிறிஸ்தவர்களுக்கும் ஏனையோருக்கும் ஒரு சிறிய வரியை விதித்தார்கள். யூதர்கள் அங்கே கிறிஸ்தவர்களால் ஒடுக்கப்பட்டுக் கிடந்தார் கள். அவர்கள் அந்த வரியி லிருந்து தங்களை விடுவித் திட வேண்டும், எங்கள் ஏழ்மையையும், வறுமை யையும் கருத்தில் கொண்டு என மன்றாடினார்கள். அதனால் அவர்களுக்கு (Samaritanjews) அந்த வரியிலிருந்து விடுவிப்பு வழங்கப்பட்டது. (A Short History of Saracens)

இந்த யூதர்கள்தாம் இன்று முஸ்லிம்களுக்கெதி ராக அத்தனை அநியாயங் களையும் கட்டவிழ்த்து விட்டுக்கொண்டிருக்கின்றார்கள். ஜெருசலத்தை தலைமையாகக் கொண்டு யூத நாடு ஒன்றை அமைப்போம் என மார்தட்டிக் கொண்டிருக்கின்றார்கள். என்னே நன்றி கெட்டத்தனம்!

அன்று முஸ்லிம்களுக்கெதிராக படை நடத்திய கிராக்கியஸ் மன்னன் சிரியாவை விட்டு வெளியேறும்போது இப்படித்தன் ஆதங்கத்தைத் தெரிவித்தான்.

Farewell O Syria and whatan Excellent country this is for the enemey. (History of the Arabs : Philp. K.Hitti.

"சிரியாவை விடைபெறுகின்றேன். எதிரிகளிடம் எப்படிப்பட்டதொரு நாட்டை விட்டுச் செல்கின்றேன்.

சிலர் வரலாற்று ஆசிரியர்கள், இப்படிச் சொல்லுகின்றார்கள். சிரியா என்ற வளம் கொழிக்கும் பூமியை உங்களிடம் விட்டுச் செல்கிறேன். எங்களவர்கள் மீண்டும் வருவார்கள் (HR.P. Dickson the Arab of the Desert. Ldn அன்று அவன் சொன்னது வரலாற்றின் பிந்தைய நாட்களில் இப்படி நடந்தது. ஆமாம் வந்தார்கள்!

**சிலுவைப்போர்கள்!**

வரலாற்றை வரைகின்ற வல்லுநர்கள் ஒரு செய்தியை சாதாரணமாகச் சொல்லிவிட்டுப் போய்விடுகின்றார்கள். அது மன்னர் ஹிராக்கிளியஸ்-ஐ முஸ்லிம்களுக்கு எதிராக படை திரட்ட வைத்தது பாதிரிகள்தாம்.

ஜெருசலத்தை முஸ்லிம்களிடம் ஒப்படைத்ததும் கிறிஸ்தவ உலகின் தலைமைப் பாதிரி சோஃப்புரோஜியுஸ் அவர்கள்தாம். கி.பி.633-இல் 640-க்குள் மொத்த சிரியாவும் (அஷ்ஷாம்) முஸ்லிம்களின் ஆட்சியின் கீழ் வந்தது.

வரலாற்றில் பிற்றைய நாட்களில் அதாவது 1095-ஆம் ஆண்டில் சிலுவைப் போர்கள் என வழங்கப்பெற்ற போர்களைத் தொடர்ந்து 151 வருடங்கள் நடத்தியதும், போப் அர்பன்-2 என்ற பாதிரிதான் என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

நவீன சிலுவைப்போர் என ஜார்ஜ்புஷ் 2001 செப்டம்பர் 13-இல் அறிவித்தார். ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்தார். அந்தப் போரில் பல நூறு அமெரிக்கப் படைகள் தாலிபான்களிடம் சிக்கின. அநதப் படையைச் சார்ந்தவர்கள் சொன்னது

எங்களை அனுப்பியது (அமெரிக்க) அரசாங்கமல்ல, மாறாக எங்கள் தேவாலயங்கள்தாம். (விரிவான தகவல்களுக்கு படிக்கவும், தாலிபானின் பிடியில் மற்றும் Front Line February 25. 2005)

சிலுவைப் போர்களை 1095 முதல் 1247 வரை தொடர்ந்து நடத்தியவர்கள் முடிவில் முஸ்லிம்களிடம் பெற்றது பெருந்தோல்வியே! இஸ்லாம் வெற்றிபெற்ற மார்க்கமாய் உலகில் வலம் வந்தது.

இதனைத் தொடர்ந்து மக்கோலிய தார்தாரிகள் தாக்குதல், சிலுவைப்போரின் இஸ்லாத்தின் எதிரிகளை வீழ்த்திட ஒரு வீரர் சலாஹுத்தின் அய்யூபி, மக்கோலியர்களின் முரட்டுத் தாக்குதலைத் தடுத்திடவும் திருப்பித் தாக்கிடவும் ஒரு சுல்தான் செய்ஃப்புதீன் என முஸ்லிம் உலகை சுற்றிப் பகைவந்த நாட்களில் வெற்றி தோள் கொண்ட முடிந்தது.

மலர்ந்தது மீண்டும் கிலாபத், உதுமானியப் பேரரசாய், உலகை இஸ்லாம் வெற்றி கொண்டது, வழி நடத்தியது.

ஆனால் மீண்டும் வந்தார்கள், அன்றைய சிலுவைப்போர் வாரிசுகளின் வீரர்கள், 1917-களில் அதே அரபுலகினுள். முதலாம் உலகப் போரின் சிரியாவின் தலைநகரம் டெமாஸ்கஸ்-இன் உள்புகுந்தார்கள். சலாஹுத்தின் அய்யூபின் கல்லரைமேல் கால்களை வைத்தார்கள். Look Salahudeen we are back and the crusade Erob here என்றார்கள்.

"சலாஹுத்தின் இங்கே பார், நாங்கள் மீண்டும் வந்துவிட்டோம், சிலுவைப் போர்கள் இங்கேதான் முடிகின்றன."

ஆக சலாஹுத்தின் இந்தால் அன்றும் தோல்வியைத்தான் சந்தித்திருப்பார்கள்.

அதாவது 151 வருடங்கள் நடந்து முடிந்து சிலுவைப் போர்களை, 9 நூற்றாண்டுகளுக்குப் பின் புதுப்பித்தார்கள். (O Jerusalem by Larry Collings and Domini que Lapierre)

இதனை உலகறிந்த பத்திரிகையாளராக இருந்து பின்னர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டு, இஸ்லாத்திற்குப் பெருந்தொண்டாற்றி LEOPED Agad (எ) முஹம்மத் அசத் அவர்கள், இப்படிக் குறிப்பிட்டார்கள்.

மேலை நாடுகள் அதாவது ஐரோப்பிய நாடுகள், முஸ்லிம் உலகை, சிலுவைப் போர்கள் என்ற கண்ணாடியின் வழியாகத்தான் பார்க்கின்றார்கள். (Islam at the Cross Roads)

இந்தப் பின்னணியில்தான் இப்போதைய நிகழ்வுகளைப் பார்க்க வேண்டும்.

இதே பின்னணியில்தான் நாம் ஜார்ஜ்புஷ் நவீன சிலுவைப்போர்கள் தொடக்கம் என்ற பிரகடனத்தையும், இப்போது ஜான் பெப்பர் என்பவரின் சிலுவைப்போர்கள் 2.0 என்ற போர்த் திட்டத்தையும் பார்த்திட வேண்டும்.

இப்போதைய சிரியாவின் நிகழ்வுகளை நாம் இவற்றிலிருந்து வேறுபடுத்திப் பார்த்தால் நாம் உண்மையைப் புரிந்துகொள்ள தவறிவிடுவோம்.

இங்கே நாம், அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் 2004 ஆம் ஆண்டுதான் மீண்டும் அமெரிக் காவின் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது அமெரிக்க அதிபர் புஷ் சொன்னார் This war will be taught for another sixty of Seventy years - அதாவது இந்த யுத்தம் இன்னும் அறுபது அல்லது எழுபது வருடங்களுக்கத் தொடர்ந்து நடக்கும்.

இந்த உரை, ஏதோ பொதுக்கூட்டத்தில் பேசப்பட்டதல்ல, அமெரிக்காவில் ஒரு அதிபர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அவர் ஓர் விஷன் இப்டேஸ்மெண்ட் என்ற அடுத்து நான் என்ன செய்யப்போகின்றேன் என்பதைச் சொல்லிட வேண்டும். அதில்தான் இந்த உண்மைகளைக் கக்கினார்.

அமெரிக்க அதிபர் புஷ்-இன் கணக்குப்படி பார்த்தால் இந்தப் போர்கள் ஆப்கானிஸ்தானில் தொடங்கி, ஈராக், சிரியா வழியாகத் தொடரும் போர் 2064 அல்லது 2074 வரைத் தொடர்ந்திட வேண்டும், தொடரும்.

இன்றைய அமெரிக்காவின் போக்குகளை மேலெழுந்த வாரியாகப் பார்ப்பவர்களுக்கு ஒன்று புரியும். அது 2000 முதல் 2008 வரை தொடர்ந்த போரில், புஷ் எங்கே விட்டாரோ அங்கே இருந்துதான், ஒபாமா தொடங்கினார், தொடர்ந்தார்.

2008-இலிருந்து தொடங்கி 2015 வரை ஒபாமா தொடர்ந்தார். 26 முறை முஸ்லிம் உலகின் மேல் குண்டுமழை பொழிந்தார். 2015-இல் டிரம்ப் தொடங்கி இருக்கின்றார். அடுத்து அமெரிக்க அதிபராக யார் வந்தாலும் இஃது தொடரும்

இவர்களின் இந்த வெறியையும் வேகத்தை யும் புரிந்துகொள்ளாமல் நாம் நமக்குள்ளேயே காரணங்களைத் தேடினால் 2064 வரை இவர்கள் செய்பவற்றை அதாவது இன்னும் 46 முதல் 56 ஆண்டுகள் வரை அரபுலகில் என்ன நடக்கும் என்பதைப் புரிந்து கொள்ளவே மாட்டோம்.

**அடுத்த இலக்கு துருக்கி**

இவர்கள் இஸ்லாத்தை துடைத்தெறிந்திட வேண்டும், அது அல்லாதபோது அதன் வளர்ச்சியை மட்டுப்படுத்திட வேண்டும். முஸ்லிம்களின் கைகளிலிருக்கும் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி அவர்கள் இஸ்லாத்தை வளர்த்து விடாமல் தடுக்க வேண்டும் என்றெல்லாம் திட்டம் போட்டு, ஆப்கானிஸ்தானை தாக்கினார்கள். ஈராக்-ஐ தாக்கினார்கள். அடுத்த இலக்கு சிரியா அல்லது ஈரான் என இலக்கு வைத்தார்கள்.

ஈரானை ஒரு தீவிரவாத நாடு என ஏற்கெனவே அறிவித்திருந்தார்கள். ஈரான் எந்த நிலையிலும் நாங்கள் தாக்கப்படுவோம் என்றால் அமெரிக்காவை எங்கள் ஏவுகணைகள் தாக்கிடும் என்றது மட்டுமல்ல உலகெங்கும் அமெரிக்கா வைத்திருக்கும் அத்தனை தளங்களையும் இராணுவத் தகர்த்திடுவோம் என்றது. அமெரிக்கா ஈரானை விட்டு தனது இலக்கை வேறு பக்கம் திருப்பியது. இந்நிலை யில் 2012 ஆம் ஆண்டில் அமெரிக்க ஈரான் மீது பறக்கவிட்ட உளவு பார்க்கும் ஆளில்லா விமானங்களை ஈரான் சந்தடிஇல்லாம், தன் நாட்டில் தரை இறக்கியது. (விரிவாக தகவல் களுக்கு பார்க்க வைகறை வெளிச்சம், பிப்ரவரி 2012)

அதே 2012 ஆம் ஆண்டில் தனது அணு ஆயுதபலம், அமெரிக்காவின் அணு ஆயுத பலத்தைப்போல், 3000 மடங்கு அதிகம் என்பதை உலகுக்கு அறிவித்தது. இதனை நமது நாட்டு அதாவது இந்தியாவின் அணு விஞ் ஞானிகளும் ஒப்புக் கொண்டார்கள். ஆக அமெரிக்கா, சிரியாவின் பக்கம் தன் கவனத்தை திருப்பியது, சிரியாவின் கபளீகரங்களுக்குப் பிறகு துருக்கியை தாக்கிட அமெரிக்காவும் பன்னாட்டுப் படைகளும், அதாவது ஐரோப்பிய நாடுகள் திட்டமிட்டிருக்கின்றன. இதற்காக அமெரிக்கா டாலர் 250 மில்லியனை ஒதுக்கி இருக்கின்றது. (Source : Front Line, March-16, 2018)

எதிர்வரும் நாட்களில் 250 மில்லியன் டாலர்களைக் கொண்டு, துருக்கியின் மீது தாக்குதல் நடத்தும்.

இன்றைய உலக அரங்கில் முஸ்லிம்கள் அவதிகளுக்கு உள்ளாகும் போதெல்லாம் அங்கே தலையிட்டு பிரச்சனைகளுக்குத் தீர்வுகளைத் தேடும் நாடாக துருக்கியும் அதன் அதிபர் ஏர்துக்கான் அவர்களும் இருந்து வருகின்றார்கள்.

மியான்மரில் முஸ்லிம்கள் இன சுத்திகரிப் பிற்கு ஆளானபோது மியான்மர் நாட்டுக்குச் சென்று நிவாரணங்களை வழங்கினார் (விரிவான தகவல்களுக்கு பார்க்க வைகறை வெளிச்சம்)

மியான்மர் முஸ்லிம்கள் பௌவுத்த தீவிர வாதிகளால் விரட்டப்பட்டு பல நாட்கள் கால் நடை யாகவே நடந்துசென்று வங்காள தேசத்தை அடைந் தார்கள். வங்காளதேசம் அவர்களை அகதிகாளக ஏற்றுக்கொள்ள மறுத்தது. அந்நிலையில் வங்கத்தின் ஆட்சியாளர்களைச் சந்தித்து, அந்த மக்களை ஏற்றுக்கொள்ளச் செய்தார் துருக்கியின் அதிபர் எருதுகான்.

அதேபோல் பாலஸ் தீனில் காஸா பகுதியில் பாலஸ்தீன முஸ்லிம்களை இஸ்ரேலியர்கள் அதாவது யூதர்கள் தாக்கியபோது அங்கே இளைஞர்களையும், பள்ளி சிறார் களையும் கத்தர் நாட்டையும், ஈரான் நாட்டின் ஆயுதங்கள், நுண்மான் நுழைபுலம் ஆகியவற் றையும் இணைத்து இஸ்ரேலின்மேல் அதிர்ச்சி யானதொரு தாககுதலை நடத்தினார்.

அத்தோடு இஸ்ரேல் வெல்ல முடியாத நாடு என்ற பிரம்மையை உடைத்தார். இறுதியில் அமெரிக்கா வழியாக ஐக்கிய நாடுகளின் சபையின் காலில் வீழ்ந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டது இஸ்ரேல். ஈரானிடம் ஆயும் ஏன் தந்தார்கள் என கேட்டபோது, இன்னும் தருவோம் என்ன செய்வீர் எனக் கேட்டார் ஈரான் அதிபர் முஹம்மத் அஹ்மத் நஜ்ரி

அதேபோல் கடந்த (2017) ரமழான் மாதத்தில் கத்தாருக்கு உணவுப் பொருட்கள் கிடைக்காதபோது அந்த உணவுப் பொருள் களை உடனே வழங்கிட முன் வந்தது, துருக்கி இந்தப் பணியில் ஈரானையும் இணைத்துக் கொண்டார் துருக்கி ஆட்சியாளர் தையூப் எருதுகான்.

இப்படி ஷியா-சன்னி வேற்றுமைகளை மறந்து முஸ்லிம் நாடுகள் பொதுப் பிரச்சனை களை அணுகி வெற்றிகளைக் குவித்து வருகின்றார். தையூப் எருதுகான் - துருக்கியின் தலைவர்.



**ஜெருசலேம் - இஸ்ரேல் தலைநகர்**

அண்மையில் ஜெருசலத்தை இஸ்ரேலின் தலைநகராக ஆக்கிடப் போகின்றேன் என கர்ஜித்தார் அமெரிக்க அதிபர் டிரம்ப். இதனை எதிர்த்து ஐக்கிய நாடுகள் சபையின் பொது அவையில் தீர்மானம் ஒன்றை டிசம்பர்-21, 2017-இல் கொண்டு வந்தன. துருக்கியும் ஏமன் நாடும் இதிலேயும், எர்துகான்-துருக்கியின் ஆட்சியாளர் ஆற்றிய பணி அலாதியானது.

இந்தத் தீர்மானத்தை அமெரிக்காவின் உதவிகளைப் பெறும் நாடுகள் ஆதரித்தால், அதாவது ஜெருசலேம் இஸ்ரேலின் தலைநகராக இருக்கக் கூடாது என வாக்களித்தால்,

நிச்சயமாக அமெரிக்கா உதவிகளை நிறுத்தும் என அறிவித்தார் அமெரிக்க அதிபர் டிரம்ப். அதனையும் கடந்து தீர்மானத்திற்கு ஆதரவாக 128 (நூற்று இருபத்தெட்டு) வாக்குகளைப் பெற்று வென்று காட்டினார். ஏர்டுதுர்கான் டிரம்புக்கு ஆதரவாக வெறும் எட்டு ஓட்டுகள் மட்டுமே கிடைத்தன.

இப்படி பொதுப் பிரச்சனைகளில் ஷியாக் களும், சன்னிகளும் ஒன்றாய் நின்று வென்று காட்டிடும்போது சிரியாவில் மட்டும் முஸ்லிம் களைக் கொலை செய்து கொண்டிருப்பார்களா?

**துருக்கி மீதான தாக்குதல் எப்படி?**

முஸ்லிம்களைப் பல்வேறு வகையிலும் ஒருங்கிணைத்து வெற்றியின் பக்கம் இட்டுச் செல்லும் துருக்கிதான் அமெரிக்காவின் அடுத்த இலக்கு.

இந்நிலையில் அடுத்த இலக்காக துருக்கியை மனதில் வைத்திருக்கும் அமெரிக்கா தன்னு டைய திட்டங்களைச் செயல்படுத்திட என்ன செய்கின்றது என்பதைப் பாருங்கள்...

துருக்கிக்கும் சிரியாவுக்கும் உள்ள எல்லைப் பகுதியில் குருதுகள் எனப்படும் குருது முஸ்லிம் களின் ஒருசிலரை அமெரிக்கா தூண்டிவிட்டு தங்களுக்கு ஒரு நாடு வேண்டும் என போராடிடப் பணிந்து வருகின்றது.

இந்தக் குருது இன மக்களின் மற்றொரு சாராரை கம்யூனிட்கள் தங்கள் பக்கம் இழுத்து ஈராக்கிலும் சிரியாவிலும் பிரச்சனைகளைச் செய்து வருகின்றார்கள். தேவைப்படும்போது இந்த மக்களை ஈராக்கிலும், சிரியாவிலும் தூண்டி விட்டுத் தங்கள் அபிலஷைகளை நிறை வேற்றிக் கொள்கிறார்கள் அமெரிக்கர்களும், ரஷ்யர்களும்

சதாம் ஹூசைன் ஈராக்-இன் அதிபராக இருந்த நாட்களில் இந்தக் குருது முஸ்லிம்களை சதாம் தாக்கினார். விஷ வாயுவை இந்த குருது முஸ்லிம்களுக்கு எதிராகப் பயன்படுத்தினார் என்றெல்லாம் குறைசொல்லி, குற்றம் சாட்டி பலமுறை ஈராக்-ஐ தாக்கினார்கள் 1990-களில்

ஆனால் அந்த தாககுதல்களின் உண்மை யான நோக்கம் ஈராக்-இன் தொழில் நகரங்களை யும், அணு நிலையங்களையும் தகர்ப்பதுதான். ஆனால் நாம் குருது முஸ்லிம்களைக் காப்பதில் சதாம் ஹூசைனைவிட அமெரிக்கா அலாதி யானது என எண்ணிடத் தலைப்பட்டோம்.

துருக்கியிலும் குருது முஸ்லிம்கள் வாழு கின்றார்கள். அவர்களை தனி நாடுகேட்டுப் போராடிடும் அளவுக்கு எருதுகான் - துருக்கியின் அதிபர்விடவில்லை. அவர்களை துருக்கியின் குடிமக்களாக ஆக்கிவிட்டார். அவர்களுக்கு துருக்கியில் நாடாளு மன்றத்தில் பிரதிநிதித்துவமும் கொடுத்துவிட்டார். இதனால் துருக்கியின் உள்வாழும் குருது முஸ்லிம்கள், துருக்கிக்குத் துரோகம் செய்வ தில்லை. அமெரிக்காவுக்கோ, ரஷ்யாவுக்கோ துணைபோக மாட்டார்க்ள.

ஆனால் அமெரிக்கா துருக்கி, சிரியா எல்லையோரத்தில் வாழும் குருது முஸ்லிம்களை மையமாகக் கொண்டு காய்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றது துருக்கியை கபளீகரப்படுத் திட.

இந்த வகையில் தனிநாடு ஒன்றை துருக்கி, சிரியா எல்லையில், குருதுகளுக்கு உருவாக்கித்





தருவதாக வாக்களித்து அங்கு போராளிகளை உருவாக்கிடத்தான் இப்போது டாலர் 250 மில்லியன்களை ஒதுக்கி இருக்கின்றது அமெரிக்கா.

இந்த 250 மில்லியன் டாலர்களைக் கேட்டுப் பெறும்போது அமெரிக்காவின் உளவுத்துறை "to Train and Equib Activates" குருது முஸ்லிம்களுக்குப் பயிற்சி கொடுக்கவும் ஆயுதபாணியாக ஆக்கிடவுமே என்று கூறியே வாங்குகின்றது. (Source : Front Line, March-16, 2018)

இதில் மிகப்பெரிய வேதனை எனன்வெனில் எந்தக் குருதுகளுக்கு - குருது முஸ்லிம்களுக்கு ஆசைக்காட்டி வருகின்றதோ அந்தக் குருது முஸ்லிம்களின் அமைப்பை (PKK) தீவிரவாத அமைப்பு எனச்சொல்லி அமெரிக்கா 2017-இல் தடை செய்தது. இந்த அமைப்பின் பெயர் பி.கே.கே. என்பதாகும். குருது மொழியில் அமைந்த இந்தப் பெயரை ஆங்கிலத்தில் Kurdish Workers Party குர்திஷ் ஒர்கர்ஸ் பார்ட்டி என்று அழைக்கின்றார்கள். குருதுகளின் தொழி லாளர் கட்சி" எனக் கூறுகின்றார்.

ஒராண்டுக்கு முன்னர் தான் தடை செய்த கட்சியை - அமைப்பைத்தான் இப்போது துருக்கிக்குத் தலை வலியை தர தயார் செய்கின் றனர் அமெரிக்கா உளவுத்துறையினர்.

தான் தீவிரவாத அமைப்பு என அழைத்த அமைப்பிற்குத் தானே ஆயுதமும் பயிற்சியும் தந்தால் உலக நாடுகள் தன்னை குறைகாணும் என்பதை உணர்ந்த அமெரிக்கா, இந்தப் பி.கே. கே.-க்கு ஒரு புதிய பெயர்-ஐ சூட்டியுள்ளது. அதுதான் PYD-பி.ஒய்.டி. இதனை ஆங்கிலத்தில் Democratic Union Party. இதனை YPG என்றும் அழைப்பர். ஜனநாயக ஒருமைப்பாட்டு கட்சி எனப்பெயர் மாற்றம் செய்திருக்கின்றது. (Front Line, March-16, 2018) இவர்களுக்கு உதவி செய்ய 2000 அமெரிக்கப் படைகள் நிற்கின்றன சிரியாவில்.

ஆனால் துருக்கி இந்த அமெரிக்க வலையில் குருது முஸ்லிம்கள் வீழ்ந்து விடாமல் பார்த்து வருகின்றது. அந்தக் குருது முஸ்லிம்களுக்கு ஆலோசனைகளை வழங்கி வருகின்றது. துருக்கி, சிரியா எல்லையோரத்தில் அமெரிக்கா உருவாக்கிய பயிற்சி தளங்களை தாக்கி அழித்து விட்டது. இந்தப் பயிற்சி தளங்களை வான் வெளி தாக்குதல் மூலம்தான் தகர்த்து வருகின் றது துருக்கி. இதனைப் பயன்படுத்தி சில (மிகக் குறைவான) ஊடகங்கள், சிரியாவில் துருக்கியும் குண்டு போடுகின்றது எனப்பேசி வருகின்றன. ஆனால் இதனால் அங்கே அமெரிக்க இராணு வத்தினர் எத்தனை பேர் கொல்லப்பட்டார்கள் என்பது தெரியவில்லை. (FL. March-16, 2018)

ஆக நடந்துகொண்டிருப்பது ஷியா-சன்னிப் பிரச்சனை அல்ல. ஒரு சர்வதேச சதியின் அரங்கேற்றம். அமெரிக்கா இதைப்பற்றி அதன் வழி மேலை நாட்டவர்களின் கலாச்சாரத் திணிப்பு. உண்மையான பார்வையும், தெளிவும்

பெறாத வரை நாம் நமக்குக் காட்டப்படும் காட்சிகள் நமக்குச் சொல்லப்படும் செய்திகள் இவற்றை நம்பியே நின்றால் உண்மையை உயிருள்ளவரையும் அறிந்திட மாட்டோம். இதில் துருக்கிக்கு இருக்கும் மிகப்பெரிய தலை வலி. தனது எல்லையோரத்தில் தயாராகும் இந்த குருதுகளோடு போரிட்டே ஆக வேண் டும் என்பதே!



நாம் நமது வைகறை வாசகர்களுக்கு ஒரு செய்தியை தொடர்ந்து சொல்லி வருகின்றோம். அது நீங்கள் எதைப் பார்க்க வேண்டும் என்று அவர்கள் அதாவது, உங்கள் எதிரிகள் முடிவு செய்கின்றார்களோ அதுவே உங்களுகக்குக் சொல்லப்படுகின்றது. நீங்கள் - எந்தச் செய்தி யைச் கேட்க வேண்டும் என்று அவர்கள் கருது கின்றார்கள், அதுவே உங்களுக்கு காட்டப்படு கின்றது. இவற்றின் மூலம் நீங்கள் எப்படிப் பட்டதொரு மனநிலையைப் பெற வேண்டும் என்பதையும் அவர்களே முடிவு செய்து விடுகின்றார்கள்.

**சில யதார்த்தங்கள்**

சரி இத்தனையும் நமக்குப் புரிந்த அளவுக்கு அங்கே முஸ்லிம்களைப் பிணங்களாக ஆக்கிக் கொண்டிருக்கின்றார்ளோ அவர்களக்குப் புரிந்திடவில்லையா?

உண்மையைச் சொன்னால், இவர்கள் பல்வேறு சிறைகளிலுமிருந்தும் சிரியாவுக்கு அனுப்பப்பட்டவர்கள் சவூதி அரேபியாவில் மரண தண்டனை பெற்ற சில ஆயிரம் கைதிகள், மூளைச் சலவைச் செய்யப்பட்டு, ஆயுதங்கள் வழங்கப்பட்டு, சிரியாவுக்குள் அனுப்பப்பட்டார்கள். இதை மிடில் ஈஸ்ட் மானிட்டர் என்ற இதழ் குறிப்பிட்டுள்ளது.

இதுதான் உண்மை யதார்த்தம் என்பதற்கான ஆதாரங்களையும் அது வழங்கியுள்ளது. இவர்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள எதையும் செய் வார்கள் என்பதே உண்மை.

ஆனால் இவற்றையெல் லாம் கடந்து சில முஸ்லிம் கள் - சிரியாவின் பூர்வீக குடிகள், சில முயற்சிகளை மேற்கொள்கின்றார்கள். அவர்கள் சில யதார்த்தங் களை நம்முன்னே வைக் கின்றார்கள். அவற்றை இங்கே தருகின்றோம்.

நாங்கள் இந்தப் போராளி குழுக்களிடம் பேசி வருகின்றோம். அவர்கள் போரை நிறுத்த வேண்டும் என்றால் எந்தக் குழுவும், தான் இப்போது இருக்கும் பகுதியைக் கடந்து இன்னொரு பகுதிக் குள் வந்திடக் கூடாது எனக் கூறிவருகின்றோம்.

ஏனெனில் ஒவ்வொரு பகுதியைய ஒரு போராளிக்குழு தன் கையில் வைத்திருக்கின்றது. இவர்கள் தங்கள் ஆதிக்கத்தை விரிவுபடுத்திட முயற்சிகளை மேற்கொள்ளும்போது இந்த போராளிகள் தங்கள் பிடியை விட்டுக்கொடுக்க மறுத்து சண்டையைத் தொடருகின்றார்கள். இவர்களை மட்டுப்படுத்தி வருகின்றோம்.

ஆனால் அமெரிக்காவில் உருவாக்கப்பட்ட குழுக்கள், இதில் உடன்பட மாட்டேன் என்கின்றன. இருப்பினும் பேசி வருகின்றோம். "மஹ்மூத்" என அறியப்படும் இந்த இளைஞர் நமது பிரண்லைன் நிருபர் விஜய் பிரகலாம்-இடம் இன்னொரு செய்தியை சொல்லி இருக் கின்றார்..

அதாவது நாங்கள் 2011 ஆம் ஆண்டு ஏற்படுத்திய எழுச்சி-அரபு எழுச்சி-வெற்றிதான். அதில் நாங்கள் வேலை வாய்ப்புகள், கல்வி

மருத்துவம் போன்றவற்றைத்தான் முதலில் கேட்டோம். அது அல்லாதபோது ஆட்சியாளர் பதவி விலக வேண்டும் என்றோம். ஆனால் அமெரிக்கா மொத்தப் பிரச்சனையும் வேறு பக்கம் திருப்பிவிட்டது.

முஸ்லிம் நாடுகளில் ஆட்சி மாற்றம் என்ற அமெரிக்காவின் திட்டத்தை முன்னே கொண்டு வந்து "Regim Change" எங்கள் போராட்டத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டது. உண்மையைச் சொன்னால், போராட்டத்தில் கனிந்த வெற்றியை பறித்து எங்கள் மக்களை அழித்து வருகின்றது.

**கலாச்சார சின்னங்கள் ஆய்வு**

அஷ்ஷாம் என்ற சிரியா இஸ்லாமியக் கலாச்சார சின்னங்கள் நிறைந்த நாடு! அதனை அமெரிக்கா தன்னுடைய கைப்பாவைகளை ஏவிவிட்டு தாக்கித் தகர்த்து வருகின்றது. அவர்களால் முடியாதவற்றை அமெரிக்க விமானங்கள் அல்லது இஸ்ரேலின் விமானங்களை ஏவி விட்டு அழித்துவிடுகின்றன.

ஆப்கானிஸ்தானை 1839 முதலே பிரிட்டன் பின்னர் ரஷ்யா பின்னர் அமெரிக்கா என கடந்த 170 ஆண்டுகளாகத் தாக்கிவந்தன. அவற்றின் விளைவாக இஸ்லாத்தின் அத்துனை கலாச்சார அடையாளங்களும் அழிக்கப் பட்டன. மலையும், பள்ளத்தாக்கும் பாய்ந் தோடும், நீரருவிகளும் கொண்ட நாடு ஒரு மயானமாகக் காட்சி தருகின்றது என்கின்றனர். அங்கு சென்று வருகின்றவர்கள். அதையேதான் ஈராக்கில் செய்து வந்தார்கள்.

ஈராக்-ஐ பொறுத்தவரை அமெரிக்கர்கள் 1990 முதல் தாக்குதலை நடத்தி வந்தார்கள். பின்னர் ஈராக்-ஐ நேரடியாக ஆக்கிரமித்தார்கள். 2015 வரை பல்வேறு பெயரிலும் தாக்குதலை நடத்தினார்கள். அங்கிருந்த இஸ்லாமியக் கலாச்சார தடங்களை அழித்தார்கள். அத்தோடு சியா, சன்னி பிரிவுகளைப் பெரிது படுத்தினார்கள்.

அத்தோடு சதாம் ஹூசைன் மெத்த சிரமத்தோடு பலாயிரம் பெண் விஞ்ஞானிகளை உருவாக்கி வைத்திருந்தார். அத்தனை பேரையும் அபூஹூரைப் சித்திரவதைக் கூடத்தில் வைத்து குரூரமாகக் கொலை செய்தது அமெரிக்கா!

இப்போது சிரியாவைக் கபளீகரப்படுத்தி வருகின்றார்கள். அங்குள்ள இஸ்லாமிய கலாச்சார தடங்களையும், இஸ்லாத்டதின் வரலாறு கூறும் தடயங்களையும் அழித்துக் கொண்டிருக்கின்றார்கள். இதில் பிளாக் வாட்டர் தீவிரவாதிகள் மிகவும் லாவகமாச் செயல்பட்டு வருகின்றார்கள்.

(அமெரிக்காவின் உருவாக்கமான இந்த பிளாக் வாட்டர் தீவிரவாதிகளைப் பற்றி சென்ற வைகறை வெளிச்சத்தில் விரிவாக கூறியுள்ளோம்)

இந்த இலட்சியங்களோடு அடுத்தடுத்து துருக்கியின் பக்கமும் திருமபிட இருக்கின்றார்கள். அங்கே நாம் குருது முஸ்லிம்கள் என்றும், சன்னி முஸ்லிம்கள் என்றும் பேசிடத் தலைப்பட்டால். இந்த மொத்த விவகாரத்தையும் புரிந்துகொள்ள இன்னும் பல தலை முறைகள் ஆகலாம்.

**போராட்டக் குழுக்கள்**

இவர்கள் அமெரிக்காவின் உருவாக்கம் என்பதை நாம் - (வைகறை வெளிச்சம்) தொடக்க நாள் தொட்டே தெளிவுபடுத்தி வந்தோம். இஃது இப்போது இன்னும் மிகவும் தெளிவாகி விட்டது.

இப்போது கிடைக்கும் தகல்கள் இவர்களில் ஒரு பகுதியினர் சவூதி சிறைகளில் வெளியே வர முடியாத தண்டனைகளைப் பெற்றவர்கள் என்பதும் தெளிவாகி இருக்கின்றது. சிலர் மரண தண்டனையைப் பெற்றவர்கள். மிடில் ஈஸ்டன் மானிட்டர் இதழில் இடம்பெற்ற ஆதாரங்களின் அடிப்படையில் விடுதலை இதழ் இதனை கூறுகின்றது. (விடுதலை, Middle East Monitor 10-3-2018 ஐ.எஸ்.ஐ.எல். உருவாக்கியதில் பிரிட்டன் பிரான்ஸ் ஆகியவையும் தங்கள் பங்கை ஆற்றி இருக்கின்றன) இவர்கள், ஷியா, சன்னி என்பதோடு சலபின்கள் என்றொரு புதிய பிரிவை முஸ்லிம்களுக்குள் ஏற்படுத்தி வருகின் றார்கள். இவர்கள் இப்போது சலபி ஜிஹாதிகள் எனப்பெயர்.

## Free Sriyan Army -
**சிரியாவின் விடுதலைப்படை**

இஃது 2011ஆம் அண்டில் சிரியாவில் ஏற்பட்ட மக்கள் எழுச்சியின் பின்னணியில்,

சிரியாவின் இராணுவத்திலிருந்து வெளியே வந்தவர்களால் உருவாக்கப்பட்டது. இப்போது இவர்கள் அமெரிக்காவைச் சார்ந்து நின்றிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள்.

அமெரிக்கா இவர்களையும் ஐ.எஸ். ஐ.எல்-ஐயும் நம்பித்தான் சிரியாவை சின்னா பின்னப் படுத்தி வருகின்றது. இனி ஒரு வேளை குருது களின் தேசியம் எனப்பேசும் குருது முஸ்லிம் களும் இவர்களின் கைகளில் சிக்கலாம்.

ரஷ்யாவும் இஸ்ரேலும் இனி கைக் கோர்க் கலாம். துருக்கியும் தொடர்ந்து ஈரானும் இவர் களால் துவம்சப்படுத்தப்படலாம். அல்லாஹ் பாதுகாப்பானாக!

**ஹிஸ்புல்லாஹ்**

மிகவும் புத்திசாலித்தனமாக செயல்பட்டுக் கொண்டிருந்த ஓர் அமைப்பு. இஸ்ரேலை ஆட்டிப் படைத்திட்ட அமைப்பு. இதுவும் இப்போது போர்க்களததில் புகுந்துவிட்டது. காரணம் இதன் ஆதிக்கத்திற்குட்பட்ட பகுதிக் குள் இதரப் போராட்டக் குழு வருவதை விரும்பவில்லை.

இப்படித்தான் நுஸ்ரத்-ஷபாப் என்ற பலக் குழுக்கள் பலப் பகுதிகளைக் கையில் வைத்திருக் கின்றன. இந்தப் பகுதியைக் கைப்பற்ற வரும் குழுக்கள்யாராகஇருந்தாலும்கவலைப்படாமல் போர்த் தொடுக்கின்றன. இப்படிப்பல குழுக் கள். இந்தக் குழுக்கள் அத்தனை பேரிடமும் அமெரிக்காவில் தயாராகும், உயர்ததர ஆயுதங் கள் தாரளமாக இருக்கின்றன. அமெரிக்காவுக்கு அளவிட முடியாத ஆயுத விற்பனை.

**இஸ்ரேல்**

இஸ்ரேலுக்கு ஒரு பெரும் திட்டம். அது அகண்ட இஸ்ரேலை உருவாக்கிட வேண்டும் என்பதே! இந்தத் திட்டத்தின் மிக முக்கியமான பகுதி முஸ்லிம்கள் அதிகமாக வாழ்ந்திடும் பகுதி. முஸ்லிம்கள் அதிகமாக வாழ்ந்திடும் தனது அண்டை நாடுகளில் குழப்பங்களை உருவாக்கிட வேண்டும். அதன்மூலம் தனக்குத் தேவைப்படும் இடங்களைக் குண்டு போட்டுத் தகர்த்திட வேண்டும். பின்னர் அந்த இடங் களை ஆக்கிரமித்திட வேண்டும். காலப்போக் கில் அங்கே யூதர்களைக் குடியேற்றிட வேண்டும். இந்தத் திட்டம் இஸ்ரேல் உருவாக் கப்பட்ட நாட்களில் (1948 ஆம் ஆண்டு முதல் தொடங் கப்பெற்று, இன்றளவும் தொடர்ந்து கொண்டி ருக்கின்றன. இன்னும் ஒரு நூற்றாண் டுக்குத் தொடரும்.

சிரியாவைப் பொறுத்தவரை, அதாவது சிரியாவைத் தாக்கித் தகர்த்திட வேண்டும். அதன்மூலம் அகண்ட இஸ்ரேலை நாம் உருவாக்கிட வேண்டும் என்ற திட்டம் 10 ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்டது. அமெரிக்காவால் அங்கீகரிக்கப்பட்டு, அதற் கான நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது. (Front Line, March-16, 2018)

2007-இல் ஒரு முறையும், 2017-இல் ஒரு முறையும் சிரியாவின் அணு ஆயுத பரிசோத னைக் கூடங்களிலும், அணுமின் நிலையங்களி லும், இஸ்ரேல் குண்டு மழைகளைப் பொழிந் துள்ளது. இப்போதுள்ள குழப்பங்களைப் பயன் படுத்தி சிரியாவை உடைத்தே ஆக வேண்டும் என நிற்கின்றது இஸ்ரேல் (Front Line, March-16, 2018)

இப்போது சிரியாவில் நடந்துகொண்டிருக் கும் குழப்பங்களைப் பயன்படுத்தி, சிரியாவின் இராணுவத் தளங்களையும், தளவாடங்களையும் அழித்து விடுகின்றது இஸ்ரேல். இதன்மூலம் இந்தக் குழப்பங்கள் முடிந்த பின்னரும், சிரியா இராணுவ பலமற்றதாக இருக்கும்.

2018 பிப்ரவரி இரண்டாவது வாரத்தில் பல இஸ்ரேலிய (F16) எஃப் 16 ரக போர் விமானங்களை சிரியா இராணுவம் சுட்டு வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது.

இங்கே நாம் கவனிக்க வேண்டியது என்ன வெனில் இஸ்ரேல் உருவாகிய நாள்முதலே சிரியா இஸ்ரேலை எதிர்ப்பவர்களுக்குப் பெரிய அளவில் உதவி செய்து வந்திருக்கின்றது என்பதாகும்.

இதனால்தான் அகண்ட இஸ்ரேல் கனவுக்கு சிரியா பெரும் தடை எனக் கருதுகின்றது இஸ்ரேல். ஆகவே சிரியயவின் இராணுவ தளங்களையும் தளவாடங்களையும் இப்போது அழிக்க தொடர் தாக்குதல்களை நடத்தி வருகின்றது.

- MGM

மக்கள் தொகையில் அரைவாசிக்கும் அதிக மானோர் அகதிகளாக்கப்பட்டு விட்டார் கள். லட்சக்கணக்கானோர் சொல்லப்பட்டுள் ளார்கள். இருந்தபோதிலும் இது வரையில் எந்தத் தீர்வும் எட்டப்படவில்லை. பிரச்சனை இன்னும் முடிவுக்கு வரவில்லை. சிரியாவின் உள்நாட்டு யுத்தத்திற்கு ஐ.நா.வின் புள்ளி விவரப்படி இதுவரை 2,50,000-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

76 லட்சத்திற்கு அதிகமானோர் அகதிகளாக் கப்பட்டுள்ளனர். அகதிகளாக்கப்பட்ட மக்கள் அண்டை நாடுகளிலும் பிற நாடுகளிலும் தஞ்சம் அடைகிறார்கள். இவர்கள் எங்கு சென்றபோதிலும் அகதிகள் என்பதே இவர் களின் அங்கீகாரம் இப்படிக் கோரமான நிலை சிரியாவின் உள்நாட்டு யுத்தம் தன்னுடைய ஐந்தாவது வருடத்தைச் சந்திக்கிறது.

**அமெரிக்காவும் ரஷ்யாவும் போரா? போட்டியா?**

சிரியாவின் உள்நாட்டு யுத்தத்தில் அமெரிக்கா ஒருபுறம் ரஷ்யா மற்றொரு புறம் இவர்களிடையே நடக்கும் போட்டியே 20-ஆம் நூற்றாண்டின் இறுதிவரை "Cold War" பனிப்போர் என்று அழைத்தார்கள். அதன் பெயரில்தான் போர் இருந்ததே தவி இரு நாடுகளும் ஒருபோதும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில்லை. ஏன் உலக மகா யுத்தத்தின் போதும் கூட இவர்கள் களம் கண்டதில்லை.

ஒன்று அமெரிக்கா ஆக்கிரமிப்பு செய்திடும் இடங்களில் எதிர்த்து நிற்கும் அணிக்கு ரஷ்யா ஆதரவு தரும். அல்லது ரஷ்யா ஆக்கிரமிப்பு செய்திடும் இடங்களில் தீர்த்திடும் அணிக்கும் அமெரிக்கா ஆதரவுத் தரும். ஆதரவும் தரும் அணி வெற்றி பெற்றால் பிறகு இரு நாடுகளும் தங்களின் ஆதிக்கத்தை நிலை நிறுத்திடும் முயற்சிகளை மேற்கொள்ளும்.

ஆக இங்கு அமெரிக்கா மற்றும் ரஷ்யா இடையே நடப்பது போரல்ல போட்டியே அந்த போட் தாங்கள் விரும்பும் கிறிஸ்தவ கலாச்சாரத்தை இந்த உலகில் நிலை நாட்டிய பின், இந்த உலகம் யாருடைய ஆதிக்கத்தில் இருந்திட வேண்டும் என்பதே...

**ஹண்டிங்டனின் நாகரீகங்களின் மோதல் மற்ற உலக ஒழுங்கின் மறுசீரமைப்பு...**

அமெரிக்காறிவிற்கும் மேலை நாடுகளுக்கும் நீண்ட கால திட்டத்தை வரைந்து தந்த நிபுணர் தாம் சாமுவேல் ஹண்டிங்டன். இவருடைய திட்டத்தின் பெயர்தான் "Clash of Civilistions" நாகரிகங்களின் மோதல்கள். இவருடைய இந்தத் திட்டம் இப்படி பிரகடணப்படுத்து கிறது. இந்த உலகை ஒரே கலாச்சாரத்தின் கீழ்

# அமெரிக்க, ஐரோப்பிய
## சதிகள் இன்னும் விவரமாக



கொண்டு வந்திட வேண்டும். அந்தக் கலாச் சாரம் மேலை நாட்டு கலாச்சாரமாக தான் இருந்திட வேண்டும். அதை உலகெங்கும் நிலை நாட்டிட வேண்டும். இதை இப்படிக் குறிப்பிடுகிறார்.

Western Civlisation is civilisation all other civilisations are uncivilisation. Therefore to be annihilated.

அதாவது, "மேலைநாட்டு நாகரிகமே நாகரிகம். மற்றெல்லாம் அநாகரிகம். அவை அழிக்கப்பட வேண்டியவை" (Source L Clash of Civilisation and Remaking of worlds)

ஆகவே, நடந்து கொண்டிருப்பது நாகரி கங்களின் மோதல் என்றொரு பிரம்மையை ஏற்படுத்துகிறார்கள். ஆனால் உண்மையில் யூதர்களின் கைக்குள் இருக்கும் கிறிஸ்தவத்தை அதன் கலாச்சாரத்தை உலகெங்கும் நிலை நாட்டிட வேண்டும் என்பதே இதன் அடிப் படை அம்சம்.

**தடையாக இருக்கும் முஸ்லிம்கள்**

கிறிஸ்தவ கலாச்சாரத்தை உலகெங்கும் நிலை நிறுத்துவதற்கு மாபெரும் தடையாக இருப்பது முஸ்லிம்கள்தாம். எனவே, இந்த முஸ்லிம்களை அழித்திட வேண்டும், முஸ்லிம் களை இந்த உலகில் இல்லாமல் ஆக்கிட வேண்டும் என்பதை வெளிப்படையாகவே கூறுகிறார் ஹண்டிங்டன்.

அப்படி ஏன் செய்திட வேண்டும் என்பதற்கு காரணத்தையும் கூறுகிறார். ஏனெனில் உலகில் வேகமாக வளர்ந்து வரக்கூடிய மதம் இஸ்லா மாகத்தான் இருக்கின்றது. முஸ்லிம்கள் இஸ்லாமிய நாகரிகத்தை தான் விரும்புகின்றனர். அதற்காக முயற்சிகளை மேற்கொள்கிறார்கள்.

எனவே இந்த நிலை நீடித்தால் 2025-இல் எல்லா சமூகங்களைக் காட்டிலும் முஸ்லிம் சமூகத்தில்தான் இளைஞர்கள் அதிகமாக இருப் பார்கள். அந்த இளைஞர்கள் இந்த மேலை நாட்டவர்களை பரீ வாங்கிட வேண்டும், இஸ்லாத்தை நிலை நாட்டிட வேண்டும் என்ற துடிப்போடு இருப்பார்கள்.

So the war should start in the woombs of Muslim women

எனவே இந்த யுத்தம் முஸ்லிம் பெண்களின் கருப்பையில் இருந்து தொடங்கிட வேண்டும்.

அதாவது முஸ்லிம் பெண்கள் கருத்தரிக் காமல் இருந்திடச் செய்ய வேண்டும். ஒரு வேளை அப்படிக் கருதரித்து பெற்றிருந்தால் அந்த குழந்தையைப் பருவமடையும் முன் கொலை செய்திட வேண்டும்.

**திட்டத்திற்கு தலைமை தாங்கும் அமெரிக்கா**

ரஷ்யாவின் ஆக்கிரமிப்பை எதிர்த்து போர் செய்த ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்கள் பெற்ற வெற்றி, அமெரிக்காவையும் மேலை நாடுகளை யும் கதிகலங்கச் செய்தது. எங்கே உலகத் தலைமை அதாவது உலகை வழிகாட்டும் கொள்கையாக இஸ்லாம் ஆகிவிடுமோ என அஞ்சினார்கள். அதன் விளைவே ஹண்டிங்டன் திட்டம். இந்தத் திட்டத்தை அடிப்படையாக கொண்டே அமெரிக்காவும் மேலை நாடுகளும் செயல்படுகின்றனர். மேலை நாடுகளுக்கு அமெரிக்காவே தலைமை ஏற்று நிற்கின்றது. அதை தனது புதிய நூற்றாண்டிற்கான திட்டத் தின் முன்னுரையில் இப்படிக் கூறுகிறது.

The American leadership is good both for America and the world and that such leadership requires military strength diplomatic energy and commitment to moral principles.

அதாவது, அமெரிக்காவின் தலைமையே, அமெரிக்காவிற்கும் உலகிற்கும் மிகவும் நல்லது. இதனால் இந்த தலைமைக்கு ராணுவ பலம், இராஜ தந்திரம், பண்பாடு ஆளுமை இவை தேவை.

(Source : The project for new americal century as quoted by Peter Marshalon in Afghanistan as Army empires. Page No.99)

**அமெரிக்காவின் அடாவடித்தனம்**

இதன் பின்னணியில்தான் இரட்டைக் கோபுரத்தை இவர்களே தாக்கிவிட்டு இதற்கு ஆஃப்கானிஸ்தான் தான் காரணம் என்றார்கள். தாக்குதல் முடிந்து மூன்றாவது நாள் ஜியார்புஷ் இப்படிக் கூறினார்.

நவீன சிலுவை யுத்தம் தொடங்கிவிட்டது என்றார். நடப்பது சிலுவை யுத்தம்தான் என்பதை தெளிவுபடுத்தினார். இதனை அமெரிக்காவின் வெளி விவகாரத்துறை

செயலர் கண்டலோசா ரைஸ் ஊர்ஜிதம் செய்தார். பின்னர் அத்துமீறி ஆஃப்கானிஸ்தானினுள் புகுந்து தன்னுடைய ஆத்துணை அடாவடித் தனங்களையும் கட்டவிழ்த்துவிட்டார்கள்.

2004-ல் ஜார்ஜ்புஷ் மீண்டும் பதவியேற்கும்போது இப்படிக் கூறினார். "It will be fought for another 60 or 70 years" அதாவது இன்னும் 60 அல்லது 70 வருடங்களுக்குச் சண்டை இடுவோம். அதாவது 60 அல்லது 70 வருடங்களில் முஸ்லிம்களை உலகில் இல்லாமல் ஆக்கிடுவோம் என்பதே இதன்பொருள்.

**இரையான முஸ்லிம்கள்..**

அதை செயல்படுத்தும் வண்ணம் இவர்கள் ஈரான், ஆஃப்கானிஸ்தானிலும் கொன்று குவித்த அப்பாவி முஸ்லிம்கள் ஏராளம். 2003-இல் அமெரிக்கா ஈராக்கினுள் புகும் பொழுது "Cluster Bomb" என்ற குறைந்த அணுசக்தி கொத்து குண்டுகளை பொழிந்தார்கள். அதிலிருந்து வெளிப்பட்ட நச்சு வாய்வை கர்ப்பிணிப் பெண்கள் சுவாசித்தால் பிறக்கும் குழந்தைகள் "Deformed" உருக்குலைந்த நிலையில் பிறக்கும் பல குழந்தைகள் ஈராக்கில் அப்படிதான் பிறந்தன. அந்த கொடூரமான காட்சிகளை காணொளி வழி நாமம் காணச் செய்தோம்.

இன்னும் ஈராக்கிலும், ஆஃப்கானிஸ்தானிலும் தீவிரவாதத்தின் பிறப்பிடங்கள் என்று கூறி பள்ளிக் கூடங்களின் மீது குண்டு மழைகளை பொழிந்தார்கள். இவர்கள் பொழிந்த குண்டுகளுக்கு லட்சக்கணக்கான குழந்தைகள் இறையானார்கள். இப்படிக் கடந்த 20 ஆண்டு களாக தீவிரவாதத்திற்கு எதிராக யுத்தம் செய் கிறோம் என்று இவர்கள் முஸ்லிம் நாடுகளில் கொலை செய்த அப்பாவி முஸ்லிம்கள் 40 லட்சத்தையும் தாண்டுகிறது.

(Source : www.middleceasteye.net/columsns/unworthy vicitims/western/wars/have killed-four-million - muslim 1990-39149394)

**தோல்வி**

இப்படித் தன்னால் இயன்ற அத்துனை தீவிரவாதங்களையும் செய்த பின்னும் இரு நாடுகளையும் இவர்களால் வெற்றிகொள்ள இயலவில்லை. காரணம் தன் உயிரையும் துச்சமாக மதித்து இந்த அடக்கு முறைகளை எதிர்த்து அல்லாஹ்வுடைய பாதையில் போராடி கொண்டிருக்கும் முஜாஹித்கள் காட்டிய வீரம், தொடுத்த தாக்குதல்கள் தங்களின் தோல்வியை இவர்களே ஒத்துக் கொண்டார்கள்.

அமெரிக்காவின் தோல்வியைப் பற்றி மேலும் படிக்கவும் (வைகறை வெளிசசம், மார்ச் 2015)

**மற்றொரு யுக்தி**

அமெரிக்காவும், மேலை நாடுகளும் தாங்களே களத்தில் இறங்கி தங்களின் திட்டத்தினை செயல்படுத்திட வேண்டும் என்பதில் தோல்வியடைந்து விட்டார்கள். எனவே தன்னுடைய மற்றொரு யுக்தியை முஸ்லிம் நாடுகளில் கையாளுகிறார்கள். அது பின்வரும்

"Although Huntingtohns work dealt extensively with the Muslim world, he paid little attention to its deveristy. For example the conflict between Shia and Sunni or to the effect to Muslim migration on Europe. Both of these intra-civilisational problems have intensifled since huntingon launched this theory"

"ஹண்டிங்டன், முஸ்லிம் உலகில் தன்னுடைய திட்டத்தை செயல்படுத்த மேற்கொண்ட



நடவடிக்கை மிகவும் ஆழமானது. விரிவானது, அவருடைய கவனம் முஸ்லிம் உலகில் ஏற்பட்டிருக்கும் வேற்றுமையை நோக்கி இருந்தது. உதாரணமாக முஸ்லிம்களிடம் உள்ள ஷியா-சுன்னி பிரச்சினை மற்றும் முஸ்லிம்கள் ஐரோப்பாவில் குடி பெயர்வதினால் ஏற்படும் விளைவுகள் இந்த இரண்டு உள் நாகரீக பிரச்சனைகளும் ஹண்டிங்டன் தன்னுடைய கோட்பாட்டை வெளியிட்டபின் தீவிரமடைந்து விட்டது.

### ஹண்டிங்டனின் திட்டமும் முஸ்லிம் நாடுகளில் யுத்தமும்

இவர்கள் போட்ட திட்டங்கள் தான் இதுவரை முஸ்லிம்களில் நடந்து கொண்டிருக்கின்றன. 1979-இல் ஈரானில் அமெரிக்காவை அடித்து விரட்டி விட்டு அங்கு நிலை கொண்டிருந்த மன்னர் ஷாவுடைய ஆட்சியை வீழ்த்தி ஈரானை ஒரு இஸ்லாமிய குடியரசு அறிவித்தார் புரட்சி இயக்கத்தவர் அப்துல்லாஹ் கொமய்னி அவர்கள். இஸ்லாமிய குடியரசு என்றவுடன் பொறுக்க முடியவில்லை அமெரிக்காவால். தங்களுடைய மற்றொரு யுக்தியை கையாண்டார்கள். தனது ஆதரவை தருகிறோம் கூறி ஏவிவிட்டார்க்ள். ஈராக்கின் ஆட்சியாளர் சதாம் அவர்களை யுத்தம் மூண்டது.

1980-ல் தொடங்கிய ஈராக் யுத்தம் அன்றைக்கும் ஷியா-சுன்னி மோதாகவே பேசப்பட்டது. ஆனால் யுத்தத்தின் பின்புலத்தில் அமெரிக்காவும் பல மேலைநாடுகளுமே நின்றன. பிறகு சதாம் உசேன் இவர்களின் பிரதான எதிரியாக போனது உலகறிந்த செய்தி. இப்போது மோதல்களை ஏற்படுத்திடும் யுக்தியே மீண்டும் கையாளப்படுகிறது.

### குண்டு வெடிப்புகள்

ஒருபுறம் சிரியா மற்றும் இதர முஸ்லிம் நாடுகளில் ஷியா முஸ்லிம்கள் குழுமி வாழும் இடங்களிலும், ஜூம்ஆ தொழுகையின்போது ஷியா பள்ளிவாசல்களில் பகுதிகளிலும் குண்டு வெடிப்பு சம்பவங்கள் நிகழ்ந்தன. இதில் ஏராளமான ஷியா முஸ்லிம்கள் உயிரிழந்தார்கள். இந்த சம்பவங்கள் நிகழ்ந்ததற்கு காரணம் சன்னி தீவிரவாதிகள்தான் என்றும் சன்னி ஃபிஸ்டு திவிரவாதிகள்தான் என்றும் எந்த அடிப்படை ஆதாரமுமின்ற கூறினார்கள். மேலைநாட்டவர்களும் அதன் அடிவகுப்பு மீடியாக்களும். ஆனால் இந்த சம்பவங்களின் பின்புலத்தில் சி.ஐ.ஏ. மொசாத், எம்.ஐ.6 போன்ற இவர்களின் உளவு அமைப்புகளின் கைவண்ணமே காணப்பட்டது.

(Source : www.almanar.com.ibienglishla details.php>?ctd+55329&cid=31&promval=1)

(www.kashmirwatch.com/news/print.php/2012/o4/21/external-secre-agencies-behind-sectarian-terrorism.phtml)

எனவே இப்போது பெரும்பான்மை சன்னி முஸ்லிம்கள் சிறுபான்மை ஷியாக்களுக்கு ஆபத்து என்றொரு பிரம்மையை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இவர்களின் இந்த மாய வலையில் ஈரானும், ஹிஸ்புல்லாவும் சிக்கியுள்ளது.

### கிளர்ச்சி

மற்றொரு புறம் ஈராக்கில் நூர்-அல்-மாலிகி எனும் தனது ஏஜெண்டை ஏவி அப்பாவி சன்னி முஸ்லிம்களை சிறை பிடித்தார்கள். அவர்கள் மீது அடக்குமுறைகளை ஏவிவிட்டனர். சிரியாவின் ஆசாத்தின் அடக்குமுறைகைள எதிர்த்து வெகுண்டு எழுந்த கிளர்ச்சி குழுக்களுக்கு ஆரம்பத்தில் பயிற்சி அளித்து ஆயுதங்களை அள்ளித் தந்தார்கள். அவர்களிடம் இந்த அடக்குமுறைகளுக்கும் அநியாயங்களுக்கும் ஷியா முஸ்லிம்கள்தான் காரணம் என்று சந்தடி சாக்கில்பதிய வைத்து விட்டார்கள்.

ஷியா-சன்னி மோதலுக்கு ஆழமான அடித்தளம் இட்டிருக்கின்றது. C.I.A., MOSSAD, MI6, (SIS) போன்ற உளவு அமைப்புகள், இதில் ரஷ்யாவின் உளவு அமைப்பு FIS (KGB) இவர்களுக்கு நிகராவே வேலை செய்துள்ளது. இவர்களின் இந்த சதி வலையில் பல அமைப்புகள் வீழ்ந்தன. சில இஸ்லாமிய இயக்கங்கள் மட்டுமே மிஞ்சின. ஆக இங்கும் ரஷ்யாவும், மேலை நாடுகளும் ஹண்டிங்டன்னின் திட்டத்தையே செயல்படுத்துகின்றது.

(Source:infowars.com/arab-league-report-provi derevidence-cta-mossad-mig-behind-vto-in-syria/

http://m.en.delfi.it/central-eastrain-peuropearticle.php?id=66856642)

இன்ஷா அல்லாஹ்.

**-இம்தியாஸ் அஹமத்**

# வஞ்சிக்கப்படும் சிறுபான்மை சமூகம்

சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சகம் (இந்தியா) அல்லது சிறுபான்மையினர் விவகாரத் துறை அமைச்சகம் (Minstry of Minority Affairs), இந்திய அரசால் 2006ல் ஏற்படுத்தப்பட்ட அமைச்சகம் ஆகும். இந்த அமைச்சகமே சிறுபான்மை மக்களின் நலன்களை காக்கும் இந்திய அரசின் உச்சகட்ட அமைப்பாகும். இந்திய சிறுபான்மையினருள் இசுலாமியர், சீக்கியர், கிறித்தவர், பௌத்தர், பார்சி மற்றும் சமணர் ஆகியோரும் அடக்கம்.

சிறுபான்மையினரின் நலன் காக்க மற்றும் வாழ்வாதாரத்தை முன்னேற்ற ஒவ்வொரு ஆண்டும் இதற்காக ஒரு தொகை ஒதுக்கப்படுகிறது. சிறுபான்மையினருக்கு கல்வி உதவித்தொகை, சுய தொழில் செய்ய பயிற்சி, மகளிர் முன்னேற்றம், கலவரத்தை தடுத்தல், அதற்கு காரணமானவர்கள் மீது வழக்கு பதிவு செய்தல், பாதிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு, உதவி செய்தல் போன்ற பல செயல்கள் இந்தத் துறையின் கட்டுப்பாட்டில் அடங்கும்.

கடந்த சில வருடங்களாக சிறுபான்மையினருக்கு எதிராக நடக்கும் வன்முறை வெறியாட்டம் எந்த அளவில் உள்ளது என்பதை தினசரி நாளேடுகள் பதியாத நாளே இல்லை என்று சொல்லலாம். ஆனால் அவர்களுக்காக உதவ வேண்டிய சிறுபான்மை அமைச்சகத்தின் செயல்பாடு எந்த அளவில் உள்ளது என்பது கடந்த இரண்டு ஆண்டுகளின் நிதி அறிக்கையை பார்த்தாலே தெரியும்.

2016-17ம் ஆண்டில், இந்த துறைக்கு 3827.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் எவ்வளவு தொகை செலவு செய்யப்பட்டது என்ற கேள்வியை தகவல் அறியும் சட்டத்தின் மூலம் கேட்டதற்கு, இதில் 3061 கோடி செலவு செய்யப்பட்டதாகவும் மீதம் உள்ள 750 கோடியை சேமிப்பு என்று கணக்கு காட்டப்பட்டுள்ளது.

காரணம், எந்த மாநிலமோ, அரசு சாரா அமைப்போ அல்லது அரசின் திட்டங்களை செயல்படுத்தும் அமைப்போ அரசுக்கு எந்த கோரிக்கையும் வைக்கவில்லை என்று கூறப்பட்டுள்ளது.

இதே அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள வக்பு வாரியத்தின் சொத்தை மீட்க ஏன் இந்த தொகையை ஒதுக்கியிருக்கக் கூடாது என்று கேள்வி எழுகிறது. நாளுக்கு நாள் சாகும் உத்தர பிரதேச மாநிலத்தின் முஸ்லிம்களுக்கு இன்னும் மறுவாழ்விற்கு வழி செய்யவில்லை. கலவரங்கள் நாளுக்கு நாள் அதிகம் ஆகி கொண்டிருக்கும் நிலையில் அவர்களுக்கு உதவ வேண்டிய அமைப்பின் செயலற்ற தன்மை வன்முறை தூண்டும் பாசிஸ்டுக்கு வலுசேர்க்கும் விதமாய் உள்ளது.

இந்த அமைப்பின் 2017-18 ஆண்டின் செயல் நகைப்பாகவே உள்ளது. இந்த குறிப்பிட்ட காலத்தில் 4195.48 கோடி ஒதுக்கப்பட்டதாகவும் அதில் 2791.83 மட்டுமே செலவிடப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

1403.65 கோடி செலவு செய்யப்படவில்லை, இது இதற்கு முந்தய ஆண்டைவிட இரண்டு மடங்கு அதிகமாகும்.

பட்ஜட்டில் ஒதுக்கீடு செய்வது போல் செய்துவிட்டு, அந்த துறையையே செயல் படுத்தாமல் நீர்த்துப்போக செய்கின்றது இந்த பாசிச அரசு.

மேலும், எந்த மதத்தவற்கு எவ்வளவு தொகை செலவு செய்தீர்கள் அவர்கள் வாழ்வாதாரத்தை முன்னேற்ற என்று கேள்வி கேட்டால் - அது பற்றி தகவல் இல்லை என்று சொல்லும் அமைச்சகத்தின் செயல் நகைப்பாகவே உள்ளது..

வெளிப்படைத்தன்மை இல்லாத இடத்தில் ஊழல் மலிந்து கிடக்கும் என்பதற்கு மாற்று கருத்து இருக்க முடியாது. சிறுபான்மையினரை காப்பது அரசின் கடமை மேலும் இது ஒரு சர்வதேச சட்டமும் ஆகும், இதை அரசு கவனம் செலுத்தி செய்ய வேண்டும்.

- அபுதாஹிர்



# தொடரும் சிலுவை யுத்தம் 2.0

> அன்பார்ந்த வாசகர்களே!
> இன்று முஸ்லிம் உலகை புரிந்துகொள்ள நீங்கள் இன்றைய குழப்பங்களின் முந்தைய வரலாற்றைத் தெரிந்திட வேண்டும். இன்றைய குழப்பங்கள் திடுதிப்பென வந்தவை அல்ல. இஸ்லாத்தின் மீது பன்னெடுங்காலமாகத் தொடரப்பட்டு வரும் போரின் தொடர்ச்சி...

இவை கி.பி. 624-இல் நாம் ஜெருசலத்தை கையகப் படுத்திய நாட்களிலிருந்து தொடக்கம். இதைச் சொல்வது நாமல்ல பன்னெடுங்காலமாக நம்மீது போர் தொடுத்துக் கொண்டிருக்கும் நமது எதிரிகள் சொல்வது. ஜெருசலத்தை மீண்டும் கையகப்படுத்திட அன்று தொடங்கிய சிலுவைப்போர் இன்னும் முடியவில்லை என்கின்றார்கள்.

*1095*-இல் போப்அர்பண் II அவர்களால் தொடங்கப் பெற்று, *1247*-இல் முடிந்த போர்களை சிலுவைப் போர்கள் என அழைத்தார்கள். *152* ஆண்டுகள் தொடர்ந்து நடந்தவை. இவை *9* பிரிவுகளாக நடந்தன.

*2001*-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் *11*-ஆம் நாள் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்டன. அதனை தாக்கியவர்கள் முஸ்லிம்கள் எனக்கூறி பழியை முஸ்லிம்கள் மேல் போட்டார்கள் அமெரிக்கர்கள்.

ஆப்கானிஸ்தானை நோக்கி இலக்கு அமைத்தார்கள். *2001* செப்டம்பர் *13*-ம் நாள் அன்றைய அமெரிக்க அதிபர் Modern Crusade have Started - நவீன சிலுவைப் போர் தொடங்கிவிட்டது எனப் பிரகடனப்படுத்தினார்.

*2012*- ஆம் ஆண்டில் ஜான்பெப்பர் என்ற அமெரிக்க வெளிவிவகாரத்துறையின் இணை இயக்குநர் நடந்து கொண்டிருப்பது சிலுவைப்போர் *2.0* எனப் பெயரிட்டார். அதாவது *1095*-இல் தொடங்கி *1247* வரை



உருவாக்கிட வேண்டும். அதன் மூலம் முஸ்லிம்களை உலகம் வெறுக்கும்படி செய்திட வேண்டும் என்பது எங்களின் திட்டம்.

அமெரிக்கர்களின் (அதாவது இரண்டாவது சிலுவைப்போரை திட்டமிட்டவர்களின் திட்டம்) இந்தப் பொறுப்பை "பாக்ஸ் நியூஸ்" "Fox News" என்ற நிறுவனம் ஏற்றுக்கொண்டது.

நடந்தவை மொத்தம் 9 சிலுவைப்போர்களையும் சிலுவைப்போர் 1.0 என்கின்றார். இப்போது அமெரிக்கா நடத்திக் கொண்டிருப்பது சிலுவைப்போர் 2.0 என்கின்றார். இந்த சிலுவைப்போர் 2.0 வை அமெரிக்கர்களும் மேலை நாட்டவர்களும் எப்படி நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களை ஆட்டிப் படைத்துக் கொண்டிருப்பவை எவை? என்பன வற்றையும் அவர்களின் திட்டங்களையும் பட்டியல் போடுகினறார். அதனை சுருக்கமாக இங்கே தருகின்றோம்.

## இஸ்லாமே இலக்கு - TARGET ISLAM

உலகின் இரண்டாவது பெரிய மார்க்கம் இஸ்லாம். அது உலகில் மேலும் வளர்ந்து விடாமலும், உலக மக்களிடம் ஆதிக்கம் செலுத்திவிடாமலும், தடுத்துவிடுவதே எங்கள் இலக்கு. இதனால் உலகெங்கும் வாழும் மக்கள் இஸ்லாத்தையும், முஸ்லிம்களையும், வெறுக் கவும், பகைக்கவும் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் வாழும் மக்கள் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும், அத்துனை வெறுப்போடும், காழ்ப் போடும் கசப்போடும் இருக்கின்றார்கள். இந்தக் கோபம் தணிந்துவிடாமல் பார்த்துக் கொள்கின்ற கண்காணிக்கின்ற பொறுப்பை பல தனியார் அமைப்புகளும் ஆய்வு நிறுவனங் களும் பார்த்துக்கொண்டன.

ஆமாம், செப்டம்பர் 11, 2001 ஆம் அண்டு அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்டன. இரட்டைக் கோபுரம் தாக்கப் பட்டவுடன் உலக முஸ்லிம்கள் அதனைக் கொண்டாடுவதைப்போல் ஒரு தோற்றத்தை

அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்ட பின்னர் முஸ்லிம்கள் அதைக் கொண்டாடுகின்றார்கள் என்பதைக் காட்டிட தொலைக்காட்சித் தொகுப்புகள் கிடைக்கவில்லை. ஆனால் 1991-ல் குவைத்-ஐ சதாம் ஆக்கிரமித்து (2-8-1990 முதல் 25-02-1991 வரை) பின்னர் திரும்பி வரும் போது உள்ள தொலைக்காட்சி தொகுப்புகள் கிடைத்தன.

அந்தத் தொகுப்பில் குவைத் வாழ் முஸ்லிம்கள், ஈராக் படைகள் வெளியேறிதைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். எங்கு பார்த்தாலும் மகிழ்ச்சி ஆரவாரம். இந்தத் தொலைக்காட்சி தொகுப்புகளை 9/11 நிகழ்ச்சி யால் உலக முஸ்லிம்கள் மகிழ்ச்சி அடை கின்றார்கள் என்பதை உலகுக்குக் காட்டிப் பயன்படுத்தினோம். உலகம் நம்பியது, முஸ்லிம் கள் மேல் பயங்கர வெறுப்பும், கோபமும் உருவாகி வெடித்தது.

"Hate Crimes" என்ற வெறுப்புக் குற்றங்கள் உலகெங்கும் நடைபெற்றன. அதாவது உலகெங்கும் முஸ்லிம்கள் தாக்கப்பட்டார்கள்.

அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் முஸ்லிம்கள் சாலையோரங்களில், அங்காடி களில், பொழுதுபோக்கு இடங்களில், மனமகிழ் மன்றங்களில், உணவு விடுதிகளில் பயங்கர மாகத் தாக்கப்பட்டார்கள். முஸ்லிம்களின் மேலுள்ள வெறுப்பும் இஸ்லாத்தின் மேலுள்ள கசப்பும் உச்சத்தை எட்டின.

சிலுவைப் போர் 2.0 (அதாவது இரண்டாம் சிலுவைப்போர் பிரகடனப்படுத்தப்பட்டது. இதனை அப்போதைய அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் நவீன சிலுவைப்போர்



என்றார். செப்டம்பர் 13, 2001).

## தலைகீழ் மாற்றம்

ஆனால் அடுத்தடுத்துவந்த செய்திகள் 9/11 என்ற அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தாக்கப்பட்டதற்கும், தகர்க்கப்பட்டதற்கும் பின்னணியில் பல சதிகள் இருக்கின்றன. அதன் பின்னணியில் முஸ்லிம்கள் இல்லை என்ற உண்மை மக்களுக்கு தெரியவந்தது. இதனால் முஸ்லிம்கள் மீதுள்ள வெறுப்புக்கள் வெகுவாகக் குறைந்திடத் தொடங்கின.

2009-ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் அதாவது அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்டு 8 ஆண்டுகளுக்குப் பின் முஸ்லிம்கள் மேலிருந்த வெறுப்பு, இஸ்லாத்தின் மேலிருந்த காட்டும், கசப்பும் மிகையாகக் குறைந்துவிட்டது என்பது தெரிய வந்தது. இதனை அமெரிக்காவைச் சார்ந்த பல ஆய்வு நிறுவனங்கள் சுட்டிக்காட்டின.

இஸ்லாத்தின் மேலுள்ள காட்டும் முஸ்லிம்கள் மேலுள்ள வெறுப்பும் குறைந்ததால் ஆங்காங்கே முஸ்லிம்கள் மீதுள்ள தாக்குதல்கள், குறிப்பாக சாலையோரங்களில், அங்காடிகளில், மனமகிழ் மன்றங்களில், உணவு விடுதிகளில் முஸ்லிம்கள் மேல் நடந்த "Hate Crimes" தாக்குதல்கள் நின்றுபோய் விட்டன.

முஸ்லிம்கள் மீது நடந்த தாக்குதல்கள் குறைந்ததோடு, அமெரிக்க முஸ்லிம்கள் தங்களை சுதாரித்துக் கொள்ளத் தொடங்கி னார்கள். 9/11-க்குப் பின்னால் நடந்த பின்னணி களை மக்களுக்கு எடுத்துக்காட்டிடத் தொடங் கினார்கள். சில இஸ்லாமிய மையங்கள், இஸ்லாத்தை பல்வேறு உபாயங்கள் வழியாக வும் மக்களிடம் பிரச்சாரம் செய்து கொண்டே இருந்தன.

இந்தச் சூழலில் அதாவது, முஸ்லிம்கள் மீதுள்ள வெறுப்புகள் குறைந்த சூழலில் - இன்னொன்றும் நடந்தது. அது பல அமெரிக்க இளைஞர்கள் 9/11 தாக்குதலுக்கு இஸ்லாம் தான் காரணம் என்றால், அதன் அடிப்படை இலக்கியமான அல்குர்ஆன் என்னச் சொல்லு கின்றது என்பதை ஆராயத் தொடங்கினார்கள். சிலர் வன்முறையை, தீவிரவாதத்தை அப்பாவி உயிர்களைக் கொல்லத் தூண்டும் திருக்குர் ஆனை ஏன் தடை செய்யக்கூடாது என்ற வினாவை எழுப்பினார்கள். இந்தத் தடைக்கான ஆதாரங்களைத் தேடி திருக்குர்ஆனை ஆய்வு செய்தார்கள். மொத்தத்தில் திருக்குர்ஆன் ஆய்வுக்கு உள்ளானது.

இதில் ஏற்பட்ட எதிர்விளைவுகள் என்ன வெனில் அவர்கள் திருக்குர்ஆனின் போதனை களால் ஆத்திரமடைவதற்குப் பதிலாக அதன் பால் ஈர்க்கப்பட்டார்கள். பலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

இதை நுணுக்கமாக கவனித்தும், கண்கா ணித்தும் வந்த அமெரிக்க ஆய்வு நிறுவனங்கள் குறிப்பாக Pew Global Attiude Project - பியூ மனநிலைக் கணக்கு அறிக்கைகளை தயாரித்து அரசுக்கு தந்தன. ஊடகங்களுக்கும் தந்தன. அமெரிக்கா இஸ்லாத்தால் பெரிய அளவில் ஆட்கொள்ளப்படுகின்றது.

ஆட்சியாளர்கள் அதைக் கண்டுகொள்ளா மலிருக்கின்றார்கள் என்று அதிகார வர்க்கத்தைச் சாடின ஊடகங்கள்.

இன்னும் சில நிறுவனங்கள் "Hate Crimes" என்ற வெறுப்புத் தாக்குதல்கள் இனி அமெரிக் கர்கள் மீது நடத்தப்படும் என்றார்கள். காரணம் உண்மையை அறிந்த முஸ்லிம்கள் - தங்கள் மீது தாக்குதல்களை நடத்தி, இழப்புகளையும் இழிவுகளையும் ஏற்படுத்திய அமெரிக்கர்கள் மீது பாய்ந்திட தயாராக இருக்கின்றார்கள் என்றன.

இப்படியொரு அறிக்கையைத் தந்த அமெரிக்க நிறுவனம் "அமெரிக்கர்களின் முஸ்லிம் உறவுகளுக்கான குழுமம் என்பதாகும் (Counsil on American Islamic Relations) அவர்கள் தந்த, வெளியிட்ட அறிக்கையின் பெயர் "Same

Hate Different Target” அதே வெறுப்பு. ஆனால் வேறு இலக்கு

(Same Hate Different Target. A Report by Council on American Islamic Relations 0 Washinton DC, December 2009, January 2010)

## மீண்டும் வெறுப்பு

ஆகவே நிலைமை தலைகீழாகப் போய்விட்டது. மீண்டும் முஸ்லிம்கள் மீதான வெறுப்பைச் சீண்டி விட்டாக வேண்டும், வளர்த்தாக வேண்டும் எனற நிலை உருவானது. அதற்கான காரணங்களைத் தேடினோம். அப்போது 2010 ஆண்டில் லேயர் மன்ஹாட்டன் “manhattan” என்ற பகுதியில் முஸ்லிம்கள் ஓர் சமுதாயக் கூடத்தை கட்டிட முயற்சிகளை மேற்கொண்டார்கள். அதனைப் பிடித்துக்கொண்டு ஜூலை 2010 ஆம் ஆண்டு இந்தச் சமுதாயக் கூடத்திற்கெதிராக ஆர்ப்பாட்ட போராட்டங்களை நடத்தினோம்.




ஊடகங்கள் சமுதாயக் கூடத்தை மிகப்பெரிய ஆபத்தாகக் காட்டியது. குறிப்பாகத் தொலைக்காட்சி ஊடகங்கள் இதனை ஊதிப் பெரிதாக்கின. அச்சு ஊடகங்கள் அதனை அணையவிடாமல் பார்த்துக் கொண்டன. முஸ்லிம்கள் மீதான வெறுப்பு மீண்டும் முன் வந்தது. வெறுப்புத் தாக்குதல்கள் தொடங்கின.

அடுத்த மாதமே ஆகஸ்ட 2010 -இல் ஓர் இஸ்லாமிய மையத்தை அடையாளம் தெரியாத சிலர் இடித்துத் தள்ளினார்கள். அதே நேரத்தில் "புளோரிடா" என்ற இடத்தில் இன்னொரு இஸ்லாமிய மையத்தை சிலர் குண்டு வீசி தகர்த்தார்கள்.

விஸ்கோன்சின், மெச்சிக்ஜான், டெக்ஸான் ஆகிய இடங்களில் மஸ்ஜித்கள் தாக்குதலுக்கு உள்ளாகின, தகர்க்கப்பட்டன.

இவையெல்லாம் போதாதென புளோரிடாவிலுள்ள பாஸ்டர் (பாதிரி) டெரிஜோன்ஸ் என்பவரும் அவருக்குத் துணைபோன கூட்டத்தினரும் முஸ்லிம்களின் மீதான தாக்குதல்களின் உக்கிரகத்தை உச்சத்திற்கு கொண்டுச் செல்வது என முடிவு செய்தார்கள்.

9/11/2010-இல் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்டதன் நினைவு தினத்தைக் கொண்டாடப்போவதாகவும், அந்த நாளில் திருக்குர்ஆனின் பிரதிகளை நெருப்பிட்டுக் கொளுத்தப் போவதாகவும் பிரகடனப்படுத்தினார்கள். அதாவது உலகெங்கிலுமுள்ள முஸ்லிம்களின் மனதை புண்படுத்தவும், அவர்களை கொதிப்படையச் செய்யவும் இப்படித் திட்டமிட்டார்.

## ஓடி வந்தார் ஒபாமா

பொதுவாக இதுபோன்ற முஸ்லிம் வெறுப்புத் தாக்குதல்களில் வேடிக்கைப் பார்த்துக் கொண்டு நிற்கும் ஒபாமா அரசு இந்த விஷயத்தில் அதாவது திருக்குர்ஆனை எரிக்கும் விஷயத்தில் வேறு விதமாக நடந்தது. ஒபாமாவே டெரிஜான் என்ற பாதிரியாரிடம் ஓடோடி வந்தார். தயை கூர்ந்து திருக்குர்ஆனை எரிக்கும் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்றார். பாதிரியார் ஆச்சரியப்பட்டார். ஒபாமாவை முறைத்தார், குடியரசு ஒபாமா பாதிரியாரிடம் இப்படி முறையிட்டார்.

நீங்கள் திருக்குர்ஆனை எரிக்கவிருப்பதை அறிந்ததும் ஆப்கானிஸ்தான் தீவிரவாதிகள் (தாலிபான்கள்) அங்கு நாம் நிறுத்தி இருக்கும் அமெரிக்க வீரர்களை வேகமாகத் தாக்கு

வார்கள். பல நூறு அமெரிக்க வீரர்கள், அங்கே ஆப்கானிஸ் தானில் பிணமாக வீழ்வார் கள். அவர்களின் பிணங்களை அமெரிக்கா கொண்டு வருவ தற்குள் போதும் போதும் என்றாகிவிடும்" என்றார் ஒபாமா. அத்தோடு ஒபாமா இன்னும் சொன்னார் நீங்கள் என்னுடைய இந்த ஆலோச னையை கேட்காவிட்டால் நான் வேறு நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டி வரும் என்றார். பாதிரி டெரிஜான் தன்னுடைய திருக்குர்ஆன் எரிப்புப் போராட்டத்தை கை விட்டார். (Crusade 2.0 The West's Resurgent War on Islam)



(அதாவது வாசகர்களே! அமெரிக்க அதிபர் ஒபாமா பாதிரி டெரிஜான் அவர்களிடம் அமெரிக்கா மத சார்பற்ற, மத சகிப்புத்தன்மை யுள்ள நாடு. ஆகவே இதுபோன்ற போராட் டங்களுக்கு இடமில்லை எனக்கூறிட வில்லை. ஆனால் எங்கோ வாழும் முஜாஹித்களுக்குப் பயந்தார்.

அதாவது 8,000 மைல்களுக்கு அப்பால் வாழ்ந்த முஜாஹித்களுக்கு தாலிபான்களுக்குப் பயந்தார். இந்த முஜாஹித்கள் வெறுங்கை யோடு நின்று போராடுபவர்கள். அல்லாஹ்வே போதுமானவன்.)

ஆனால் டெரிஜான் வேறு உபாபங்களைக் கையாண்டார். அந்த நாளில் நாய்களை அதிகமாகக் கொண்டுவந்து தன்னுடைய போராட்டத்தை நடத்தினார். ஏனெனில் நாய்களை முஸ்லிம்கள் விரும்ப மாட்டார்கள். வெறுப்பும் கோபமும் வரும், நிம்மதி இழப்பார்கள் இதுவே நோக்கம்.

அமெரிக்காவின் இன்னொரு இயக்கம் இஸ்லாத்திற்கு எதிரான ஓர் இயக்கம். அதன் பெயர் "Stop Islamization of Amrica" அமெரிக்கா இஸ்லாமிய மயமாவதைத் தடுங்கள். இந்த அமைப்பு இந்த முழக்கத் தைப் பிரச்சாரம் செய்திட பெருமளவில் நிதி ஒதுக்கீடு செய்தது. பேருந்துகளில் இந்த முழக்கத்தைக் கொண்ட பதாகைகளையும், அட்டைப் பட எழுத்துக்களையும் பொறித்தன. இது அமெரிக்காவின் முக்கிய நகரங்களான, சேன் பிரான் சிஸ்கோ, மியாமி, நியூயார்க் ஆகிய நகரங்களில் நடந்தது.

இதனால் இஸ்லாம் அமெரிக்காவை விழுங்கி விடும் என்ற அச்சம் எல்லா இடங்களிலும் பரவிற்று. இதில் ஒக்கலகாமா (என்ற இடத்தில்) மிகப்பெரிய பிரச் சனைகளை உருவாக்கினார்கள் இந்த அமைப்பைச் சார்ந்த வர்கள்.

அமெரிக்கா இஸ்லாமிய மயமாவதைத் தடுங்கள் என்ற இயக்கம் ஒக்கலகாமாவில் ஏற்படுத்திய அல்லோல கல்லோலங்களால் அங்கே அமெரிக்கர்கள் இன்னொரு இயக் கத்தை தொடங்கினார்கள. அதன் பெயர் "Ban Sharia - Islamic Law" ஷரீயாவைத் தடை செய்யுங்கள் என்பதாகும். இந்த அமைப்பில் அமெரிக்கர்கள் அணி அணியாக தங்களை இணைத்துக் கொண்டார்கள். எங்கு நோக்கினும் ஷரீஅத், முஸ்லிம்களுக்கெதிரான பேச்சுக்கள், இஸ்லாத்திற்கெதிரான விவாதங்கள் அந்த நவம்பர் மாதத்தில் நடந்த இடைத் தேர்தலில் இது முக்கிய முழக்கமானது.

மொத்தத்தில் இஸ்லாத்திற்கு எதிரான வெறுப்பால், ஒக்கலகாமாவே கபளீகரப்பட் டது. இதில் குறிப்பிடத்தக்க செய்தி என்னவென் றால் இந்த ஒக்கலகாமாவின் மொத்த மக்கள் தொகையில் ஒரு சதவிகிதம்தான் முஸ்லிம்கள்.

இந்த ஒரு சதவீத முஸ்லிம்கள், விரக்தி வயப்படுவார்கள், அமெரிக்காவை விட்டு வெளியேறுவார்கள் அல்லது குறைந்தபட்சம் அவர்கள் ஒக்கலகாமாவிலிருந்து வெளியேறு வார்கள் என எதிர்பார்த்தோம், ஏமாந்தோம். எப்படி? அடுத்த இதழில்

John Feffer (Crusade 2.0 The West's Resurgent war on Islam)
தமிழ் வடிவம் - MGM










# மோடிகளின் பண மோசடிகள்

நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வெளிநாடுகளில் பதுக்கப்பட்டிருக்கும் லட்சக் கணக்கான கோடி கறுப்புப் பணம் இந்தியா வரும் ஒவ்வொரு குடிமகனின் கணக்கிலும் *15* லட்சம் ரூபாய் போடுவேன் என்றார் மோடி. கால் காசு கூட வந்திடவில்லை. ஆனால் நமது குடிமக்கள் வங்கிகளில் போட்ட பணம் ஆயிரக்கணக்கான கோடிகள் வெளிநாடுகளில் குவிகின்றது.

அறிவிக்கப்படாத திவாலை நோக்கி நாடுபோய்க் கொண்டிருக்கின்றது. நிரவ் மோடி ஊழலில் எப்படி அரசு உதவி செய்தது என்பதை இங்கே படியுங்கள்...

பஞ்சாப் தேசிய வங்கி என்ற பெயரைச் சுமக்கும் பஞ்சாப் நேஷனல் வங்கியிலிருந்து *11,400* கோடி ரூபாயை நிரவ்மோடி என்பவர் கொள்ளை அடித்துவிட்டார். இன்னும் *6000* கோடியை ஏய்த்தது இப்போது கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. (விடுதலை *16-03-2018*)

மோடி அரசின் உதவியோடு வெளிநாடு சென்றுவிட்டார். அங்கே நம் நாட்டு மக்களின் வங்கிப் பணத்தில் உல்லாசமாக உலா வந்து கொண்டிருக்கின்றார். மல்லையா பாணியில் ஓர் அழகியோடுதான் மோடி வகையறாக்கள் இதுபோன்ற தேசத் துரோகிகளை, ஏமாற்று பவர்களை வெளிநாடு அனுப்பி வைக்கின் றார்கள்.

இந்துத்துவ அமைப்புகள் நாட்டுப் பற்றைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டவர்களைப்போல் காட்டுவது கபட நாடகம் தாங்கள் செய்யும் தேசத் துரோகங்களை மறைக்கும் திரை.

ஆனால் நாட்டை மொத்தமாகச் சூறையாடிச் சென்ற மல்லையா, லலித் மோடி, நிரவ்மோடி போன்றவர்களின் விவகாரங்களில் வாய் திறக்கமாட்டார்கள். காரணம் இது போன்று நாட்டைக் கொள்ளை அடிக்கும் தேசியத் திருடர்கள் அள்ளிக் கொண்டிருப்பதில் தான் இந்தப் போலி தேசப் பக்தர்கள் தங்கள் வாழ்நாளை வளமாக ஆக்கிக்கொண்டுள்ளார்கள். பதவிகளைப் பிடித்துக்கொண்டார்கள். மோடியை பிரதமராக இவர்கள் வாரி இறைத்தப் பணம், இப்படிப் பெறப்பட்டதுதான்.

இதுபோன்ற தேசத்தை ஒன்றாகத் திருடிடும் கொள்ளைக்காரர்களிடம் சங்கப்பரிவாரத்தின் அடிமட்ட தொண்டர்கள்தாம் வாங்கிக் கொழுத்து வாழுகின்றார்கள் என்றில்லை.

**நிதி அமைச்சரின் மகள்**

மோடி வகையறாக்களும் நிரம்பவே வாங்கி இருக்கின்றார்கள். இதில் நமது நிதி அமைச்சர் அருண்ஜேட்லியின் குடும்பம் நிரம்பவே வாங்கி இருக்கின்றது.

நிதி அமைச்சரின் மகள் ஒரு வழக்கறிஞர். இவர் 18,500 கோடி ரூபாயை கொள்ளையடித்த நிரவ்வோடியின் கம்பெனியின் சட்ட ஆலோசகராகவும், அங்கே வேலை செய்யும் பகுதி நேர வழக்கறிஞர். இதனால் நிரவ்மோடிக்கு வங்கியில் கடன் வாங்குவதில் சிரமமே இருக்கவில்லை.,

காரணம் நிதி அமைச்சரின் மகள்தான் கடன் பத்திரங்களைத் தயாரித்துச் சமர்ப்பிப்பார். வங்கி அதிகாரிகள் எந்த மறுப்பும் சொல்லாமல் கடனைக் கொடுத்து விடுவார்கள். காரணம் கடன் பத்திரங்கள், நிதி அமைச்சர், நிதி அமைச்சகம் ஆகியவற்றின் ஆசி பெற்றவை.

சில நேரங்களில் கடனாகக் கொடுக்கும் தொகை பெரிதாக இருந்தால் நமது தலைமை வங்கி ரிசர்வ் பேங்க் ஆஃப் இந்தியாவின் ஒப்புதல் தேவைப்படும். இதனையும் நிரவ் மோடி மிக எளிதாகப் பெற்றுவிடுவார். ஏனெனில் அங்கேயும் அதாவது நமது தலைமை வங்கிக்கு மனு அனுப்பும் பணிகளை நிதி அமைச்சரின் மகள்தான் செய்வார்.

நிதி அமைச்சரின் மகள் அனுப்பும் மனுவை நிராகரித்தால் ரிசர்வ் வங்கியில் இருப்பவர்களின் பணி பறிபோகும்.

**தாங்கள் சொல்வதைக் கேட்காத வங்கி அதிகாரிகளின் பதவி..?**

ஏற்கெனவே பணமதிப்பு நீக்கம் என்ற முட்டாள்தனத்தை செய்யாதீர்கள், அப்படிச் செய்வதற்கு நான் ஒத்துக்கொள்ள மாட்டேன். ஏனெனில் நாட்டின் பொருளாதாரம் பாழ்படும் எனச் சொன்ன ரிசர்வ் வங்கியின் கவர்னர் இரகுராம் ராஜனை - அந்தப் பதவியை விட்டு விரட்டினார்கள். இதனை நாட்டு மக்கள் மறக்கலாம். ஆனால் வங்கி வட்டாரங்களில் பணி செய்பவர்கள் நிச்சயமாக மறக்க மாட்டார்கள். மறக்கவும் முடியாது.

இன்னும் சொன்னால் தங்கள் பதவிகளை எப்படி காப்பாற்றிட வேண்டும் என பாடம் படிப்பார்கள். இரகுராம் ராஜனை அவர்கள் பணியிலிருந்து அப்புறப்படுத்தியதோடு விட்டு விடவில்லை. அவருக்கு உலக அரங்கில் பொருளாதாரத்திற்கு கிடைக்கவிருந்த "நோபல் பரிசையும்" கொடுக்க விடாமல் தடுத்து விட்டார்கள். காரணம் மோடியின் முட்டாள் தனத்தை அதாவது பணமதிப்பு நீக்கம் என்ற முட்டாள் தனமான நடவடிக்கையை தடுக்க முயன்றவருக்கு நோபல் பரிசு என ஊரெல்லாம் மட்டுமல்ல உலகமெல்லாம் செய்திகள் பரவிவிடும் (இதனை வைகறை வெளிச்சம் அப்போதே விரிவாகத் தந்திருந்தோம்)

சிறந்த பொருளாதார நிபுணரைப் புறந் தள்ளிவிட்டுத் தங்களுக்கு வேண்டிய ஒருவரை (அதன்பின் உறவினரை) நமது தலைமை வங்கியாம் ரிசர்வ் வங்கியின் தலைவராக நியமித்திருக்கின்றார்கள் என்ற செய்தியும் பரவும். ஆக இதனால் நிரவ்வோடி வகை யறாக்களுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் கடன் கிடைக்கின்றது. கடன் மட்டுமல்ல வெளி நாடுகளில் நிறுவனங்கள் தொடங்கிடவும் பன்னாட்டுப் பரிவர்த் தனைகளை நடத்திவும் Letter of Undertaking (LOU) என்ற உத்திரவாதக் கடிதங்களும் வங்கிகளிடமிருந்து தாராளமாகக் கிடைக்கின்றன.

### உத்திரவாதக் கடிதங்கள்

இந்த (Letter of Undertaking) உத்திரவாதக் கடிதம் என்பது வெளிநாட்டிலிருக்கும் ஒரு நிறுவனத்திற்கோ அல்லது வங்கிக்கோ நம் நாடடில் இருக்கும் ஒரு வங்கி வழங்கும் உத்திர வாத கடிதம். இந்தக் கடிதம் எங்கள் நாட்டைச் சேர்ந்த இவரை நீங்கள் நம்பலாம். அவருடன் வியாபார, கொடுக்கல், வாங்கல்கள் வைத்துக் கொள்ளலாம். பணக் கொடுக்கல் வாங்கல் களையும் வைத்துக் கொள்ளலாம். அப்படிக் கொடுக்கல் வாங்கல்களில் எங்கள் நாட்டைச் சார்ந்த இன்னவர் பணம் தர தவறினால் இந்த வங்கி உங்களுக்கு அந்த பணத்தைத் தரும் என்பதே அந்த உத்திரவாதம்.

பஞ்சாப் நேஷனல் வங்கியில் நிரவ்மோடி 11,400 + 6000 கோடி ரூபாயை ஏமாற்றிட இதுபோன்ற உத்திரவாத கடிதங்கள் மிகப் பெரிய அளவில் உதவி செய்திருக்கின்றன.

"கூட்டுக்கொள்ளை" இந்த உத்திரவாதக் கடிதங்களைப் பெற்றுத் தருவதில் அருண் ஜேட்லி என்ற நமது கோடீஸ்வர நிதி அமைச் சரின் மகள் பெரும் பங்காற்றி இருக்கின்றார். அந்த நிறுவனத்தின் வழக்கறிஞர் என்ற போர்வையில்.

இப்போது பஞ்சாப் நேஷனல் வங்கியில் நிரவ்மோடி அடித்தக் கொள்ளைகள் வெளிச்சத் திற்கு வந்தபின் அருண்ஜேட்லியின் மகள் அந்த நிரவ்மோடியின் கம்பெனியிலிருந்து அவசர அவசரமாக இராஜினாமா செய்வதாக அறிவித் திருக்கின்றார்.

### நிதி அமைச்சரின் மௌனம்

நிரவ்மோடியின் மோசடிகளிலிருந்து அதிகமாக இலாபமடைந்தது தனது மகள்தாம் என்ற உண்மையை நன்றாக உணர்ந்த நிதி அமைச்சர் அருண்ஜேட்லி இன்றளவும் பஞ் சாப் நேஷனல் வங்கிக்கு ஏற்பட்ட இழப்புகள் பற்றியோ, நிரவ்மோடியின் மோசடிகள் பற்றியோ வாய்திறக்கவில்லை. (ஆதாரம்- TOI - March 13, 2018)

எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்கள் இந்த மோசடிகளைச் செய்ததில் நிதி அமைச்சர் மகளும் உடந்தை என இடித்துக் காட்டிய பின்னரும் வாய்மூடி மௌனியாக இருக்கின் றார் அருண்ஜேட்லியும் அருடைய எசமானார் பிரதமர் மோடியும்.

இப்படி மோடி அரசின் மொத்த அரசு நிர்வாகமும் சேர்ந்ததுதான் இந்தியாவிலுள்ள வங்கிகளைத் திவாலாக்கிக் கொண்டிருக்கின்றன என்பதை நாட்டு மக்கள் கவனிக்க வேண்டும். (TOI March-13, 2018)

### மத்திய நிதி செயலாளருக்கு நிரவ்மோடி அளித்த தங்கக் கட்டிகள்

நமது மத்திய நிதித்துறையில் நிதி செய லாளர் என்ற பதவியை வகிப்பவர் "ஹஷ்முக் ஆதியா" என்பவர். இவருடைய ஆசியும் அதீத உதவியுமின்றி நிரவ்மோடி 11,400 கோடியைக் கொள்ளையடித் திருக்கவியலாது.

தனது கொள்ளைகளுக்குத்துணையாய் நின்ற நிதி அமைச்சரின் மகளுக்கு அள்ளி வழங்கியதைப் போல் ஒரு லஞ்சத்தை நிதித் துறை செயலாளருக்கும் வழங்கிட வேண்டும் என விரும்பி இருக்கின்றார். அதனால் சென்ற தீபாவளியில் இரண்டு தங்கக் கட்டிகளை பரிசாக அனுப்பி இருக்கின்றார்.

அவை என்ன எடை என்று தெரியவில்லை. ஆனால் தங்கக் கட்டிகளை வாஞ்சையோடு பெற்றுக்கொண்ட நிதித்துறை செயலாளருக்கு பின்னர் நிரவ்மோடி 18,000 கோடிகளோடு பறந்து போவார் என்பது தெரியவில்லை போலும். எல்லோரும் சேர்ந்துதான் வழி அனுப்பி வைத்திருப்பார்கள் என்பதே உண்மை.

நிரவ்மோடியை அரசு அழகிய முறையில்




வழி அனுப்பி வைத்ததும், நிதித்துறை செயலாளருக்குதலைசுற்றத்தொடங்கிவிட்டது. தனது பணிக்கு பங்கம் வந்துவிடும் எனப் பயந்தார். ஆனால் நிதி அமைச்சர் உதவி செய்வார் என்ற நம்பிக்கையில் தைரியமாக இருந்தார். இந்தக் கெட்டுச் சோற்றுக் குள் அருண்ஜேட்லி யின் மகள் என்ற எலியும் உண்டு என்பதை அறிந்தார் அவர். அவருடைய நம்பிக்கை பாழ்பட வில்லை. நிதி அமைச்சர் அருண்ஜேட்லி வெறும் நிதி அமைச்சர் மட்டு மல்ல, அவர் ஒரு மூத்த வழக்கறிஞரும் கூட. அதனால் உரிய ஆலோசனைகளை வழங்கினார். நிதி அமைச்சகத்தின் செயலாளருக்கு அரசு அதிகாரிகளுக்கு சன்மானங்கள் பரிசுகள் வந்தால் அவர்கள் அந்த சன்மானங்களை, பரிசுகளை கஜனாவில் சேர்த்திட வேண்டும் என்பது சட்டம்.

ஆகவே வந்தத் தங்கக் கட்டிகளில் ஒரு 20 கிராமை அரசு கஜானாவில் சேர்த்துவிட்டார் நமது நிதித்துறை செயலாளர். கேட்டால் நான் லஞ்சத்தைப் பெறவில்லை எனச் சொல்லிவிட லாம் என்ற தைரியம். இப்படி நிரவ்மோடி லஞ்சம், சன்மானம், தங்கக் கட்டிப் பரிசுகள் என மோடி அரசின் மொத்த நிர்வாகத்தையும் விலைக்கு வாங்கி இருக்கின்றார். (ஆதாரம் Wirenei News, விடுதலை நாளிதழ் 10-03-2018)

அரசின் நிதித்துறை செயலாளர் பெற்ற பரிசுகள் தங்கக் கட்டிகள் எவ்வளவு? அதை ஒரு வைர வியாபாரி ஏன் நிதித்துறை செயலா ளருக்கு அனுப்பினார்?

பஞ்சாப் நேஷனல் வங்கி மோசடியில் நிதி அமைச்சர் அவருடைய மகள் ஆகியோரின் பங்கென்ன? நிதிச் செயலாளரின் பங்கென்ன? என்பனவற்றையெல்லாம் ஓர் குழுவின் விசா ரணைக்கு உட்படுத்திட வேண்டும். அப்போது மட்டுமே இந்த மோசடியின் முழு விபரமும் தெரியவரும். ஆனால் இவையெல்லாம் மோடி அரசில் நிச்சயமாக நடக்காது.

காங்கிரஸ் ஆட்சி வந்தாலும் கமிஷன் வாங்கிக்கொண்டு "கம்"னு இருந்து விடுவார்கள்.

### பி.ஜே.பி.யும் வராக்கடனும்

பி.ஜே.பி. ஆட்சிக் கட்டிலில் ஏறிய காலத்திலிருந்து சிலரைக் காப்பாற்றி வருகிறது. காப்பாற்றப்பட்டவர்கள் ஏழைகளோ, நிரபராதிகளோ, சாமானியர்களோ அல்ல. மத்திய அரசின் அதிகாரிகளால் தேடப்படும் குற்றவாளிகளின் பட்டியலில் இருக்கும் சில கோடீஸ்வரர்கள்தாம். இதில் முதன்மையான வர்கள் லலித் மோடியும், விஜய்மல்லையாவும்

ஐ.பி.எல். கிரிக்கெட்டின் வாயிலாக அறியப்பட்டவர் லலித்மோடி. இவர் பண பரிவர்த்தனை மோசடியில் ஈடுபட்டதாக மத்திய அரசு அதிகாரிகள் குற்றம் சாட்டினர்.

இந்த லலித்மோடி, தன் மீது வழக்கு இருக்கும்போதே, ஜாமீன் பெற்று லண்டனுக்கு தப்பியோடினார். 1700 கோடி நிதி மோசடி, சூதாட்டம், தில்லு முல்லு உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்களை உள்ளடக்கிய 16 வழக்கு களில் சிக்கிய இந்த மோடியின் பாஸ் போர்ட்டை ரத்து செய்தாலாவது இந்தியா வுக்கு திரும்புகிறாரா பார்க்கலாம் என்ற அடிப் படையில் கடந்த கால மத்திய அரசு 2010-ல் அவருடைய பாஸ்போர்ட்டை ரத்து செய்தது. இன்று வரை இந்திய நாட்டின் பக்கம் தலைவைக்காத தேசியவாதியாக இருக்கிறார் லலித்மோடி (ஆதாரம் - தி இந்து, ஜூன்-19, 2015, திருச்சி)

பாஸ்போர்ட் விவகாரத்தில் லலித் மோடிக்காக வாதாடிய வழக்கறிஞர் பி.ஜே.பி. தலைவர்களில் ஒருவரான சுஷ்மா சுவராஜின் மகள் பன்சூர் ஸ்வராஜ், நீதிமன்றமும் பாஸ்போர்ட் முடக்கத்தை ரத்து செய்தது.

இதனால் இன்றுவரை இந்திய தாய்நாட்டின் பககம் தலைவைக்காத தேசியவாதியாக இருக்கிறார் லலித்மோடி. (ஆதாரம் - தி இந்து, ஜூன் 19, 2015 திருச்சி)



ஒரு குற்றவாளியை காப்பாற்றுவதற்காக ஒரு பி.ஜே.பி. அமைச்சரின் குடும்பமே போராடியிருக்கிறது என்னே ஒரு தேசபற்று! இதையெல்லாம் பார்க்கும்போது கருப்பு பணத்தை மீட்போம் எனும் கோஷம் போடும் இந்துத்துவா கட்சியின் செயல் முரணானதும் நாட்டுக்கு எதிரானதுமாகும்.

அதேபோல் தான் விஜய் மல்லையாவின் கதையும்! இவர் நம் நாட்டு வங்கிகளிடமிருந்து 9000 கோடி ரூபாய் கடன் பெற்றிருந்தார். இன்று கடனை அடைக்காமல் வெளிநாட்டுக்கு தப்பி ஓடிவிட்டார். இப்பணம் நம் நாட்டின் சாமான்யர்கள் தங்கள் தேவைகளை சுருக்கி சேமித்த பணமிது. ஊதாரிகளுக்காக சேமித்த சேமிப்பில்லை.

வங்கியிடம் இருந்து 9000 கோடி கடன் பெற்ற குற்றச்சாட்டுக்காக கடந்த 2015 ஆண்டு டிசம்பர் மாதமே சி.பி.ஐ. அதிகாரிகளின் கண்காணிப்பில் விஜய் மல்லையா கொண்டு வரப்பட்டார். ஆனால் 2016 மார்ச்-02 அன்று லண்டனுக்கு சகல ஏற்பாடுகளுடன் ஏழு பெரிய சூட்கேஸ்களுடன் தப்பி ஓடினார். (ஆதாரம் - தி இந்து டிசம்பர் 11, 2015 மதுரை)

இடைப்பட்ட காலத்தில் பி.ஜே.பி. அரசு மல்லையாவின் பாஸ்போர்ட்டை முடக்காமல் வெளிநாடு தப்பி செல்லும் வரை அனுமதி காத்தது. இப்பிரச்சனையை எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் எழுப்பிய போது, டெல்லி கிரிக்கெட் வாரிய ஊழல் மன்னன் மத்திய நிதியமைச்சர் அருண்ஜெட்லி "நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் மட்டுமே ஒருவருடைய பாஸ்போர்ட்டை முடக்க முடியும். இல்லாவிட்டால்ஒருவர் வெளிநாடு செல்வதை யாராலும் தடுக்க முடியாது எனக்கூறி இருக்கின்றனர்.

இதன்மூலம் நம் வங்கிகளைக் கொள்ளை அடித்துவிட்டு, வெளிநாடு செல்லும் கொள்ளையர்களுக்கும் ஆக்கமும் ஊக்கமும் தந்திருக்கின்றார்.

**ஆகவே நாட்டு மக்களுக்கு மோடி அரசு போட்ட நாமம் வாழும்! அதிலிருந்து நாட்டைக் காப்பாற்றிட முஸ்லிம்களே எழுங்கள் இஸ்லாத்தைமுன் நிறுத்த!**

- MGM


பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்

**கொடிய வட்டியில் இருந்து மீள! தாங்கள் வங்கியில் அடகு வைத்திருக்கும் நகைகளை ஏலத்திற்கு செல்லாமல் மீட்டு நல்ல விலைக்கு விற்றுத் தரப்படும்.**

தொடர்புக்கு

**90955 40678**

### திருப்பூரில்



# கலவரம் ஏற்படுத்த காவிகள் சதி...

## துணை போகும் காவல்துறை

பல்லாயிரம் கோடி வருவாயை அரசுக்கு வருடந்தோறும் அள்ளித்தந்து கொண்டிருக்கும் தொழில் நகரமான திருப்பூரிலிருந்து 12 கி.மீ. தொலைவில் அமைந்திருக்கும் பழமையான அமைதியான கிராமம் அக்ரஹாரபுத்தூர். இவ்வூரில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வசித்து வருகிறார்கள், ஒரு பகுதியில் தலித் சகோதரர்களும் மற்றொரு பகுதியில் கவுண்டர் இன மக்களும் வசித்து வருகிறார்கள்.

பல்லாண்டுகளாக நிலவி வரும் அமைதியை சீர்குலைக்கும் விதமாக ஒருசில இந்துத்துவ பயங்கரவாதிகள் இப்பகுதியில் செயல்பட்டு வருகின்றனர். ஊரில் உள்ள தலித் மக்களை அடிக்கடி தாக்குவதும். அவர்களுக்கு தொல்லை கொடுப்பதும் தொடர்கதையாக உள்ளது. இந்நிலையில் முஸ்லிம்களிடமும் தங்களது வெறுப்புணர்வை அடிக்கடி காட்டி வருகிறார்கள். இதில் விநாயகமூர்த்தி என்பவன் ஊருக்குள் புதிதாக வரும் முஸ்லிம்களை மிரட்டுவதும். அச்சுறுத்துவதுமாய் உள்ளான்.

கடந்த வருடம் மாரியம்மன் கோவில் திருவிழாவின்போது "முனி விரட்டு" என்ற பெயரில் காட்டுக்கூச்சலோடு இரவு வேளைகளில் கூட்டமாக வந்துள்ளார்கள், கையில் தீப்பற்ற வைத்த ஓலைகள் வேறு, அதிலிருந்து தீக்கங்குகள் முஸ்லிம்களின் வீடுகளுக்கு உள்ளே சென்று அச்சுறுத்தியது, உயிரோடிருந்த கோழியை "வைகறை வெளிச்சம்" நிருபர் காதர் மைதீன் வீட்டு சுவரில் அடித்துக் கொன்றுள்ளான். அந்தச்சுவரெல்லாம் இரத்தக்கரையானது ஆனாலும் முஸ்லிம்கள் அமைதியாகவே இருந்தனர்.

இந்நிலையில் இவ்வருடம் பிப்ரவரி 20-ஆம் தேதி அதே விழாவில் காட்டுக் கூச்சலோடு மது அருந்திவிட்டு மத்தளம் அடித்துக்கொண்டு பள்ளிவாசல் வழியே விநாயமூர்த்தி தலைமையில் வந்தார்கள். பள்ளிவாசல் எல்லையிலிருந்து முஸ்லிம்கள் வாழும் பகுதியை கடக்கும் வரை மத்தளம் அடிக்கவும், கூச்சலிடவும் தடை உள்ளது, கடந்த 1910 ஆம் ஆண்டு முதல் எழுத்துப்பூர்வமாக இது பதிவு செய்யப்பட்டு இது நடைமுறையில் உள்ளது. அதேபோன்று நீதிமன்ற தடை உத்தரவும் உள்ளது. ஆனால் சில ஆண்டுகளாக இதையெல்லாம் இவர்கள் மதிப்பதே இல்லை. தடைகளை வேண்டுமென்றே மீறி நீதிமன்றத்தை அவமதிக்கிறார்கள்.

இவ்வாண்டும் பள்ளிவாசல் அருகே வந்ததும் ஊர்வலத்தில் உள்ள நல்ல மனதுடையவர்கள் சிலர் இப்பகுதியில் மத்தளம் அடிக்கக் கூடாது, வேண்டாம் என்று நிறுத்தச் செய்தனர். ஆனால் விநாயகமூர்த்தி, செந்தில் போன்றோர் "மத்தளம் அடிங்கடா" என்று கூறி சுமார் 20 நிமிடங்கள் பள்ளிவாசலின் அருகே நின்று அடித்தனர். இரவு வேளையானதால் கேட்கவும் யாருமில்லை. அவ்வேளையில் அதே ஊரைச் சேர்ந்த ஆசிக் அஹமது என்பவர் பணியை முடித்துக்கொண்டு வீடு திரும்பியுள்ளார். ஆசிக் அஹமதுவை விநாயகமூர்த்தி ஏற்கனவே தாக்கியுள்ளான்.

இந்நிலையில் ஆசிக்அஹமது தனியாக சிக்கவும். ஊர்வலத்தின் முன்னே வந்த விநாயக மூர்த்தி ஆசிக் அஹமதுவை சரமாரியாக தாக்கியுள்ளான். இதில் நிலைகுலைந்து கீழே விழுந்தவரை ஊர்வலத்தில் வந்த செந்தில், சுந்தரேஷ், ரகுபதி ஆகியோர் கொலைவெறித் தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். சத்தம் கேட்டு வீடுகளில் இருந்து வெளியே வந்த முஸ்லிம்கள் ஆசிக்

அகமதுவை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். கூட்டத்திலிருந்து எம்.எம்.எஸ். மணி என்பவன் "உங்களை ஈதுகா பள்ளிக்குள் விடமாட்டோம். வந்தால் தாக்குவோம் என்று கூச்சலிட்டுக்கொண்டே இருந்தான். ஊர்வலத்தின் இருந்தவர்கள் ஆபாச வார்த்தைகளையும் பேசிக்கொண்டே எல்லோரையும் தாக்க முயற்சித்தனர்.

நிலைமையின் விபரீதத்தை உணர்ந்த முஸ்லிம்கள் காவல்துறைக்கு தகவல் தெரிவித்தனர். முதலில் ஒரு காவலர் மட்டுமே வந்தார். ஆனால் அவரையும் தாக்க முயற்சித்தனர். சிறிது நேரம் கழித்து மேலும் பல காவலர்கள் வந்த பின்பே ஊர்வலத்தினர் கலைந்து சென்றனர். ஆக ஒரு மிகப்பெரிய கலவரத்திற்கே விநாயகமூர்த்தி தலைமையிலான கும்பல் திட்டமிட்டு செயல்பட்டுள்ளது.

இந்நிலையில் மறுநாள் காலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த ஆசிக் அகமதுவிடம் நடந்தவைகளை கேட்டு காலை 8.30 மணியளவில் மங்கலம் காவல் துறையினர் அறிக்கை பதிவு செய்துள்ளனர். ஆனால் எப்.ஐ.ஆர். பதிவு செய்யவில்லை. காலை 10.00 மணியளவில் மங்கலம் காவல் நிலையத்தில் இரு தரப்பிடமும் பேச்சுவார்த்தை நடத்திக் கொள்ளலாம் என்று கூறி ஜமாஅத்தை காவல்துறையினர் அழைத்தனர். ஜமாஅத் நிர்வாகிகளிடம் காயம்பட்டு மருத்துவ மனையில் உள்ள ஆசிக்அகமதுவை அழைத்து வர வற்புறுத்தினர். அவர் வர இயலாத சூழலில் இருந்ததால் வர இயலவில்லை. வந்தால்தான் பேசுவோம் எனக்கூறி பேச்சுவார்த்தையை மாலை4.00 மணிக்கு பல்லடம் துணைக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு ஒத்தி வைத்தனர்.

அங்கும் டி.எஸ்.பி. ஆசிக் அகமதுவை கூட்டி வரச்சொல்லி வற்புறுத்தினார். மருத்துவமனையே அவர் அழைத்து வர முடியாத சூழலில் உள்ளதாக கூறியபோதும் டி.எஸ்.பி. முத்துச்சாமி மருத்துவ மனைக்கு தெரியாமல் கூட்டி வருமாறு கூறினார். இது எந்த வகையில் நியாயமானதென தெரியவில்லை. காயம்பட்டவர் மீது காவல்துறை எந்த கரிசனமும் காட்டாததோடு மட்டுமல்லாமல் அலைக்கழிக்கவும் முற்பட்டனர். இந்நிலையில் கலவரம் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் பாதிக்கப்பட்ட ஆசிக்அகமது மீதும், அவரை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த காதர்மைதீன் மீதும் மங்கலம் காவல்துறையினர் கடுமையான பிரிவுகளில் வழக்கு பதிந்தும். கலவரக்காரர்கள் மீது சாதாரண பிரிவுகளில் வழக்கை பதிவு செய்துள்ளனர்.

ஆசிக்அகமது, காதர் மைதீன் மீது மாலை 6.00 மணிக்கு வழக்குப் பதிவு செய்துள்ளனர். அவ்வேளையில் காதர்மைதீன் பேச்சு வார்த்தைக்காக எஸ்.பி. அலுவலகத்தில்தான் இரவு 8.30 மணிவரை இருந்துள்ளார். கலவரக்காரர்கள் மீது இரவு 7.00 மணிக்கு வழக்கு பதிவு செய்துள்ளனர். ஆனால் ஆசிக் அகமதுவிடம் அறிக்கை பெற்றதோ காலை 8.30 மணிக்கு வழக்கு பதிவு செய்ய 10 மணிநேரத்திற்குமேல் எடுத்துக் கொண்டதற்கான காரணம் புரியவில்லை.

இத்தனைக்கும் சமாதானம் பேசுகிறோம் என்றுதான் ஜமாஅத்திடம் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். ஆனால் கடுமையான பிரிவுகளில் வழக்குகள் பதியப்பட்டுள்ளன. மங்கலம் காவல்துறை குற்றங்களை களைய நடவடிக்கை எடுக்காமல் குற்றவாளிக்கு துணை நின்று பாதிக்ககப்பட்டவர்களுக்கு எதிராக செயல்படுவது இப்பகுதியில் குறிப்பாக தொழில் நகரமான திருப்பூரின் அமைதியை குலைக்கும்.

மருத்துவமனையிலிருந்த ஆசிக்அகமதுவை வெளியேறச் சொல்லி தொடர்ந்து காவல்துறை மிரட்டி வந்ததால் பயந்துபோன அவரது குடும்பத்தார் வழக்கறிஞரை அணுகி முன் பிணை பெற்றனர். முன்பிணை பெற்ற பின்பு மங்கலம் காவல்நிலையத்தில் கையொப்பமிட நீதிமன்றம் அறிவுறுத்தியது.

அதன்படி முதல்நாள் கையொப்பமிட சென்றபோது காவல் நிலையத்திலிருந்த பெண் காவலர். ஆய்வாளர் வேல்முருகனை பார்க்க வேண்டும் என 11.00 மணிக்கு வாருங்கள் என திருப்பி அனுப்பி வைத்தார்கள். 11.00 மணிக்கு சென்றபோது ஆய்வாளர் வேல்முருகன் "உங்களை யார் முன்பிணை பெறச் சொன்னது" என மிரட்டும் தொனியில் பேசினார்.

மேலும் ஆதார் கார்டு நகல், போட்டோ, முகவரி போன்றவற்றையும் வாங்கிக் கொண்டனர். அரசியல் சாசன சட்டம் வழங்கிய உரிமைகளை ஏன் பெற்றாய்? என ஆய்வாளர் கேட்டது, சட்டங்கள் முஸ்லிம்களுக்கு இல்லை என்பது போல உள்ளது.

இரு தினங்களுக்குப் பின் காவலர் கிருஷ்ணமூர்த்தி என்பவர் மீண்டும் முகவரியை வாங்கியதோடு மட்டுமல்லாமல் வீட்டிலுள்ள பெண்கள். குழந்தைகள் என அனைவரது விபரங்களையும் கேட்டார். ஏற்கனவே கொடுத்துள்ளோம் என்று கூறியபோதிலும் மீண்டும் வேண்டுமென வாங்கினார்கள். இரண்டு தினங்களுக்குப் பின் மீண்டும் சிறப்பு காவல் பிரிவைச் சேர்ந்த பாலாஜி என்பவர் அதேபோன்று முகவரி. பெண்கள். குழந்தைகள் போன்றோரின் விபரங்களைக் கேட்டார். ஏற்கனவே இருமுறை கொடுத்துவிட்டோம் என்று கூறிய பின்னும் விடாப்பிடியாக வாங்கினார்.

இவ்வாறு மங்கலம் காவல்துறையினரின் அத்துமீறலால் பயந்துபோன ஆசிக்அகமது, காதர்மைதீன் இருவரும் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் மனு அளித்து முறையிட்டனர். மாவட்ட காவல் கண்காளிப்பாளர் உமா அவர்களோ, மங்கலம் காவல் துறையினர் கூறியதையே திரும்பக் கூறி ஆசிக் அகமது, காதர்மைதீன் தரப்பு நியாயங்களை காது கொடுத்துக் கேட்கக் கூட கேட்கவில்லை.

மருத்துவமனையில் காலை 8.0 மணிக்கு அறிக்கை பதிவு செய்தும். மாலை 7.00 மணிக்கு எப்.ஐ.ஆர். பதிவு செய்துள்ளனர். இடைப்பட்ட நேரத்தில் நடந்ததை மாவட்ட காவல் கண் காணிப்பாளர் உமா அறிவாரா? என தெரியவில்லை. இச்செயல்கள் சிறுபான்மையினருக்கு விரோதமாகவும், அச்சம் ஏற்படுத்துவதாகவும் உள்ளது.

காக்க வேண்டிய காவல்துறையே பயங்கரவாதிகளுக்கு துணை போனால் அப்பாவி மக்களின் நிலைமையை எண்ணிப்பார்க்கவே அச்சமாக உள்ளது. சரியான பாதையில் பயணித்து குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

**திருப்பூரிலிருந்து ந.நி.**








இளைஞர்களை தீவிரவாதத்திற்கு தூண்டுவதாகவும் சட்ட விரோத பணப்பரிவர்த்தனை செய்ததாகவும் கூறி ஜாகிர் நாயக் மீது வழக்குப் பதிவு செய்தது தேசிய புலனாய்வு NIA, இதுகுறித்து சிவப்பு நோட்டீஸ் வெளியிட கூறிய NIA-யின் வேண்டுகோளை இண்டர்போல் நிராகரித்தது. இது NIA-க்கு ஏற்பட்டிருக்கும் கடும் பின்னடைவாகும்.

NIA-யின் சட்ட விரோத பணப்பரிவர்த்தனை வழக்கை விசாரித்த அமலாக்கத்துறை நீதிபதி மன்மோகன் சிங் NIA-விடம் சரமாரியான கேள்விகளை எழுப்பினார்.

# ஜாகிர் நாயக் மீது பாரபட்சம் தேசிய புலனாய்வு NIA மீது நீதிபதி கண்டனம்

ஜாகிர் நாயக்கையும், அசாராம் பாபுவையும் ஒப்பிட்டு பேசிய நீதிபதி ஜாகிர் நாயக்மீது காட்டிய அவசர நிலையை ஏன் ஆசாராம் பாபு மீது காட்டவில்லை என்றும் இந்த அவசர நிலையானது ஜாகிர் நாயக் மீது காட்டப்படும் பாரபட்சம் என்றும் நீதிபதி மன்மோகன்சிங் கண்டனம் தெரிவித்தார். மேலும் ஆசாராம்பாபு போல் என்னால் இன்னும் பத்தாயிரம் கோடிக்குமேல் சொத்து வைத்திருக்கும் பத்து பாபாக்களின் பெயர்களை கூற முடியும். ஆனால் அவர்கள் மீது நீங்கள் எடுத்த நடவடிக்கை தான் என்ன என்ற கேள்வியையும் NIA மீது நீதிபதி மன்மோகன் சிங் எழுப்பினார்.

மேலும் ஜாகிர் நாயக் அவர்களின் சொத்துக்களை முடக்குவதற்கு உண்டான குற்றங்களை அவர் செய்தார் என்றும், இளைஞர்களை தீவிரவாதத்திற்கு அவர் தூண்டினார் என்பதற்கான எந்த ஆதாரமுமில்லை. அவை இங்கு தெளிவுபடுத்தப்படவுமில்லை என்று நீதிபதி மன்மோகன் சிங் NIA-மீது குற்றம் சாட்டினார். மேலும் NIA ஜாகிர் நாயகின் சொத்துக் களை முடக்குவதற்கான எந்த ஆதாரமும் சமர்ப்பிக்க வில்லை என்றும் கூறியுள்ளார்.

தான் ஜாகிர் நாயக்கின் உரைகளை நிறைய கேட்பதுண்டு அதில் தவறான எந்த தூண்டுதலுமில்லை, பேச்சுமில்லை என்று கூறிய நீதிபதி தாங்கள் இதை தெளிவாக கேட்டதுண்டா என்ற கேள்வியை NIAயிடம் முன் வைத்தார்.

NIA தனது வசதிக்காக ஜாகிர் நாயக்கின் 99 சதவிகிதத்தை விட்டு விட்டு ஒரு சதவிகிதத்தை மட்டும் எடுத்துக்கொண்டு பாரபட்சம் காட்டுவது நீதிபதி மன்மோகன்சிங்கிற்கு பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. நீதிபதியின் NIA மீதான சந்தேகத்தால் வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

NIA யின் இஸ்லாமியர்கள் மீதான இந்த ஒருதலை பாரபட்சம் பாசிசத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள நெருக்கத்தை தோலுரித்துக் காட்டுகிறது என்பது நிதர்சன உண்மை.



# துப்பாக்கி...



**ஆர்.எஸ்.எஸ். பற்றி சொல்வதற்கு என்னிடம் எந்த செய்தியும் இல்லை. எதிர்கால இந்தியாவில் ஒற்றுமைக்கு எதிராக இருப்பார்கள் என்பது மட்டும் உண்மை. - பகத்சிங்.**

மூத்த பெண் பத்திரிகையாளரும், பகுத்தறிவாளருமான கௌரி லங்கேஷ் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ந் தேதி பெங்களூரில் இருக்கும் ராஜராஜேஸ்வரி நகரில் உள்ள தனது வீட்டின் முன் துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்யப்பட்டார்.

இந்தியா முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது இச்சம்பவம். இக்கொலைச் சம்பவம் தொடர்பாக, கர்நாடக அரசு சட்டம் ஒழுங்கு கூடுதல் கமிஷனர் பி.கே.சிங் தலைமையில் சிறப்புப் புலனாய்வு படை அமைக்கப்பட்டு தீவிர விசாரணை நடந்தது. 120 பேர் கொண்ட இப்படை 250 பேர்களுக்குமேல் விசாரித்தும் முன்னேற்றம் ஏற்படவில்லை. ஆனால் ஒரே ஒரு விஷயம் மட்டும் தெளிவானது.

பகுத்தறிவாளர், முற்போக்கு சிந்தனையாளர்களான நரேந்திரத போல்கர், கல்புர்கி, கோவிந்த் பன்சாரே ஆகியோரின் கொலையில் எவ்வித தடயமும் இல்லாமல் மிக நேர்த்தியாக செயல்பட்டிருப்பது தெரிந்தது. விசாரணையை நான்கு வகையாக இப்படிப் பிரித்தார்கள்.

1) தொழில் போட்டி, 2) தனிப்பட்ட பகை, 3) சித்தாந்தம் கொள்கைகள், 4) இந்து மத எதிர்ப்பு முதல் மூன்று விஷயங்களுக்கு ஆரம்பத்திலேயே ஆதாரம் இல்லை என்பது தெளிவானது.

"நான் ஒரு இந்து. என் மதத்தில் உள்ள குப்பைகளை அகற்றவும்,

பொய்களை புறந்தள்ளவும் எனக்கும் தகுதி யுள்ளது" என்பார் கௌரி லங்கேஷ். அதை செயல்படுத்தியும் காட்டினார். அது சங்பரி வாரங்களுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியது. சமயம் பார்த்து கௌரி லங்கேஷை காவு வாங்கி விட்டார்கள். இதுபற்றி கடந்த 2017 நவம்பர் "வைகறை வெளிச்சத்தில்" போராளி கௌரி லங்கேஷைக் கொலை செய்தது யார்? என்று கட்டுரையும் வெளிவந்தது. இதற்கு வலு சேர்க்கும் விதமாக கடந்த பிப்ரவரி-18 ந்தேதி கே.டி.நவீன்குமார் என்ற "ஹொட்டே மஞ்சா" (33) என்பவனை போலீஸ் கைது செய்தது.

மண்டிய மாவட்டம், மத்தூர் டி.வி.சார்கில் அருகே இவனுடைய வீடு உள்ளது. திம்மே கவுடா - இவனுடைய அண்ணன் முன்னால் ரவுடி. வயதான காரணத்தால் இப்போது வட்டித் தொழில் செய்கிறான். அண்ணனுக்கு ஆதரவாகவும் செயல்படும் இந்த நவீன்குமார் "ஹிந்து ஜாகிரணாவேதிகே" என்ற அமைப்பின் தலைவன்.

பிப்ரவரி 18-ந் தேதி பெங்களூர் உப்பார் பேட்டை காவல் சரகத்திற்கு உட்பட்ட "மெஜஸ்டிக் அரசு பேருந்து நிலையம் அருகே" கள்ள துப்பாக்கி தோட்டாக்களை விற்க முயலும்போது குற்ற புலனாய்வுப் பிரிவு போலீஸார் கைது செய்து விசாரித்ததில் கௌரி லங்கேஷ் கொலை சம்பவத்தில் இவன் மூளையாக செயல்பட்டதும் தெரியவந்தது. இவனிடமிருந்து 7.65 ரக நாட்டு துப்பாக்கியும் போலீஸ் கைப்பற்றியது. கௌரி கொலை வழக்கில் நவீன் கைது செய்யப்பட்ட தகவல் அறிந்த பாஸிட்டுகள் "மத்தூர்பந்த்" நடத்தினார் கள். காசு கொடுத்தால் எதை வேண்டுமானாலும் செய்யும் ஸ்ரீராம்சேனா தலைவன் "பிரமோத் முதாலிக்" பத்து பேரை வைத்துக்கொண்டு போராட்டம் நடத்தி பத்திரிகை செய்தியில் இடம் பிடித்தான். இவனிடம்தான் நவீன்குமார் பயிற்சி பெற்ற புகைப் படங்களை இங்கே பார்க்கலாம்.

கௌரி லங்கேஷ் கொலை வழக்கு குறித்து விசாரிக்க அனுமதி கோரி மார்ச் 2-ந் தேதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய நவீனை ஏழுநாள் விசாரிக்க அனுமதி அளித்தது. விசாரணையில் நிறைய தகவல்கள் வெளிவர துவங்கின. மேலும் ஐந்து நாள் போலீஸ் காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதித்தது. இப்போது நவீனிடம் உண்மை கண்டறியும் சோதனை நடத்தவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

12 நாள் விசாரணையில் அதிர்வை தந்த உண்மை. கே.எஸ்.பகவான் (72) என்ற ஆங்கில பேராசிரியர். இவர் மைசூர் மன்னர் அரசு கல்லூரியில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். முற்போக்கு சிந்தனையாளர் எழுத்தாளர், மாநில அரசின் பல்வேறு விருதுகள் பெற்றவர்.

பகவத்கீதை, மனுஸ்நதி போன்ற நூல்களை பகிரங்கமாகவே தீயிட்டுக் கொளுத்தியவர். காவல் நிலையத்தில் பல்வேறு வழக்குகள் இவர் மீது உண்டு. பாசிஸ்ட்டுகளை பகிரங்க மாக எதிர்த்து வருபவர். அவர்களின் அடுத்த குறி இவர்தான். ஒரு வாரம் தாமதமானாலும் நவின் இவரை கொலை செய்திருப்பான். கர் நாடக அமைச்சர் ரமாநாத்ராயையும் கொலை செய்யும் திட்டம் இருந்தது தெரியவந்தது.

தங்களுக்கு எதிராக எவர் வாய்திறந்தாலும் அவர்களுக்கு வாக்கரிசி போடுவதை வழமையாக வைத்துள்ளார்கள் பாசிஸ்ட்டுகள். வன்முறையை வழிமுறையாக கொண்ட இவர்கள் இந்த தேசத்தில் அமைதியை அப்புறப் படுத்தியே ஆக வேண்டும் என்பதில் தீவிரமாக உள்ளார்கள். இவர்களுக்கு அதிகார வர்க்கமும், நக்கிப் பிழைக்கும் ஊடகங்களும் உறுதுணை யாக இருக்கிறது.

நடுநிலை இந்துக்கள், காவிகளின் சுயரூபம் அறிந்த சிந்தனையாளர்க்ள என எவரும் தங்களுக்கு எதிராக வாய்திறக்கக் கூடாது. தாங்கள் கூறும் பொய்களுக்கு ஆமா போட வேண்டும். அல்லது மௌனமாக இருக்க வேண்டும் என நடைபெற்ற கொலைகள் மூலம் எச்சரிக்கின்றார்கள்.

வெகு ஜன இந்துக்கள் இவர்களை அடை யாளம் கண்டு ஒதுக்கி ஓரம் கட்டுவதன் மூலம் இந்த நாட்டின் ஒற்றுமையை காப்பாற்றவும், மனித நேயத்தை மலரச் செய்யவும் முடியும்.

**- எம்.எஸ்.கமாலுதீன்**

# சிரியாவில் நடப்பது என்ன? கருத்தரங்கம்



2018-ன் ஆரம்ப காலங்களிலே அதிகம் மக்கள் மத்தியிலும், சமூக வலைத் தளங்களிலும் பேசப்பட்ட விஷயம், எல்லா தரப்பு மக்களையும் கவலையிலும், சோகத் திலும் ஆழ்த்திய விஷயம். "சிரியா" கொத்துக் கொத்தாக பச்சிளங் குழந்தைகள் குண்டு மழையால் குறி வைத்து கொல்லப்பட்டுக் கொண்டிருந்தார்கள். கரையாத உள்ளமும் கரைகின்ற அளவு அழாத கண்களும் அழுகின்ற அளவுக்கு கொடூரம் நடைபெற்றுக் கொண்டி ருந்தது சிரியாவில்...

பலரும் தங்களது எதிர்ப்புகளையும், கண்டனங்களையும் தெரிவித்துக் கொண்டி ருந்தார்கள்.

**என்ன காரணம்?**

அங்கு நடக்கும் யுத்தத்திற்கு பலரும் பல காரணங்களை சொல்லிக்கொண்டு இருந் தார்கள். அதிலே அதிகமாக சொல்லப்பட்ட காரணம் "ஷியா-சுன்னி" என்று சொல்லிக் கொண்டிருந்தார்க்ள. அதன் உண்மைத் தன்மையை எடுத்துக் கூறிட தாருல் இஸ்லாம் ஃபவுண்டேசன் டிரஸ்ட்" கடமைப்பட்டது. பல ஊர்களில் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. அதன் அடிப்படையில் 18-03-2018 ஞாயிற்றுக் கிழமை ஏற்பாடு செய்யப்பட்டது. திளான மக்கள் கலந்துகொண்டார்கள். (அல்ஹம்து லில்லாஹ்)

அதன்பிறகு சகோதரர் இம்தியாஸ் (வைகறை வெளிச்சம் ஆசிரியர் குழு) அவர்கள் சிறப்புரையாக "சிரியாவில் நடந்து கொண்டி ருப்பது என்ன? என்பதை பல ஆதாரங்களுடன், வரலாற்றுப் பின்னணியுடன் விவரித்துக்



கூறினார். முதலாவதாக சிரியாவில் பசர் அல் ஆசாத்தினுடைய தந்தையின் 40 ஆண்டுகால ஆட்சியில் இல்லாத யுத்தம், அவருக்குப் பின் மகன் ஆசாத்தின் 18-20 ஆண்டுகள் இல்லாத யுத்தம், 2011 மார்ச் மாதம் முதல் எப்படி ஆரம்பிக்கப்பட்டது? என்றும் விளக்கிக் கூறினார்.

சிரியாவில் ஏற்பட்ட யுத்தத்திற்கு காரணம் பசர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு எதிராக ஏற்பட்ட கிளர்ச்சிக் குழுதான்.

**இந்த கிளர்ச்சிக்கு குழு உருவானதின் பின்னணி என்ன?**

2011 மார்ச் மாதம் 15 பேர் கொண்ட ஒரு குழு எங்களுக்கு வேலை வாய்ப்புகளும். சலுகைகளும் கிடைப்பது இல்லை. சலுகைகள் அனைத்தும் ஷியாவைச் சேர்ந்த அலவிகளுக்கே கிடைக்கின்றது என்று போராட்டங்களை நடத்தினார்கள். அந்த 15 நபர்களையும் சிரியா அரசு கைது செய்து பல கொடுமைகளைச் செய்கிறார்கள். அதில் ஒரு நபர் இறந்து விடுகிறார். சிரியா இராணுவத்தில் உள்ள வீரர்கள் சிலர் அந்த நபர்களுக்கு சில உதவிகள் செய்கிறார்கள். இதையறிந்த பசர் அல் ஆசாத் அந்த இராணுவ வீரர்களை பணியிலிருந்து நீக்கி விடுகிறார்.

அந்த இராணுவ வீரர்கள்தான் ஒரு குழுவை அமைக்கின்றனர். "ஃபிரிசிரியன் ஆர்மி" என்ற அதற்குப் பெயர். இந்த குழுவிற்கு முதலில் ஓடிவந்து உதவியது அமெரிக்கா. இந்த குழுவிற்காக அமெரிக்கா ஒதுக்கிய நிதி 500 மில்லியன் டாலர். இந்த ஒரு விஷயம் போதும் சிரியா யுத்தத்திற்கு பின்னணி என்ன- என்பதை தெரிந்துகொள்ள. அமெரிக்கா இங்கு கிளர்ச்சிக்கு ழுவிற்கு உதவுவதன் மூலம் தனக்கு தேவையான ஒரு பெதம்மைப அரசை நிறுவ முயற்சி செய்துகிறது.

**இதை அமெரிக்கா செய்வதன் காரணம் என்ன?**

செப்டம்பர் 11, இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்ட பொழுது புஷ் சொன்ன வார்த்தை "நவீன சிலுவை யுத்தம்" தொடங்கப் பட்டுள்ளது என்று. அதன் தொடர்ச்சியாகத்தான் முஸ்லிம்களையும், முஸ்லிம் நாடுகளையும் அழித்து ஒழிக்கவே இதை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஒருபுறம் அமெரிக்காவும், இன்னொருபுறம் ரஷ்யாவும் சேர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் நடத்திய இந்த தாக்குதலில் மட்டும் 7 லட்சம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். வரலாற்றில் எங்கும் காணப்படாத அளவிற்கு 4 கோடி மக்கள் அகதிகளாக ஆக்கப்பட்டுள்ளனர்.

சிரியா அமெரிக்காவும், ரஷ்யாவும் தன்னுடைய அணு ஆயுதங்களை சோதித்துப் பார்க்கும் இடமாக மாற்றப்பட்டுள்ளது. அதிகாரப்பூர்வமாக 24 முறை இரசாயன குண்டுகளைப் பரிசோதித்துப் பார்த்து இருக் கிறது. அங்கு அமெரிக்கா நடத்தும் தாக்குதல் சிலுவை யுத்தத்தின் தொடர்ச்சியே, ஆனால் அங்கு நடைபெறும் யுத்தத்திற்கு சொல்லப்படும் பொய்யான காரணம் சிரியா எண்ணெய் வளமிக்க நாடு. எண்ணெய் வளத்தை கையகப் படுத்தவே அமெரிக்கா தாக்குதல் நடத்துகிறது என்று. அமெரிக்காவிற்கு சிரியாவை விட்டால் எண்ணையே இல்லையா? சவூதி இன்றுவரை



இலவசமாக எண்ணையை வழங்கிக் கொண்டு இருக்கிறது. ஈராக்கில் ஒரு நகரம் அவர்கள் கட்டுப்பாட்டில் இருக்கிறது. அங்கிருந்து எண்ணெய் வழங்கப்படுகிறது.

சிரியாவில் இருக்கும் எண்ணெய் அமெரிக் காவிற்குத் தேவையில்லை. அது தன்னுடைய லட்சியத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. முதல் சிலுவை யுத்த காலங்களில் முதல் 3 யுத்தங்களில் மட்டும் வெற்றி பெற்றார்கள். அதைக் கடந்து அவர்களால் முஸ்லிம்களை வெற்றிகொள்ள முடியவில்லை. தோற்றுப் போனார்கள். இவர்களை எதிர்த்து யுத்தம் செய்து வெற்றி பெற முடியாது என்று உணர்ந்து மார்க்கத்தில் குழப்பங்களை உருவாக்கினார்கள். முஸ்லிம்களை பிளவு படுத்தினார்கள். அதில் வெற்றியும் கண்டார்கள். அதில் ஒன்றுதான். "லாரன்ஸ் ஆஃப் அரபியா" என்று சொல்லக் கூடிய ஒருவனை வைத்து ஆட்சியாளர்களுக்கு மத்தியிலும் குழப்பங்களை ஏற்படுத்தினார்கள்.

அதைப் புரிந்துகொள்ள முடியாத முஸ்லிம்கள் எதிரிகளின் சூழ்ச்சிகளை அறியாமல் அல்ல எதிரிகளையே அறியாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சவூதி போன்ற நாடுகள் எதிரிகளுடன் இணைந்து முஸ்லிம்கள் மேலே தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கிறது. சவூதி தன் நாட்டில் மரண தண்டனை கைதிகள் 1000 நபர்களை வைத்து சிரியாவில் இறக்கி தாக்குதலை நடத்துவதற்கு அந்த 1000 நபர் களின் குடும்பங்களுக்கு சம்பளம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அல்லாஹ் யாரை எதிரி என்று அடையாளம் காட்டினானோ அவர்களை விட்டு விட்டு, எதிரிகளுடன் கரம் கோர்த்துக் கொண்டு சொந்தமக்களையே கொன்று குவித்துக் கொண்டிருக்கிறது.

நாம் புரிந்துகொள்ள வேண்டியது சிரியா வில் நடப்பது ஷியா, சுன்னா பிரச்சனை அல்ல. அங்கு நடப்பது அமெரிக்கா நடத்தும் சிலுவை யுத்தம். நாம் புரிந்துகொள்ள வேண்டியது நம்முடைய எதிரி யார் என்று. எதிரிகளை அடையாளம் கண்டு அதற்கு எதிரான திட்டங்களை தீட்ட வேண்டும்.

எதிரிகளை அடையாளம் கண்டதால்தான் ஆப்கன் தாலிபான்களும். சோமாலியர்களும் வெற்றி பெற்றார்கள் என்று சகோதரர் இம்தியாஸ் அவர்கள் தமது உரையை நிறைவு செய்தார்.

அதற்குப் பிறகு த.மு.மு.க.வின் மாநில செயற்குழு உறுப்பினர் சகோதரர் முஜிபுர் ரஹ்மான் அவர்கள் உரை நிகழ்த்தினார். அவரைத் தொடர்ந்து தாருல் இஸ்லாம் ஃபவுண்டேசன் டிரஸ்டின் தலைவர் மு. குலாம் முஹம்மது உரை நிகழ்த்தினார்கள். உரையில் நாம் கேள்விப்படாத பல புதுத் தகவல்களை அடுக்கடுக்கான ஆதாரங்களோடு முன் வைத்தார். அனைவரும் திகைப்புடன் கேட்டுக் கொண்டிருந்தனர். உரையில் தன் மன வருத் தத்தை பதிவு செய்தார். அது என்னவென்றால் திராவிட பத்திரிகையான "விடுதலையில் ஒரு செய்தி இடம் பெற்றிருந்தது. அது "அகண்ட இஸ்ரேலுக்காக சிக்கிக்கொண்ட சிரியா" என்று.

இந்த செய்தி ஏன் முஸ்லிம்களுக்குத் தெரிய வில்லை. திராவிட பத்திரிகைகள் நினைத்து இருந்தால் இஸ்லாத்தை விமர்ச்சித்திருக்கலாம். ஆனால் அந்த செய்தியை அப்படியே இடம் பெறச் செய்திருந்தனர். இந்த செய்தி முஸ்லிம் களுக்கு ஏன் தெரியவில்லை? என்பது எனக்கு மிகுந்த மன வருத்தத்தை ஏற்படுத்துகிறது. இவ்வளவு தெளிவாக தகவல்கள் இருந்தும் முஸ்லிம்கள் ஷியா-சுன்னா பிரச்சனை என்று கூறிக்கொண்டு இருக்கின்றனர். காலை நடை பெற்ற மால்கம் X கருத்தரங்கில் பேசிய பவானி இளவேனில் என்ற பெண்மணி "சிரியாவைப் பற்றி பேச ஆரம்பித்த பொழுது நான் சற்று கவலைப்பட்டேன். எங்களிடம் இஸ்லாம் பற்றி பேச அழைத்திருக்கின்றீர்கள். சிரியாவில் உங்கள் இறைவன் என்ன செய்கிறான் என்று ஏதாவது விமர்சனம் வைப்பாரே என்று எண்ணினேன். ஆனால் அந்த பெண்மணி முத்தாய்ப்பாக வார்த்தைகளைக் கூறினார்.

சிரியாவில் ஷியா-சுன்னா என்று கருத்து வேறுபாடு உள்ளது. அதைக்கண்டு அவர்கள் சண்டை போடவில்லை. அகண்ட இஸ்ரேலுக் காக இஸ்ரேலும், சிலுவை யுத்தத்திற்காக அமெரிக்காவும் அங்கு கொலைகளை நடத்திக் கொண்டிருக்கின்றன. இவர்களுக்கெல்லாம் தெரிந்த செய்தி ஏன் இஸ்லாமிய சமூகத்திற்கு தெரியவில்லை என்று கேள்வி எழுப்பினார்.




ஷியாக்கள் என்று சொல்கிறோம் ஒவ்வொரு நிலையிலும் இஸ்லாத்திற்கு எதிரான செயல்கள் நடைபெறும் போதெல்லாம் ஷியா என்று சொல்லக்கூடிய இவர்கள் தான் முதலில் எதிர்ப்பைக் காட்டினார்கள்.

பெருமானாரையும். மனைவிமார்களையும் இழிவாக பேசியபோது ஈரானின் அதிபர் கொமேனி அவர்கள் தான் முதலில் பேசியவ னின் தலைக்கு சன்மானம் அறிவித்து அவனின் தலையைக் கேட்டார்கள். அப்போது சுன்னாவை பேசக் கூடியவர்களும் இருக்கத்தான் செய்தனர். இந்த யுத்தத்திற்கு அமெரிக்கா 2018 ஆம் ஆண்டில் 550 மில்லியன் டாலர் ஒதுக்கி இருக்கிறது.

இதில் 300 மில்லியன் டாலர் சிரியாவிற்கும், 250 மில்லியன் டாலர் துருக்கிக்கும் ஒதுக்கியிருக்கிறது. நமக்கு ஒரு கேள்வி எழும். அது துருக்கிக்கு எதற்கு என்று- துரக்கியில் குர்திஸ் என்று சொல்லக்கூடிய ஒரு கூட்டம் உள்ளது. அந்த கூட்டத்தை எர்துகானின் ஆட்சிக் கெதிராக தூண்டி விட இப்பொழுதே 250 மில்லியன் டாலர் ஒதுக்கியுள்ளது.

நாம் நன்றாக புரிந்துகொள்ள வேண்டியது இஸ்லாத்தின் எதிரிகள் 2064 வரை திட்டம் போட்டு வைத்திருக்கிறார்கள். ஆனால் நாளைக்கான திட்டம் நம்மிடம் இல்லை என்பது வேதனையளிக்கிறது. நாம் செய்ய வேண்டியது எதிரிகளை அறிந்து அவர்களுக்கு எதிரான திட்டங்களை தீட்ட வேண்டும். நாம் நம்மை மாற்றிக்கொள்ள வேண்டும்.

"எந்த ஒரு சமூகமும் தன்னைத்தானே மாற்றாதவரை அல்லாஹ் மாற்ற மாட்டான்" நாம் மாறவில்லை என்றால் அல்லாஹ் நம்மை அழித்துவிட்டு வேறு சமூகத்தை உருவாக்கி வேலை வாங்குவான்" என்று கூறி உரையை நிறைவு செய்தார். (அல்ஹம்துலில்லாஹ்) உரை முடியும் வரை யாரும் தங்கள் இருக்கையை விட்டு நகரவே இல்லை.

திருப்பூரிலிருந்து ந.நி.




# தாஃவா



**24-02-2018** அன்று தஞ்சை மாவட்டம், சுவாமிமலை அன்னை திருமண மண்டபத்தில் "விடுதலையை நோக்கி வெற்றி பயணம்" என்ற சமூக விழிப்புணர்வு தாஃவா நிகழ்ச்சி காலை 11.30 மணியளவில் ஆரம்ப மானது. நிகழ்விற்கு விடுதலை சிறுத்தை கள் கட்சியின் மாநில கொள்கை பரப் புச் செயலாளர் தலைமை வகித்தார்.

நிகழ்ச்சியை குடந்தை ஸ்ரீநகர் காலனி மஸ்ஜிதே நூர் பள்ளிவாசல் இமாம் ஏ.எஸ்.முஹம்மது பாகவி அவர்கள் கிராஅத் ஓதி துவக்கி வைத்தார். திராவிட நாத்திகன் வரவேற்புரையாற்ற நிகழ்ச்சிக்கு முன்னிலை வகித்த எருமைப் பட்டி நா. முருகேசன், குடந்தை சட்ட மன்ற தொகுதி வி.சி.க செயலாளர் கா.செ. முல்லைவளவன், நீலபுலிகள் இயக்க மா.பொறுப்பாளர் டி.வி.பாலு, குடுந்தை ஒன்றிய வி.சி.க செயலாளர் க.செ.சசிக் குமார், பாபுராஜபுரம் ஜனாப் ஜி.ஆசாத்அலி, ஹாஜி முஹம்மது ஜக்கரியா ஆகியோர்கள் பேசும்போது இந்த பகுதியிலே கடந்த 30 வருட காலமாக தீண்டாமைக்கு எதிராக போராடியும் சமூகத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. மாறாக தீண்டாமை என்பது புது வடிவம் பெற்று மக்களிடையே வேற்றுமை





# நிகழ்ச்சி

உணர்வை மேன்மேலும் வளர்க்கிறதே தவிர தீண்டாமை ஒழியவில்லை. எனவே தீண்டா மைக்கு உலகில் நிரந்தரத் தீர்வு எது என்றால் அது "இஸ்லாம்" என்னும் அருமருந்தே என சூளுரைத்தனர்.

நிகழ்ச்சிக்கு சிறப்பு கருத்துரையாளராக வருகைபுரிந்த உயர்நீதிமன்ற வழக்கறிஞர் பொ. ரெத்தினம் அவர்கள் பேசும்போது...

இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மதத்தின் பெயரால் இழைக்கப்படும் கொடுமை களுக்கு உரிய நீதி கிடைப்பதில்லை என்று இத்தகைய கொடுமைகளுக்கு எதிராக பல்வேறு வழக்குகளில் நீதியை பெற்றுத் தந்ததையும், இத்தகைய கொடுமைகளுக்கு சமூக மக்கள் அனைவரும் போராட வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

முதல் அமர்வின் தலைமை உரை நிகழ்த்திய விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநில கருத்தியல் பரப்புரை துணைச் செயலாளர் செ.அரசாங்கம் பேசும்போது...

இந்து மதத்தில் தாழ்த்தப்பட்டவர்களை புராணங்கள் மூலமாகவும் சாஸ்திரங்கள் மூலமாகவும் இதிகாசங்கள் மூலமாகவும் எவ்வாறு அடிமைப்படுத்தி, கேவலப்படுத்தி நடத்துவதை ஆதாரத்தோடு பேசினார். மேலும் தான் ஒரு மத்திய அரசு ஊழியனாக இருந்து கொண்டு இந்த பகுதியிலே தீண்டாமைக்கு எதிராக போராடி வெற்றி கண்டதையும், அந்த வெற்றியானது ஒரு குறிப்பிட்ட காலம் வரை மட்டுமே பயனுள்ளதாக இருந்ததெனவும் அதன்பிறகு தீண்டாமை கொடுமை புதுப் பொலிவுடன் மீண்டெழுந்ததையும் குறிப்பிட்ட அவர் தற்கால இளைஞர்கள் அம்பேத்கர், பெரியார் போன்ற தலைவர்களின் சிந்தனையில் அவர்களுடைய பயணம் அமையவில்லை என்பதை வேதனையுடன் குறிப்பிட்டார். தாழ்த்தப்பட்டவர்கள் அனுபவிக்கும் கொடுமைகளுக்கு நிரந்தரத் தீர்வு "இஸ்லாம்" மார்க்கம் ஒன்றே என்று தீர்ப்பு சொன்ன அவர் இறுதியாக அம்பேத்கர் சொன்னதுபோல் இந்துவாக பிறந்தது என் குற்றம் அல்ல என்றார். ஆனால், நான் ஒரு இஸ்லாமியனாகத்தான் இறப்பேன் என உரையை முடித்தார்.

இரண்டாம் அமர்வு.... மாலை 3 மணியள வில் குடந்தை பிஸ்மி புக் சென்டர் உரிமை யாளர் ஹாஜி எம்.ஒய்.சம்சுதீன் அவர்கள் தலைமையில் இனிதே துவங்கியது. ஜனாப் ஏ.முஹம்மது ஆரிப் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தி நிகழ்ச்சிக்கு முன்னிலையாக குடந்தை ஸ்ரீநகர் காலனி மஸ்ஜிதே நூர் பள்ளிவாசல் செயலாளர் ஹாஜி எம்.அல்லாபக்ஸ், துணைச் செயலாளர் ஹாஜி ஏ.சர்புதீன், தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் துணைச் செயலாளர் ஹாஜி ஏ. அப்துல் ரவூஃப் ஆகியோர்கள் பேசும்போது...





மனித குலத்திற்கு கிடைத்த மாபெரும் பொக்கிஷம் "இஸ்லாம்" என்ற கருத்தை வலியுறுத்தினார்கள். சிறப்பு கருத்துரையாளராக கலந்துகொண்டு பேசிய வைகறை வெளிச்சம் மாதஇதழ் ஆசிரியர் ஜனாப் மு. குலாம் முஹம்மது அவர்கள் பேசும்போது...

இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் போல் அமெரிக்காவிலும் நிறவெறியும் அடிமைத் தனமும் இருந்தது. அதை எதிர்த்து "இஸ்லாம்" என்னும் அருமருந்து மூலம் வெற்றி கண்டவர் மால்கம்-X ஆவார். அதேபோல் உலக நாடு களில் இதுபோன்ற இழி நிலை இருந்து கொண்டுதான் இருக்கிறது. அதற்கான நிரந்தர மான ஒரே தீர்வு இஸ்லாத்தை தன் வாழ்க்கை நெறியாக ஏற்றுக்கொள்வதே என்றார்.

அடுத்ததாக உரை நிகழ்த்திய அரக்காசி அம்மாள் பள்ளிவாசல் இமாம் ஹாஜி கே.எம். அப்துல் அஜிஸ் அவர்கள் பேசும்போது... இஸ் லாத்தின் ஒழுக்க நெறிகள் அதன் மகத்துவம் மற்றும் சமத்துவம் சகோதரத்துவம் ஆகியவைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

நன்றியுரை வழங்கிய கொந்தகை ஜனாப் மா. தாஹிருல்லா, நிகழ்ச்சியில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றி கூறி பேசும்போது... தான் ஏற்றுக்கொண்ட இஸ்லாம் என்பது பொருளாதார மாற்றம் சமத்துவத்திற்கான மாற்றம் சுதந்திரத்திற்கான மாற்றம் என்றும் என்னை நல்வழிப்படுத்திய எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்கே என்று கூறி உரையை முடித்தார்.

நிகழ்ச்சியில் பெருந்திரளாக ஆண்களும், பெண்களும் சமூக சிந்தனையாளர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். அனைவருக்கும் மதிய உணவாக பிரியாணி பரிமாறப்பட்டது. நிகழ்ச்சி மாலை 5.30 மணியளவில் நிறை வடைந்தது.

நிகழ்ச்சி சிறப்பாக அமைய களப்பணி யாற்றிவர்கள் ஜனாப். ஏ.முஹம்மது ஆரிப், துணை வட்டாட்சியர், ஜனாப் பி.ஜே.சைப் புல்லா, சுவாமிமலை, கொந்தகை ஜனாப் மா. தாஹிருல்ல, ஜனாப். முஹம்மது சலீம், சோழபுரம், ஜனாப் எம்.வி.ஷாஜஹான், பொன் பேத்தி, ஜனாப் யாஸீன், அன்பகம் தாஃவா குழுவினருக்கு அல்லாஹ் ஈருலக வெற்றியைத் தந்து மென்மேலும் அல்லாஹ்வின் பாதையில் பயணிக்க உதவி புரிவானாக

- யாசர் அரஃபாத்

# அய்.ஏ.எஸ், அய்.பி.எஸ் அதிகாரிகளை இந்துத்துவ ஆதரவாளர்களாக மாற்ற மத்திய அரசு சதித்திட்டம்

**அய்ஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகளை இந்துத்துவ ஆதரவாளர்களாக மாற்ற மத்திய அரசு சதித்திட்டம் தீட்டுவதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் ஜி.ராம கிருஷ்ணன் குற்றம்சாட்டியுள்ளார்.**

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், ''மத்திய அரசின் ஊழியர் மற்றும் பயிற்சித்துறை அய்ஏஎஸ், அய்பிஎஸ், அய்எப்எஸ், அதிகாரிகளின் பணிகளை மேம்படுத் திட மன ஒருமைப் பாட்டுப் பயிற்சித் திட்டம் ஒன்றை கோவைக்கு அருகில் ஜக்கி வாசுதேவ் நடத்தும் ஈஷா மய்யத் தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக செயல்படுத்தி வருகிறது.

இந்திய ஆட்சி மற்றும் அதிகார மய்யத்தில் உள்ள அதிகாரிகளை மத்திய பாஜக அரசு இந்துத்துவா செயல் திட்ட பாதையில் திட்ட மிட்டுத் திருப்பும் நடவடிக்கை யின் பகுதியாகவே இந்த பயிற்சித் திட்டத்தை ஈஷா மய்யத்தில் ஆண்டுக்கு இரு முறை நடத்தி வருகிறது. இது மதச்சார்பின்மைக்கும், நாட் டின் அரசியல் சாசன நெறி முறைகளுக்கும் விரோதமான தாகும்.



ஈஷா மய்யத்தை நடத்தும் ஜக்கி வாசுதேவ் வனப்பகுதிகளில் வசிக்கும் ஆதிவாசி மக்களை அச்சுறுத்தி அவர்களுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து அவர்களை வெளியேற்றுவது, வனத்துறைக் குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமிப்பு செய்வது, வனப் பகுதியை வணிக சுற்றுலாப் பகுதி என்ற பெயரில் வணிக ரீதியில் பயன்டுத்துவது, வன விலங்குகளின் நடமாட்டப் பாதையில் அனுமதியின்றி கட்டடங்கள் கட்டுவது, தியானம் என்ற பெயரில் சிறுவர்கள், பெண்களை தன் வயப்படுத்துவது, சுற்றுச் சூழலை சீரழிப்பது உள்ளிட்ட நடவடிக்கையில் தொடர்ச்சி யாக ஈடு பட்டு வருவதால் அவர் மீது பல்வேறு புகார்கள், குற்றச்சாட்டுகள், வழக்குகள் உள்ளன.

இத்தகைய குற்றப் பின்னணியை கொண்ட ஜக்கி வாசுதேவ் ஈஷா மய்யத்தில் அகில இந்திய பணியைச் சேர்ந்த அய்ஏஎஸ், அய்பிஎஸ், அய்எஃப்எஸ் அதிகாரிகளின் பணியை மேம்படுத்தி ஒழுங் கமைக்கும் மத்திய அரசுத் துறை இத்தகைய பயிற்சித் திட்டத்திற்கு அவர்களை அனுப்பிவைப்பது மத்திய, மாநில அரசுகளின் உயர்நிலை நிர்வாகத்தில் அவருக்கான ஆதரவு சக்திகளை உருவாக் கவும், அவர்களிடையே பாஜக வின் இந்துத்துவ வகுப்புவாத கருத்தியல் சிந்தனையோட் டத்தை திணிப்பதற்கான நடவடிக்கையே தவிர வேறல்ல என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

எனவே கடந்த இரண்டு ஆண்டுகளாக அய்ஏஎஸ், அய்பிஎஸ், அய்எப் எஸ் உயர் அதிகாரிகளுக்கான மேம்பாடு, நிர்வாக நுணுக்கம் மற்றும் ஒழுங்கமைப்பு பயிற்சிகளை குற்றப்பின்னணி உள்ள ஜக்கி வாசுதேவ் ஈஷா மய்யத்தில் நடத்தி வருவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

**இத்தகைய பயிற்சி அவசியம் எனில் மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் முசோரியில் உள்ள லால்பகதூர் சாஸ்திரி நிர்வாகப் பயிற்சி அகாடமியில் நடத்திட வேண்டும்'' என்று ஜி.ராம கிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.**

# வரலாற்றைத் திருத்தி அமைக்க பாஜகவின் புதிய திட்டம்



**சங்கிகளுக்குப் பிடிக்காத ஒன்று வரலாறு**

அவர்களின் சமகால வரலாறு என்றால் அது வெள்ளைக்காரனிடம் மன்னிப்புக் கடிதம் கொடுத்தது, காந்தியைக் கொன்றது, மதக் கலவரங்கள், பாபர் மசூதி இடிப்பு.. இப்படித்தான் இருக்கும்.

பழைய வரலாறு என்றால் கைபர் - போலன் கணவாய் கண்முன் தோன்றி அச்சுறுத்தும்.

அதுவும் இப்போது ஆரியர் நுழைவு, சமஸ்கிருதம் எல்லாம் மத்திய ஆசியாவுடன் தொடர்புடையன, எல்லாம் அங்கிருந்து வந்ததுதான் என்பது டி.என்.ஏ சோதனைகள் மூலம் உறுதியாகி விட்டன. சென்ற ஆண்டு மத்தியில் (பார்க்க: ஜூன் 19, 2017, The Hindu)

ஆரியர்கள் இங்கு கொஞ்சம் கொஞ்சமாக நுழைந்த நாடோடிகள்தான் என்பது இப்படி சோதனைகளின் ஊடாக உறுதியானது. சுமார் 175 ஆண்டுகளுக்கு முன் 19ம் நூற்றாண்டிலேயே இவர்களின் புனித மொழியாகிய சமஸ்கிருதம் மத்தியாசியாவிலிருந்து வந்ததுதான் என்பதும், அது இந்திய பூர்வ திராவிட மொழிகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டது என்பதும் உறுதி செய்யப்பட்டு விட்டது.

நடுவில், சென்ற முறை இவர்கள் ஆட்சிக்கு வந்தபோது சில வரலாற்று ‘ஃப்ராட்’ வேலை களைச் செய்தார்கள். இந்தியாவில் குதிரைகள் கிடையாது. மத்திய ஆசியாவிலிருந்து வந்த ஆரியர்கள்தான் குதிரைகளைக் கொண்டு வந்தனர். அதெல்லாம் ஒன்றுமில்லை குதிரைகள் இங்கேயே இருந்தன என ‘நிறுவ’ அவர்கள் ஒரு வேலை செய்து அசிங்கப்பட்டனர்.

இன்று அமெரிக்கா போன்ற நாடுகளில் க்ரீன் கார்டுடன் குடியேறியுள்ள ஆர்.எஸ். எஸ் இந்து உயர் சாதியினர். சிந்துவெளி முத்திரைகளைத் தாங்கள் படித்து விட்டதாகவும், குதிரைகள் என்பன ஆரியர் கொண்டு வந்த மிருகம் அல்ல, அது சிந்து வெளியிலேயே இருந்ததுதான் என்றும்

ஒரு கதையை அவிழ்த்தனர். இங்கு சிந்துவெளி நாகரிகத்திலேயே குதிரைகள் பயன்படுத்தப் பட்டதாக ஒரு அதிரடி அறிவிப்பைச் செய்தனர்.

அப்போது இத்துறையில் வல்லுனர் களான ஸ்டீவ் ஃபார்மெர், மிஷேல் விட்செல் எனும் இரண்டு அறிஞர்கள் அவர்களின் ஃப்ராடு ஆராய்ச்சியை அம்பலப்படுத்தினர். அவர்களின் முயற் சியை வெறும் கம்ப்யூட்டர் கிராஃபிக்ஸ் மூலம் செய்துள்ள அசட்டுத்தனம் என நிறுவியதோடு அது கிராஃபிக்ஸ் இல்லை என நிறுவினால் 1000 டாலர் பரிசளிப்ப தாகவும் அறிவித்து அவர்களை அசிங்கப் படுத்தினர். அப்ப வாயை மூடுனவய்ங்க தான் பய புள்ளைக இன்னைக்கு வரைக்கும் வாயைத் திறக்கல.

## இப்போது மெதுவாகப் பேசத் தொடங்கியுள்ளார்கள்

ஆர்.எஸ்.எஸ்சின் பேச்சாளராக உள்ள மன்மோகன் வைத்யா இதைப் பற்றிச் சொல்லும்போது, “இந்திய வரலாற்றின் உண்மையான வர்ணம் காவிதான். ஒரு கலாச்சார மாற்றத்தை ஏற்படுத்த வரலாற்றை மாற்றி அமைத்தாக வேண்டும்“ - எனக் கூறியுள்ளார்

ஆர்.எஸ்.எஸ்சின் “ஆராய்ச்சி” அணித் தலைவர் பல்முகுந்த் பாண்டே என்பவர், “நான் கலாச்சார அமைச்சர் மகேஷ் சர்மாவைத் தொடர்ந்து சந்தித்துக் கொண்டுள்ளேன். இந்தியா வின் வரலாற்றைப் புதிதாக எழுதி அதன் பெருமையை நிலை நாட்ட வேண்டிய காலம் கனிந்து விட்டது..” என வெளிப் படையாகவே ஆர்.எஸ்.எஸ்தான் கலாச் சார அமைச்சரை வழி நடத்துகிறது என்பதைச் சொல்லியுள்ளார்.

கே.என்.தீட்சித் என்பவர்தான் வரலாற் றைத் திருத்தி அமைப்பதற்கான இந்தக் குழுவின் தலைவராம். கேள்விப்பட்டிருக் கிறீர்களா? சத்தியமாகக் கேள்விப்பட்டி ருக்க வாய்ப்பே இல்லை. அவ்வளவு புகழ் பெற்ற அறிவுக் களஞ்சியங்கள் இவர்கள். அப்புறம் யாரோ சந்தோஷ் குமார் சுக்லா, ரமேஷ் சந்த் ஷர்மா.. இப்படிப் பதினாலு பேர்கள் என்ன மாதிரி வரலாற்றைத் திருத்தி எழுதப் போகிறார்கள், எப்படி இந்த டி.என்.ஏ கண்டுபிடிப்பை எல்லாம் முறியடிக்கப் போகிறார்கள் எனத் தெரியவில்லை.

ஆனால் ஒன்று நாமெல்லாம் வயிறு வெடிக்கச் சிரிக்க நிறைய விசயங்கள் கிடைக்கப் போகின்றன.

வரலாறு இப்படி நமக்கு வில்லனா இருக்கே, டி.என்.ஏ சோதனையில வேற இப்ப நிரூபிச்சுட்டாங்களே என மோடி அரசு உடனடியாக வேலை செய்த விவரம் இப்போதுதான் தெரிய வருகிறது.

மோடி அமைச்சரவையில் மகேஷ் ஷர்மா என்று ஒரு ‘கலாச்சாரத் துறை’ அமைச்சர் உள்ளார். முன்னாள் ஆர்.எஸ்.எஸ் காரர். கல்வித்துறை அமைச்சராக உள்ள ஜவடேகரும் ஒரு ஆர்.எஸ்.எஸ் ஆள்தான். இந்திய “வரலாற்றைத் திருத்தி எழுத” 14 பேர் கொண்ட ஒரு ‘வல்லுனர்’ குழு ஒன்றை ஆறு மாதத் திற்கு முன்பே அமைத்துள்ளதாக இப் போது மகேஷ் சர்மா அறிவித்துள்ளார்.

அப்படி ஒரு குழு அமைக்கப்பட்டதை உடனடியாக வெளியிட்டு இருப்பது தானே. ஏன் அதைச் சொல்ல இத்தனை தாமதம், தயக்கம், கூச்சம், பூடகம்? அதுவும் ஆரியர்கள் மத்திய ஆசியாக் காரர்கள்தான் என டி.என்.ஏ ஆய்வு நிறுவிய செய்தி கிடைத்த பின் இப்படி அவசர அவசரமாகவும், இரகசியமாகவும் இதைச் செய்வானேன்?

வேறென்ன கொஞ்சம் வெட்கந்தான். இந்த வேலையில் கொஞ்ச நஞ்ச அவமா னமா அவர்கள் பட்டிருப்பார்கள்....




# கர்நாடக தேர்தல் 2018

தென் மாநிலங்களில் பழமையான கலாச்சாரமும், சிறப்பான அரசியல் நாகரீகத்தையும் கொண்ட மாநிலமாக “கர்நாடகம்“ விளங்கி வருகிறது. நம் நாட்டில் ஜனநாயகம் மலர்ந்த பின் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் “மக்களாட்சி” தேர்தல் நடைமுறைக்கு வந்தது.

1952 ஆண்டு முதல் “வாக்களிப்பு” மூலம் தேர்தலும் நடைபெறுகிறது. சீரான நிர்வாகம், சிறப்பான சேவை மக்களுக்கு கிடைக்க மொழிவாரியாக மாநிலங்கள் ஏற்படுத்தப்பட்டு அவை சுதந்திரமாக வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தவும், தங்கள் மொழி, கலாச்சாம், பண்பாடு, பாதுகாத்துக் கொள்ளவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது நம் ஜனநாயக முறை.

350 கோடி செலவில் 4.46 கோடி வாக்காளர்கள் 57 ஆயிரம் வாக்குச் சாவடியில் வாக்களிக்க போகும் “கர்நாடக சட்டப் பேரவை தேர்தல் திருவிழா” மே-4 அல்லது 5-ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்படும். அன்றைய தினமே தேர்தல் விதிகள் நடைமுறைக்கு வரும்.

2013 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 122 இடங்களில் வென்று ஆட்சியை பிடித்த காங்கிரஸ் மே 13-ம் தேதி சித்தராமையா தலைமையில் ஆட்சி அமைத்தது. முஸ்லிம்களின் விகிதாச்சார அடிப்படையில் நான்கு முஸ்லிம்கள் அமைச்சர்களாக உள்ளார்கள். எல்லாமே அதிகாரமிக்க பதவிகள்தான்.

காங்கிரஸ் ஆட்சி என்றால் “கோஷ்டி பூசல்” மிகப்பிரபலம், சித்தராமைய்யா தன் நீண்ட அரசியல் அனுபவத்தில் “அதிருப்தியாளர்களையெல்லாம்“ பதவிகளைத் தந்து அமைதிப்படுத்தி ஐந்து ஆண்டுகள் முழுமையாக இன்னும் அதிக நாள் முதல்வராக இருந்தவர் என்ற சாதனையைப் படைத்து விட்டார்.

மறைந்த முன்னாள் முதல்வர் ராம கிஷ்ண ஹெக்டே, எஸ்.எம்.கிருஷ்ணாவை தொடர்ந்து 5 ஆண்டுகளில் ஆட்சியை முழுவதுமாக நிறைவேற்றியவர் என்ற பெருமையை மட்டுமல்ல பெரிய அளவில் ஊழல் குற்றச்சாட்டும் இல்லாமல் ஆட்சி நடத்தியவர்.

எதிர் கட்சியாக இருக்கும் பா.ஜ.க.வுக்கு இது பிடிக்குமா? அதிருப்தியாளர்களைத் தூண்டி விட்டார்கள். ஆர்.எஸ்.எஸ். தொண்டர்களை தாங்களே கொலை செய்து குழப்பம் விளைவித்துப் பார்த்தார்கள். இலக்கியவாதிகள், பத்திரிகையாளர்கள் என பலரையும் படுகொலை செய்ததன் மூலம் குட்டையை குழப்பி அவதூறுகளை அள்ளி வீசிப்பார்த்தார்கள். இவை அத்தனையும் தன் நல்ல நிர்வாகத்தின் மூலம் தவிடு பொடி யாக்கினார் சித்தராமைய்யா.



சங்கப்பரிவார, பா.ஜ.க. தொண்டர்கள் கொலையில் பா.ஜ.க.வுக்கு அதிக தொடர்பு உள்ளது என முன்னால் முதல்வரும் "தேவ கவுடாவின் மகனுமான எச்.டி.குமாரசாமி" பகிரங்கமாக குற்றம் சாட்டினார். காவி கும்பல் வாயே திறக்கவில்லை. மக்கள் மத்தியில் இவர்கள் மீதும் இவர்களின் மத்திய ஆட்சியின் மீது கடும் அதிருப்தி அதிகமாகிக் கொண்டேபோவதை உணர்ந்தவர்கள் "மாற்றத்திற்கான பயணம்" துவக்கி மாவட்டம் தோறும் நடத்திப் பார்த்தார்கள்.

இந்த ஆட்சி தொடர்வதற்கான "ஆசீர்வாத யாத்திரை"யை நடத்தி பதிலடி கொடுத்தார் சித்தராமைய்யா. தமிழ்நாட்டின் செயல்படும் அம்மா உணவகம், தாலிக்கு தங்கம், காப்பீடு திட்டம் போன்றவை இங்கும் "இந்திரா உணவகம், ஷாதி பாக்கியா, கல்வி உரிமைச் சட்டம், சிறுகுறு விவசாய கடன் தள்ளுபடி என செயல்படுகிறது.

காங்கிரஸின் ஐந்து ஆண்டுகால சாதனைகளை சொல்லி மீண்டும் சித்தராமையா தலைமையில் தேர் தலை சந்திக்க ஆர்வத் தோடு களப்பணியை தொடங்கி விட்டார்கள்.

**ராகுல் காந்தியின் வருகையும் மேலிட தலைவர்களின் ஒத்துழைப்பும்,**

சமீபகாலமாக எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பு அனைத்திலும் காங்கிரஸ் கட்சிக்கு சாதகமாகவே உள்ளது. இந்த உற்சாகத்தில் தலைகளும், தொண்டர்களும் இருந்தாலும் பா.ஜ.க. உன்னிப்பாக நிலைமைகளை கவனித்து வருகிறது. மோடியை அடிக்கடி அழைத்து கூட்டம் போட்டாலும் வெல்லப் போவது யாரு? மே-20 வரை காத்திருப்போம்.

நடக்கப் போகும் 15-வது கர்நாடக சட்டப் பேரவை தேர்தல் மக்கள் அளிக்கப் போகும் தீர்ப்பு அடுத்த வருட பொதுத் தேர் தலுக்கு முன்னோட்டமாக அமையும் என எதிர் பார்க்கலாம். நல்லவர்கள் நாடாளும் போது எல்லா மக்களும் நலமாக இருப் பார்கள். நல்லவர்களுக்கு வாய்ப்பளிப்பதன் மூலம் நாட்டுக்கு நாம் நன்மை செய்வோம்.

- M.S.கமாலுத்தீன்

# கன்னட தேர்தல்

நமது அண்டை மாநிலம் "கர்நாடகா" கன்னடிக : இங்கு மே 12 ஆம் நாள் சட்ட மன்ற தேர்தல் நடக்கவிருக்கின்றது. திராவிட நாட்டுக்குள் வடபுலத்து பாசிஸ்ட்டுகள் - சங்கப் பரிவாரத்தினர், பாதம் பதிக்க துணிகின்ற போது கன்னடம் தான் பாதை விட்டது 2013 வரை. 2013 ஆம் ஆண்டில் பாரதிய ஜனதா என்ற பாசிச பரிவாரத்தை வீழ்த்திக் காட்டு வதில் முஸ்லிம்களே முன்னணியில் நின்றனர். முஸ்லிம்கள் கன்னடத்தின் மக்கள் தொகையில் 12 சதவீதம்.

ஆங்கிலேயர்களுக்கு அறுதிவரை சிம்ம சொப்பனமாக இருந்த மாவீரன் ஷஹீத் திப்பு சுல்தான் தவழ்ந்த பூமி. கன்னடத்தில் வாழும் முஸ்லிம்கள் தமிழகத்தைப்போல் இரண்டு மடங்கு.

இந்த முஸ்லிம்கள் 2013-இல் நடந்த சட்ட மன்ற தேர்தலில் ஓரணியில் ஒன்றாய் நின்றார் கள். முஹல்லாக்கள் தோறும் முஸ்லிம்கள் வாக்காளர்களை ஒருங்கிணைத்தார்கள். முதல் நடவடிக்கையாக வாக்களிக்கும் வயதை (18) அடைந்த முஸ்லிம்களுக்கு வாக்குகள் இருக்கின் றன என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டார்கள். பின்னர் மஸ்ஜித்கள் தோறும் வாக்காளர்களை வரவழைத்து வாக்குகளை ஒருமுகப்படுத்தி வாக்களிக்க வைத்தனர். எல்லோரும் ஒட்டு மொத்த வாக்குகளையும் காங்கிரஸ் கட்சிக்கு வாக்களித்தார்கள். காங்கிரஸ் வெற்றிபெற்று ஆட்சியைப் பிடித்தது.

கன்னட மாநிலத்தில் மொத்தமுள்ள சட்ட மன்ற தொகுதிகள் 224. அதில் 112 இடங்களைப் பிடித்தாக வேண்டும் ஆட்சி அமைக்க. 2013 ஆண்டு நடந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சி 108 இடங்களைப் பிடித்தது என்ற செய்திகள் வந்த போது காங்கிரஸ் கட்சியின் அன்னை சோனியா காந்தியிடம், நீங்கள் கூட்டணி ஆட்சி அமைப் பீர்களா எனக் கேட்டபோது, அவர் நாங்கள் தனித்தே ஆட்சி அமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மையைப் பெறுவோம் என்றார். என்ன தைரியத்தில் இதைச் சொல்கின்றீர்கள் எனக் கேட்டபோது, அவர் நிச்சயமாக அறுதிப் பெரும்பான்மையை பெறுவோம் என்றார். காரணம் வாக்குகள் எண்ணிட மீதமிருந்த சட்ட மன்ற தொகுதிகள் முஸ்லிம்கள் பெரும் பான்மையாக இருந்த சட்ட மன்ற தொகுதிகள். பின்னர் 122 தொகுதிகளில் வென்று காங்கிரஸ் கட்சி முஸ்லிம் வாக்குகளின் ஒருங்கிணைப்பால் வென்று காங்கிரஸ் கட்சி மானமிகு சீத்தாரா மைய்யாவை முதலமைச்சராக ஆக்கினார்கள்.

சீத்தாராமைய்யாவும் முஸ்லிம்களிடம் நன்றி பாராட்டிடும் அளவில் தான் நடந்து கொண்டார்கள். ஒவ்வொரு வியாழக்கிழமையும் சிறுபான்மையினர் குறை கேட்டும் - தீர்க்கும் நாளாக ஆக்கினார்கள்.

## 2018 சதி

முஸ்லிம்கள்தாம் காங்கிரஸ் கட்சியின் வெற்றிக்குக் கட்டியங் கூறுகின்றார்கள் என்பதை அறிந்துகொண்ட வடபுலத்தை வஞ் சகங்களின் வழி வளைத்துக்கொண்ட பாசிசக் கும்பல் முஸ்லிம்களை வாக்காளர்கள் பட்டிய லிருந்து நீக்கிடும் பாதகத்தைப் பாங்காகச் செய்திருக்கின்றது. ஆமாம் 15 லட்சம் முஸ்லிம் வாக்காளர்களை வாக்காளர்கள் பட்டிய லிருந்து வெளியேற்றியிருக்கின்றது.

இந்த உண்மையை முஸ்லிம் பொறியியல் வல்லுநர்களே கண்டெடுத்து, உலகுக்கு அறிவித்திருக்கின்றார்கள்.

பொருளாதார நிபுணர் டாக்டர் அபூசாலிஹ்



என்பவர் செண்டர் ஃபார் ரிசர்வ் அண்டடிபேட்ஸ்-இன் டெவலெப்மெண்ட் பாலிசி (Centre for Research and Debates in Development Policy, CRDDP) அதாவது, வளர்ச்சிக் கொள்கையில், ஆராய்ச்சி மற்றும் விவாதம் இவற்றிற்கான மையம் என்றொன்றை நடத்தி வருகின்றார்கள்.

இவருடைய சீரிய முயற்சியிலேயே இந்த உண்மைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதற்காக அவர் பல இஞ்ஜினியர்களை - தகவல் நுட்ப நிபுணர்களை ஒருங்கிணைத்து உழைத்திருக்கின்றார்கள்.

மார்ச்சு திங்கள் முதல் வாரத்தில் டாக்டர் அபூசாலிஹ் அவர்களின் அமைப்பு. கன்னட மாநிலத்தில் 15 லட்சம் முஸ்லிம் வாக்காளர்களுக்கு வாக்காளர் அடையாள அட்டை இல்லை என்பதைக் கண்டுபிடித்திருக்கின்றார்கள். இதைக் கண்டுபிடித்த ஒரு வாரத்திலே இன்னும் அதிகமான ஆழமான தகவல்களைத் தோண்டி எடுத்திருக்கின்றார்கள். அது எந்த சட்ட மன்ற தொகுதியில் இந்த முஸ்லிம் வாக்காளர்கள் அடையாள அட்டை இல்லாத முஸ்லிம் வாக்காளர்கள் இருக்கின்றார்கள், அவர்கள் எந்த தெருவில், எந்த வீட்டில் குடியிருக்கின்றார்கள் என்பதையெல்லாம் கண்டுபிடித்திருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் இணையதளத்தில் பதித்து, அந்த மக்களை முஸ்லிம்களை வாக்காளர் அட்டைகளை வாங்கிட பணித்திருக்கின்றார்கள்.

இத்தோடு நில்லாமல் இன்னும் ஒருபடி மேலேபோய் சமூக ஆர்வலர்களை ஒன்று திரட்டி அவர்களுக்கு வாக்காளர்கள், அட்டைக் கிடைத்திட வழிவகை செய்திருக்கின்றார்கள்.

அத்தோடு டெல்லிக்கும் சென்று, தலைமை தேர்தல் ஆணையத்திடமும் இந்த குறைபாட்டை தெரிவித்திருக்கின்றார்கள். ஊடகங்களின் சந்திப்பு ஒன்றையும் நடத்தி, இதைச் சொல்லி இருக்கின்றார்கள். பின்னர் கன்னட மாநில தேர்தல் ஆணையத்திடமும், இதைச் சொல்லி இருக்கின்றார்கள்.

கன்னடத்து முஸ்லிம் இளைஞர்கள், தன்னார்வ தொண்டர்களாக மாறி, இந்த வாக்காளர்கள் அட்டைகளை வாங்கித் தந்திடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றார்கள்.

### 224-இல் 16 மட்டுமே

டாக்டர் அபூசாலிஹ் தலைமையிலான அணி, இப்படிப்பல வெற்றிகளைக் குவித்துக் கொண்டிருந்தாலும், அங்கு முஸ்லிம்கள் ஆற்றிட வேண்டிய பணி இன்னும் பாரதூரமானது. கன்னட மாநிலத்தில் 224 சட்டமன்ற தொகுதிகள் இருக்கின்றன. இதில் 16 சட்ட மன்ற தொகுதிகளில்தான் இந்த 15 லட்ச முஸ்லிம் வாக்காளர்கள், வாக்காளர் அட்டை இல்லாமல் இருக்கின்றார்கள். மீதமுள்ள 108 சட்டமன்ற தொகுதிகளில் கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டியிருக்கினறது. பின்னர் அவர்களுக்கு வாக்காளர்கள் அட்டைகளைப் பெற்றுத் தந்திட வேண்டியதிருக்கின்றது.

இந்த வாக்காளர்கள் அட்டைகளைப் பெறும் பணி, வேட்பாளர்கள் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறும் நாள் வரைதான் நடைபெற முடியும். வேட்பாளர்கள் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறும் நாளை ஏப்ரல்-27 என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளன.

இந்நிலையில் மிக வேகமாகப் பணிகளைச் செய்தாக வேண்டும் என ஆத்திரமும், ஆதங்கமும் படுகின்றனர். சமுதாயப் பணி கலைமாமணி, டாக்டர் அபூசாலிஹ்

இதற்கு பெரும் நிதியும் தேவைப்படுகின்றது. ஒரு சட்டமன்றத் தொகுதியில் வேண்டிய தகவல்களைச் சேகரிக்க 4000 ரூபாய் ஆகின்றது. இப்படி 224, நான்காயிரம் ரூபாய் தேவைப்படுகின்றது. இதனால் நிதி வழங்கிட வேண்டியும் மக்களிடம் கோரிக்கை வைத்துள்ளார் டாக்டர் அபூசாலிஹ் அவர்கள்.

இதுபோன்ற தில்லுமுல்லுகளை பாசிஸ்ட்டுகள் தொடர்ந்து செய்வார்கள். இதற்கும் சேர்த்துத்தான் தென்னகத்தை பிடிக்க 4800 கோடி ரூபாய்களை ஒதுக்கி இருக்கின்றார்கள்.

**- எம்.ஜி.எம்.**

## பறிபோகும் முஸ்லிம்களின் வாக்குகள்
## தென்னகத்தில் பாசிஸ்ட்டுகளின் மாபெரும் சதி அம்பலம்

**எது முதலில்?**

# எந்த சூழலில் எந்த செயல்?-2

கத்தார், எகிப்து வளைகுடா நாடுகளில் நல்லுள்ளம் கொண்ட பலர் ஆண்டுதோறும் ஹஜ்ஜை நிறைவேற்றிட பேராவல் கொண்டுள்ளனர். அவர்களுள் சிலர் தொடர்ந்து நாற்பது ஆண்டுகளாக ஹஜ் செய்து வருகிறார்கள் என்பதை நானறிவேன். நண்பர்கள் கூட்டாளிகள் உறவினர்கள் என ஒரு பெரும் கூட்டத்தோடு இப்படிச் செல்கின்றனர்.

ஒரு வருடம் நான் அவர்களிடம் கூறினேன்;

“இந்தோனே ஷியாவிலுள்ள ஓர் ஊருக்குச் சென்றிருந்தேன். கிறிஸ்தவ மதமாற்றக் கும்பல்கள் அங்கு படுபயங்கர வேலைகளைச் செய்து கொண்டிருப்பதை நேரில் கண்டேன்.”

“கல்வி, சுகாதாரம், சமூகம் ஆகியவற்றை சீரமைத்திடும் அறக் கட்டளைகள் அங்கு உடனடியான நிறுவப்பட வேண்டும். எனவே ஆண்டுதோறும் ஹஜ் செய்யும் நீங்கள் நூறு பேர் ஒரு நபருக்கு பத்தாயிரம் தந்தால் பத்துலட்சம் சேர்ந்துவிடும். கிறிஸ்தவ மதமாற்றத்துக்கு எதிரான மாபெரும் சேவைக்கு இது ஒரு வலிமையான விதை. இதை நாம் ஆரம்பித்தால் நம்மைப் பார்த்துப் பலரும் இதுபோல் செய்வார்கள். அந்த நன்மையும் நமக்குக் கிடைக்கும்” என்று சொல்லிப் பார்த்தேன்.

அதற்கு அவர்கள், “துல்ஹஜ் மாதம் வந்துவிட்டாலே ஹஜ் செய்திட எங்கள் மனம் துடிக்கிறது. கட்டுக்கடங்காத ஆர்வம் எங்கள் உயிரோடு கலந்து விடுகிறது.

ஹாஜிகளின் கூட்டத்தில் நாங்களும் கலந்திடுவதை பெரும் பாக்கியமாகக் கருதுகிறோம்.” என்று கூறினர்.



இமாம் யூசுப் அல்கர்லாவி

எதற்கு எப்போது முன்னுரிமை தர வேண்டும் என்று ஒரு முஸ்லிம் தெரிந்து கொண்டால் அவருடைய ஈமான் சரியாக இருந்தால் அவருடைய ஞானம் தெளிவாக இருந்தால் பெரும் பாக்கியம் மிக்க செயல் எது என்பதை அவர் உணர்ந்து கொள்ள முடியும்.

வேலை இல்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கலாம் கல்லாமை போக்கலாம். நோயாளிகளின் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்யலாம். பசியைப் போக்கலாம். விரட்டப் பட்டவர்களை அரவணைக்கலாம். எவ்வளவோ பணிகள் உள்ளன.

நல்லுள்ளம் கொண்ட இளைஞர்கள் பலரை எனக்குத் தெரியும். மருத்துவம், பொறியியல், விவசாயம், இலக்கியம் போன்ற கல்விகளைக் கற்று அவற்றில் பெரும் மதிப்பெண்களைப் பெற்றுத் தேறுகின்றார்கள். கல்லூரிகளிலிருந்து வெளியேறிய உடனேயே தாம் கற்ற துறைகளை ஒதுக்கிவிட்டு இஸ்லாமிய அழைப்பு, சீர்திருத்தம், சமூகப்பணி என்று முழுநேரமாக இறங்கி விடுகின்றனர்.

எந்தத் துறையில் அவர்கள் சிறப்புக் கல்வி பெற்றிருக்கிறார்களோ அதுவே ஒரு ‘ஃபர்ள் கிஃபாயா’ தான். அதாவது நம் சமுதாயத்திலுள்ள அனைவருமே அதைப்புறக் கணித்துவிட்டால் அனைவரும் குற்றவாளிகளாகிவிடுவார்கள் எனுமளவுக்கு அஃது ஒரு கடமையான துறைதான்.

அவர்கள் தமது துறையிலேயே அர்ப்பணிப்புடனும் மனத்தூய்மையுடனும் அல்லாஹ் விதித்த வரம்புகள் மீறாமலும் பணியாற்றி அதை (இபாதத்) வணக்கமாகவும், ஜிஹாதாகவும் ஆக்கிக் கொள்ள முடியும். எல்லா முஸ்லிம்களுமே தத்தமது தொழில்களை விட்டுவிட்டால் முஸ்லிம்களின் நலனை (அந்தத்

துறையில்) யார் நிலைநாட்டுவது?

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இறைத் தூதராக அனுப்பப்பட்ட காலக்கட்டத்தில் நபித்தோழர்கள் பல்வேறு தொழில்களைச் செய்து கொண்டிருந்தனர். அவர்கள் யாரையும் தொழிலைவிட்டு விட்டு முழுநேர இஸ்லாமிய அழைப்பாளராக மாறி விடும்படி நபி (ஸல்) கேட்டுக்கொள்ளவில்லை ஒவ்வொருவரும் தமது வேலைகளையும் தொழில்களையுமே செய்து வந்தனர்.

ஹிஜ்ரத் (எனும் தியாகப் பயணம்) நடைபெறுவதற்கு முன்னரும் சரி நடைபெற்ற பின்னரும் சரி எவரும் முழுநேர அழைப்பாளராக ஆகவில்லை. ஜிஹாதுக்கான அவசியம் நேர்ந்து அணி திரளும்படி அழைப்பு விடுக்கப்பட்டதால் அணி திரண்டனர். கூட்டம் சிறியதோ பெரியதோ, வலிமை அதிகமோ, குறைவோ எதைப் பற்றியும் கவலைப்படாமல் அல்லாஹ்வின் பாதையில் தம் செல்வங்களையும் உயிர்களையும் அர்ப்பணித்திடப் புறப்பட்டனர்.

இங்கே ஒன்றை நான் நினைவு கூறுகிறேன். அது முஸ்லிம்களின் நகரம். அங்கே இரண்டு டாக்டர்கள் மட்டுமே உள்ளனர். ஒருவர் யூதர் மற்றொருவர் கிறிஸ்தவர். அந்த ஊரிலுள்ள முஸ்லிம் ஆண், பெண் அனைவருடைய உடல் சிகிச்சை ஆரோக்கியம், மனம், ஆன்மா அனைத்தும் இவ்விரு டாக்டர்களின் கையில்தான் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

காயம்பட்டவர் ஒளுவுக்கு மாற்றாக தயம்மும் செய்து கொள்ளலாம் நோன்பு நோற்க இயலாதவர் நோன்பை விட்டு விடலாம் என்பன போன்ற மார்க்கச் சட்டங்களுடன் தொடர்புடைய முடிவுகளும் அவர்களிடமிருந்தே பெறப்படுகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த ஊரிலிருந்து மார்க்கக் கல்வி கற்றிட கூட்டம் கூட்டமாக வந்தவர்களை (தம் கல்வி நிலையத்தில் சேர்த்துக் கொள்ளாமல்) திருப்பி அனுப்பி விட்டார்கள் பேரறிஞர் இமாம் கஸ்ஸாலி (ரஹ்) அவர்கள்.

அந்த ஊர் மக்களுக்கு தற்போது மார்க்கக் கல்வி கற்ற ஆலிம்களைவிட மருத்துவம் கற்ற டாக்டர்களே முதல் தேவை.

வேறு சிலரோ இஸ்லாத்துக்கு எதிராக நடக்கும் சதிகள் பற்றி, இஸ்லாத்தின் மீது காழ்ப்பும் விரோதமும் கொண்டு அலையும் எதிரிகள் பற்றிக் கொஞ்சம் கூடக் கவலைப்படாமல் உள்மார்க்க விவகாரங்களைப் பெரிதாக்கி பெரும்போரை மூட்டி விடுகிறார்கள்.

அமெரிக்கா, கனடா, ஐரோப்பா போன்ற மேற்கு நாடுகளில் குடியுரிமை பெற்றும் சிறுபான்மையினராகவும் வாழ்ந்து வரும் முஸ்லிம்களுக்கோ கைக் கடிகாரத்தை வலது கையில் கட்டுவதா இடதுகையில் கட்டுவதா என்பது தான் பெரும் கவலைக்குரிய பிரச்சனையாக இருக்கிறது.

### பேண்ட், சர்ட்-க்கு பதிலாக வெண்ணிற ஆடை அணிவது சுன்னத்தா? வாஜிபா?

பெண்கள் பள்ளிவாசலுக்கு வருவது ஹலாலா? ஹராமா? நாற்காலியில் அமர்ந்து உணவுத் தட்டை மேஜை மீது வைத்து, கரண்டி, முள் கரண்டி வைத்துச் சாப்பிடுவது காஃபிர்களுக்கு ஒப்பான செயலா அல்லவா?

இதுபோன்ற நேரங்களை விழுங்குகின்ற சமுதாயத்தைக் கூறுபோடுகின்ற நம் முயற்சிகளையும் அர்ப்பணிப்புகளையும் வீணாக்குகின்ற அர்த்தமற்றவைகளையே செய்து கொண்டிருக்கின்றனர். இது எதிரியின்றி நடக்கும் யுத்தம். எந்த லட்சியமுமற்ற வீண் வேலை. இறை வணக்கத்தில் அதீத ஈடுபாடு காட்டும் சில இளைஞர்கள் தம் தந்தையிடமும் தாயாரிடமும் சகோதர, சகோதரிகளிடமும் முரட்டுத்தனமாகவும் கடினமாகவும் நடந்து கொள்கின்றனர். ஏனிப்படி நடந்து கொள்கின்றீர்கள்? என்று கேட்டால் அவர்களெல்லாம் தீனை (மார்க்கத்தை) விட்டு விலகிச் சென்று விட்ட பாவிகள் என்று கூறுகின்றனர்.

அல்லாஹ் கூறுகிறான்;

மனிதனுக்கு நாம் பெற்றோரிடம் அழகிய முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்று உபதேசம் செய்தோம். அவனின் தாய் பலஹீனத்தின் மேல் பலஹீனமாக இருக்க அவனை (கருவில்) சுமந்தாள். அவனுக்கு பால்குடி மறக்கடிக்க இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. ஆகவே நீ எனக்கும் உன் பெற்றோருக்கும் நன்றி



செலுத்துவாயாக என்னிடமே திரும்பி வர வேண்டியதிருக்கிறது.

எது பற்றி நீ அறிந்திருக்கவில்லையோ அதை எனக்கு இணை வைக்கும்படி உன்னை அவ்விரு வரும் வற்புறுத்தினால் அவ்விருவருக்கும் நீ கட்டுப்பட வேண்டாம். உலக விஷயத்தில் நீ அவ்விருவருடனும் அழகிய முறையில் கலந்துற வாடு. *(31:14,15)*

**இவ்வசனங்களில் அல்லாஹ் கூறுவதென்ன? பெற்றோருக்கு நன்றி செலுத்து**

அவர்கள் இணை வைப்பவர்களாக இருப் பினும் சரி. உன்னையும் இணை வைப்பவனாக ஆக்கிவிட அவ்விருவரும் பெரும் முயற்சி (முஜாஹதா) செய்தாலும் சரி. இதில் மட்டும் அவ்விருவருக்கும் கட்டுப்படாமல் இதர விஷயங்களில் அழகிய முறையில் கலந்துறவாடு என்கிறான். காரணம் படைத்தவனுக்கு மாறு செய்வதில் படைப்புகளுக்குக் கட்டுப்படக் கூடாது. இது தவிர பெற்றோருக்குப் பணிவிடை செய்யாமல் ஒதுங்கியிருக்கவோ இந்தக் கடமையிலிருந்து தப்பிக்கவோ எந்த வழியையும் அல்லாஹ் வைக்கவில்லை.

ஆனால், இந்த இளைஞர்களோ பணிவிடை செய்வதில்லை என்பது மட்டுமல்ல. முரட்டுத் தனமாகவும் கூட நடந்து கொள்கின்றனர்.

இதுபோலவே ரத்தபந்தங்களிடமும் உறவுக் காரர்களிடமும் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்றும் அல்லாஹ் கூறியுள்ளான்.

அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள், அவனைக் கொண்டே நீங்கள் ஒருவர் மற்றவரிடம் (உரிமைகளை) கேட்டுக் கொள்கிறீர்கள். இன்னும் உறவுகளைத் (துண்டிக்க) அஞ்சுங்கள் நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறான். *(4:1)*

அப்படியெல்லாம் அல்லாஹ் கூறியிருப் பதை வசதியாக மறந்து விடுகின்றனர். இது என்ன நியாயம்?



பாகம் 5

# இஸ்லாமிய வங்கி முறை!



கடந்த தொடர்களில் இஸ்லாமிய வங்கி எவ்வாறு கூட்டு தொழில் முறை திட்டங்களில் அதாவது முஷாரகா, முதரபா எப்படி செயல்படுகிறது என்று பார்த்தோம். இந்த முறை விற்பனை ஒப்பந்தங்களில் இஸ்லாமிய வங்கி எவ்வாறு லாபம் ஈட்டுகிறது என்று பார்க்கலாம்.

பொருட்களின் தேவை சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு அமைவதில்லை. உதாரணமாக ஒருவருக்கு இரு சக்கர வாகனம் உடனடி தேவையாக இருக்கும் அப்போது அவரிடம் பணம் இல்லாத காலமாக இருக்கும். பல குடும்ப பெண்கள் வீட்டுக்கு தேவையான பொருட்களை தவணை முறையில் வாங்குகிறார்கள் அதில் வட்டி உள்ளது என்ற அறியாமையிலும் கூட. இது போன்ற தேவைகளுக்கு உருவனான திட்டமே முராபஹா.

**செயல்முறை:** வாடிக்கையாளர் ஒரு பொருளின் தேவையோடு வங்கியை அணுகுவார் (உதாரணமாக இரு சக்கர வாகனம், கார், குளிர்சாதன பெட்டி). அவர் தேவைப்படும் பொருளை வங்கியின் மூலம் வாங்க விருப்பம் தெரிவித்து ஒரு முன் தொகையும் செலுத்தி விடவேண்டும். வங்கி அந்த பொருளை வாங்கி அதன் மீது ஒரு குறிப்பிட்ட லாபத்தை சேர்த்து தனது வாடிக்கையாளரிடம் விற்றுவிடும். இந்த ஒப்பந்தத்தில் வங்கி எவ்வளவு லாபம் வைத்துள்ளது என்று குறிப்பிட்டு இருக்க வேண்டும்.

மேலும் பொருளை வங்கியே தனது வாடிக்கையாளரிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும். வாடிக்கையாளர் அப்பொருளை உபயோகிக்க ஆரம்பித்து விடுவார் மேலும் தவணை முறையில் வங்கிக்கு பணத்தை செலுத்த ஆரம்பித்துவிடுவர். அவர் ஒரே தவணையிலும் கூட செலுத்தலாம்.

அவரால் குறிப்பிட்ட நேரத்தில் தவணை செலுத்த முடியவில்லை என்றால் அதற்காக வங்கி அவரிடம் அதிக தொகையோ, அபாரதமோ வசூலிக்காது. மேலும் வங்கியின் லாபம் காலத்திற்கு ஏற்றவாரு மாறுபடாது. அவர் ஒரு வருட தவணை முறையில் செலுத்தினாலும் சரி, இரண்டு வருடமாக செலுத்தினாலும் சரி வங்கியின் லாபம் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டதை தவிர அதிகமாக ஒரு ரூபாய் கூட வங்கி வசூலிக்காது. இதுதான் நாம் பார்த்து கொண்டிருக்கும் தவணை முறைக்கும் இஸ்லாமிய வங்கி தவணை முறைக்கும் இருக்கின்ற அடிப்படை வித்தியாசம்.

பல மக்கள் தங்களது தேவையை பூர்த்தி செய்ய கடன் அட்டையிலும், வட்டி அடிப்படையாக கொண்ட தவணை முறையிலும் பொருட்களை வாங்கி விட்டு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பணத்தை கட்ட முடியாமல் வட்டியாக பெரும் தொகையை செலுத்து கொண்டிருக்கிறார்கள். இதில் வட்டியை அடிப்படையாக கொண்ட வங்கிகள் பணம் சம்பாதிக்க தெரு தோறும் கடன் அட்டை விற்க தொடங்கி விட்டார்கள். இந்த கொடுமையில் இருந்து மக்களை மீட்க இஸ்லாமிய வங்கியின் இது போன்ற எளிய திட்டங்களே போதுமானது.

மேல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தத்தில் வங்கி தனது லாப தொகையை வாடிக்கையாளரிடம் தெரிவிக்காமல் கூட விற்பனை செய்ய முடியும், இதை முசாவாமா என்று அழைப்பார்கள்.

**தவர்ருக்:** இதுவும் முராபஹா போன்ற திட்டம் தான் ஆனால் சில விஷயங்களில் சற்று மாறுபடும். வாடிக்கையாளர் ஒரு பொருளை வாங்கி ஒரு லாபத்துடன் வேறு ஒரு இடத்தில விற்பனை செய்ய விரும்புகிறார், பொருட்களை வாங்குவதற்கு வங்கியை அணுகி தனது தேவையை பெற்று கொள்வார். பின்பு தனக்கு என்ற ஒரு லாபம் வைத்து அந்த பொருளை விற்று விட்டு, வங்கியிடம் அவர் செய்ய ஒப்பந்த அடிப்படையில் தனது தவணையை செலுத்த தொடங்கிவிடுவார்.

பொருட்களை ஒரு இடத்தில் வாங்கி வேறு ஒரு விதத்தில் விற்கும் வியாபாரிகளுக்கு இந்த திட்டங்கள் சிறந்த பயன்தரும்.

**இன்ஷா அல்லாஹ் தொடரும்**

**அபுதாஹிர்**



# மால்கம் X நினைவு தின கருத்தாய்வு கூட்டம்

கடந்த 18-03-2018 அன்று திருப்பூரில் மால்கம் X நினைவு தின கருத்தாய்வு கூட்டம் நடைபெற்றது. அமெரிக்காவில் விலங்குகளை விட கேவலமாகவும். மிக மிக மோசமான நிலையிலும் கருப்பர்கள் நடத்தப் பட்டனர். அவர்களை மனிதர்களாகவே வெள்ளை கிறிஸ்தவர்கள் கருதவில்லை. அந்த சமுகமூம் வேறு வழியின்றி கொடிய குற்றங் களில் ஈடுபடக் கூடிய சமூகமாக மாறி குற்றப் பரம்பரையினராய் வாழ்ந்து வந்தனர். அச்சமூ கத்தில் பிறந்த மால்கம் X- ம் குற்றச் செயல்களி லேயே தன்னை ஈடுபடுத்தி வந்தார்.

இந்நிலை யில் சிறையிலே இருக்கும் சமயத்தில் இஸ்லாத் தின் அறிமுகம் அவருக்கு கிடைத்தது. இஸ்லாம் இன, மொழி, நிற, தேசிய வேறுபாடின்றி அனைவருக்கும் சமத்துவம் வழங்குவதைக் கண்ட அவர் நிற, இன, அடிமை முறைக்கு சரியான தீர்வு இஸ்லாமே என்று இஸ்லாத்தை ஏற்றார்.

இஸ்லாத்தை ஏற்றதோடு மட்டுமல்லாமல் கருப்பின மக்களை அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்க முழு மூச்சாக களம் கண்டு மக்களை விடுவித்தார். இதைக் கண்ட அமெரிக்க உளவுத்துறை அவரை சுட்டுக் கொன்றது. அவர் ஷஹீதான தினத்தில் இந்தியாவிலும் சாதிக் கொடுமைகாளல் பாதிக்கப்பட்டு சின்னா பின்னமானோரை மீட்க தாருல் இஸ்லாம் தமிழகம் முழுவதும் எடுத்துச் செல்கிறது. இந்நிகழ்விற்கு உண்மையான அக்கறையோடு போராட்ட களத்தில் இருக்கும் தலைவர்களை இனம் கண்டு கருத்துரையாற்ற அழைக்கப் படுகின்றனர்.

தமிழக மக்கள் ஜனநாயக கட்சியிலிருந்து ஒடுக்கப்பட்டோருக்காக போராடி வரும் மாநில மகளிரணி செயலாளர் "பவானி இளவேனில்" அவர்களும் பெரியாரின் வழியில் செயல்பட்டு வரும் "காட்டாறு இதழின்" பொறுப்பாசிரியர் இராவணன் அவர்களும் தலித் எங்கேனும் விடிவு பெற்றாக வேண்டு மென்ற சிந்தனையிலேயே வாழ்க்கைக் கழித்து வரும் தலித் விடுதலைக் கட்சியின் மாநில துணைப் பொதுச்செயலாளர் "விடுதலை செல் வன்" அவர்களும், அருந்ததியர்களின் விடியலுக் காக பாடுபடும் அருந்ததியர் பாதுகாப்புப் படை நிறுவனர் வழக்கறிஞர் மனோகரன் அவர்களும் போராட்ட களத்திலே நீண்ட அனுபவம் வாய்ந்த தேசிய சிறுத்தைகள் கட்சி மாநில அமைப்பாளர் "மருத்துவர் இராதா கிருஷ்ணன் அவர்களும், எல்லா மக்களின் விடியலுக்காகவும் பாடுபட்டு வரும் தாருல் இஸ்லாம் பவுண்டேசன் டிரஸ்ட் தலைவர் மு. குலாம் முஹம்மது அவர்களும் சிறப்புரை யாற்றினார்கள்.



பவானி இளவேனில் அவர்கள் உரையாற்றும் போதும் மால்கம் X-ன் தீரமான போராட்டத்தை விவரித்தார். மேலும் சிரியா விவகாரத்தில் அமெரிக்க, இஸ்ரேலால் மக்கள் கொல்லப்படு சூழலில் சுன்னா, ஷியா பிரச்சனையாக திரிக்கப் படுவதை எடுத்துரைத்தார்.

மால்கம் X பாதையில் செல்வதே இங்கே நிலவும். சாதி வேற்றுமைக்கான தீர்வாகும் எனக் கூறினார். "காட்டாறு இதழின் பொறுப் பாசிரியர் இராவணன் உரையாற்றும்போது அரசுப் பள்ளிகளில் தாழ்த்தப்பட்டோர் எவ்வாறு புறக்கணிக்கப்படு கின்றன என்பதை புள்ளி விவரமாக தெரிவித்தார்.

மேலும் முஸ்லிம்களுக்கு எதிராக கருத்து உருவாக்குவதில் பாசிசம் எந்தளவு முனைப் புடன் உள்ளது என்பதை ஆதாரப்பூர்வமாக தெரிவித்தார். சாதி ஒழிப்பிற்கு இஸ்லாம் மட்டுமே தீர்வு என உறுதியுடன் பெரியார் நம்பியதையும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வு தன்னுடைய சொந்த நிகழ் வாக எண்ணி ஆரம்பம் முதலே தன்னுடைய நேரங்களை ஒதுக்கி தலைசிறந்த ஏற்பாட் டாளர்களை அடையாளம் காட்டிய விடுதலை செல்வன் உரையாற்றும்போது, தான் சிறையி லிருந்தபோது மால்கம் X வரலாற்றைப் படித் ததை நினைவு கூர்ந்தார். சாதிய ஆதிக்கத்தால் தான் கோவிலுக்குள் அனுமதிக்கப்படாத தையும், தெருவிற்குள் நடமாட முடியாததையும் நெகிழ்வோடு குறிப்பிட்டார். கருப்பின மக்கள் எப்படி கொலை, திருட்டு, போதைப்பொருள், ஆபாசம் போன்றவற்றில் மூழ்கிக் கிடந்தனரோ அதுபோலவே இங்குள்ள தலித் சமூகம் மூழ் கடிக்கப்பட்டிருப்பதையும் சுட்டிக் காட்டினார். அதிலிருந்து மீட்கப்பட வேண்டிய அவசியத் தையும் கூறினார். இதற்கான களப் பணிகளுக்கு விடுதலையடைந்த சமூகமான முஸ்லிம் சமூகம் முன்வர வேண்டும் எனவும் எடுத்துரைத்தார்.

அடுத்து உரையாற்றிய அருந்ததியர் பாதுகாப்புப் படை நிறுவனர், வழக்கறிஞர் மனோகரன் வர்ணாசிரமத்தின் வரலாற்றைக் கூறினார். மேலும் இட ஒதுக்கீட்டின் பலன் களையும் எடுத்துரைத்தார். பின்னர் உரை யாற்றிய மருத்துவர் இராதாகிருஷ்ணன் சாதிய வேறுபாட்டால்தான் எவ்வாறு ஒதுக்கப்பட் டோம் என்பதை விலாவாரியாகக் கூறினார்.

மேலும் புரட்சிகர இயக்கங்களில் 17 வருடமும் ஒரு தலித்களுக்கான கட்சியில் 20 வருடமும் செயல்பட்டும், தனக்கும், சமூகத் திற்கும் எந்த மாற்றமும் ஏற்படுத்தாததை கூறியபோது சரியான இலக்கு. மக்களுக்கான கொள்கைத் திட்டம் இல்லாமல் பயணிப்பது வாழ்வையே வீணடித்துவிடும் என்பதை உணர முடிந்தது,





இறுதியாக குலாம் முஹம்மது அவர்கள் இட ஒதுக்கீட்டின் ஏமாற்று வேலைகளை யும். அம்பேத்கருக்கு எதிராக அக்காலத்தில் தலைவர்கள் நடந்து கொண்டதையும். அனைவரும் ஓரணியில் நின்று இஸ்லாத்தை ஏற்பதன் மூலமே சாதி வேறுபாட்டை களைய முடியும் என்பதையும். பாசிசத்திற்கு மாற்றாக இருக்க முடியும் என்று கூறினார்.

திருப்பூரிலிருந்து
ந.நி.







# தலித்துக்கள் மீதான தாக்குதல் பற்றி எப்போது வாய் திறப்பீர்கள்

## பிரதமர் மோடிக்கு ஜிக்னேஷ் மேவானி கேள்வி

டிஜிட்டல் இந்தியா, செவ்வாய் கிரகம் பற்றியெல்லாம் பேசும் பிரதமர் நரேந்திர மோடி, தலித்துக்கள் மீதான தாக்குதல் பற்றிஎப்போதுதான் வாய் திறக்கப் போகிறார்? என்று தலித் தலைவரும் குஜராத் எம்.எல்.ஏ.வுமான ஜிக்னேஷ் மேவானி கேள்வி எழுப்பியுள்ளார்.

பீமா-கோரேகான் யுத்தத்தில் வென்றதன் நினைவு நாளையொட்டி, டிசம்பர் **31**-ஆம் தேதி, சனிவார்வாதா கோட்டையில் தலித் அமைப்புக்களின் சார்பில் விழா நடை பெற்றது. டாக்டர் அம்பேத்கரின் பேரன் பிரகாஷ் அம்பேத்கர், தலித் சமூக தலை வரும் குஜராத் எம்எல்ஏ-வுமான ஜிக்னேஷ் மேவானி, ரோஹித் வெமுலாவின் தாயார் ராதிகா வெமுலா, ஜேஎன்யு மாணவர் தலைவர் உமர் காலித் ஆகியோர் இவ்விழா வில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இதற்காக, ஜிக்னேஷ் மேவானி மற் றும் உமர்காலித் ஆகிய இருவரின் மீதும் **153** ஏ, **505, 117** ஆகிய பிரிவுகளின் கீழ் புனே காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

இந்நிலையில், தன் மீதான வழக்கு குறித்து, ஜிக்னேஷ் மேவானி பேட்டி ஒன்றை அளித்துள்ளார். அதில், சனிவார் வாதா கோட்டையில், வெறுப்பைத் தூண்டும் வகையில் நான் ஏதும் பேச வில்லை என்று கூறியுள்ள மேவானி, குஜராத் சட்டப்பேரவைத் தேர்தலில் வெறும் **99** இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றதால் பாஜக-வினரும் சங்கிகளும் தன்னைக் குறிவைத்து தாக்குதல் நடத்துவதாக குற்றம் சாட்டினார்.என்னைப் போன்ற தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிக்கு-தலித் தலைவருக்கே இந்தநிலை என்றால் ஒரு சாதாரண ஏழை தலித்தின் நிலை மையை எண்ணிப் பாருங்கள்; அவர்கள் எப்படி பாதுகாப்பாக உணர்வார்கள்? என்ற கேள்வியையும் எழுப்பினார்.

நாட்டில் சக மனிதர்களிடையே சமத்துவமாய் வாழ்வதற்கே பாடாய்ப்படும் வேளையில், பிரதமர் மோடி யோ டிஜிட்டல் இந்தியா குறித்தும், செவ்வாய் கிரகத்தில் குடியிருப்புகள் அமைப்பது குறித்தும் சந்திரனில் தண்ணீர் கண்டுபிடிப்பது குறித்தும் பேசிக் கொண்டிருக்கிறார் என்று கூறிய ஜிக்னேஷ் மேவானி, உனா சம்பவம், சபீர் பூர்சம்பவம், பீமா - கோரே கான் சம்பவம் இவற்றில் எவை குறித்தும் பிரதமர் பேச வில்லை என்பதை சுட்டிக் காட்டினார். தலித்துகள் தொடர்ந்து தாக்கப்படும் விவகாரத்தில் பிரதமர் தனது மவுனத்தைக் கலைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும், முற்போக்கு சிந்தனையுடைய மாணவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், அம்பேத்கர் கொள்கைப் பிடிப்பாளர்கள் இணைந்து விரைவில் டில்லியில் பிரதமர் மோடியின் அலுவலகம் நோக்கிபேரணி நடத்த இருப்பதாகவும் கூறிய அவர், அப்போது மனு சாஸ்திரத்தை ஒரு கையிலும் அரசியல் சாசனத்தை மற்றொரு கையிலும் ஏந்திக் காட்டி,பிரதமர் எதைத் தேர்வு செய்வார்; மனு சாஸ்திரத்தையா அல்லது அரசியல் சாசனத்தையா? என்று உரத்த கேள்வியை எழுப்புவோம் என்றும் குறிப்பிட்டார்.

# இஸ்லாம், அரசியல், அதிகாரம், அரபுலக எழுச்சி



சமூக வாழ்விற்கான சட்டங்களை உருவாக்குவதும் அதை அமல்படுத்துவதும் இஸ்லாமிய போதனைகளில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று.

இஸ்லாத்தை பொறுத்தவரை சமூகத்தில் கட்டமைப்புகளையும், ஒழுங்கு முறைகளையும் (Social order and Discipline) உருவாக்குவது மட்டும் அதன் இலட்சியம் அல்ல அதையும் தாண்டி சமூகத்தில் நீதியை நிலைபெற செய்வது. நீதி இல்லாத சமூகத்தில் கட்டமைப்புகள் நிலை பெற்றிருக்காது.

மேலும் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்குமான வாயில்களும் வாய்ப்புகளும் அங்கே அடைக்கப்பட்டு விடும். மனித படைப்பு மற்றும் சமூக வாழ்விற்கான குறிக்கோள்களை அங்கே உணர்ந்துகொள்ள முடியாது.

மனித குலத்தின் ஆன்மீக வளர்ச்சிக்கும், நிலையான மகிழ்ச்சிக்குமான களங்களையும் சூழல்களையும் வார்த்தெடுக்கும் விதத்தில் தான் இஸ்லாத்தில் சமூகத்திற்கான சட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சட்டங்கள் என்றுமே ஆன்மீக வளர்ச்சிக்கு தடை போடுவதாக இஸ்லாத்தில் அமையாது.

சட்டம் இயற்றுவதை பொறுத்தவரையில் இஸ்லாத்திற்கும் நவீன ஜனநாயகத்திற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு.

இன்றைய சமூகத்தில் சட்டம் இயற்றுவதும் அதற்கு ஒப்புதல் வழங்குவதும் மக்களாலோ அல்லது மக்களின் பிரதிநிதிகளாலோ நிறைவேற்றப்படுகிறது. இஸ்லாத்தின் பார்வையில் சட்டங்களின் அடிப்படைக் கொள்கைக்கு ஆதாரமாக அமைவது குர்ஆனும் நபி (ஸல்) வழியுமே.

இஸ்லாத்தின் ஒளியில் பாங்குற சொல்வதென்றால் மனிதர்கள் அனைவரும் சமம். தனக்கே ஆட்சி செய்யும் உரிமையும் தலைமையேற்கும் உரிமையும் உண்டு என்று இங்கே யாரும் வாதிட இயலாது. எந்த ஒரு தனி மனிதனுக்கோ அல்லது குழுக்களுக்கோ இனத்தின் அடிப்படையிலோ, புவியியல் மற்றும் வர்க்கத்தின் அடிப்படையிலோ அல்லது பாகுபாடுகளை கற்பிக்கும் காரணிகளின் அடிப்படையிலோ ஆட்சியதிகாரம் வழங்கப்படவில்லை.

எல்லாம் வல்ல இறைவனே இப்பிரபஞ்சத்தின் தலைவன். அனைத்து படைப்பினங்களின் மீது ஆட்சி செய்யும் அதிகாரம் அவனுக்கே உண்டு. அவனிற்கு முன் அனைவரும் சமம்.

படைப்பும் ஆட்சியும் அவனுக்கே சொந்தமல்லவா? என்கிறது திருக்குர்ஆன் வசனம் 7:54.

வானங்கள், பூமி ஆகியவற்றின் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது: இன்னும் அல்லாஹ் எல்லாப் பொருள்

களின் மீதும் பேராற்றலுடை யவன். (குர்ஆன் 3:189, 5:120)

நிச்சயமாக வானங்கள் பூமியின் ஆட்சி அல்லாஹ் வுக்கே உரியது. அல்லாஹ்வை யன்றி உங்களுக்கு பாதுகாவலனோ உதவி செய்பவனோ இல்லை என்பதை நீர் அறிய வில்லையா? (குர்ஆன் 2:107)

(நபியே) நீர் கூறுவீராக: அல்லாஹ்வே! ஆட்சிக்கெல்லாம் அதிபதியே! நீ யாரை விரும்புகிறாயோ அவருக்கு ஆட்சியைக் கொடுக்கின்றாய். இன்னும் நீ விரும்பு வோரிடமிருந்து அகற்றியும் விடுகிறாய். நீ நாடியவரை இழிவு படுத்தவும் செய்கிறாய். நன்மைகள் யாவும் உன் கைவசமே உள்ளன. அனைத்து பொருள்களின் மீதும் நிச்சயமாக நீ ஆற்றலுடையவனாக இருக்கின்றாய். (குர்ஆன் 3:26)

அன்றியும், வானங்களுடையவும், பூமி யுடையவும் ஆட்சி அல்லாஹ்வுக்கே உரியது. மேலும் இறுதி தீர்ப்புக்கான வேளை வந்து வாய்க்கும் நாளில் பொய்யர்கள் நஷ்டமடைவார்கள். (குர் ஆன் 45:27)

ஆட்சியதிகாரம் அல்லாஹ்வுக்கே உரியது என்ற இறை கட்டளையின் அடிப் படையில் இஸ்லாத்திற்கும் அரசியலுக்கு மான உறவு அமைகிறது. மனிதர்கள் அவனின் பெயரால் இறைவனின் பிரதிநிதிகளாகவே ஆட்சி நடத்துவார்கள்.

இஸ்லாத்தின் அடிப்படை கொள்கை யான நன்மையை ஏவுதல், தீமையை தடுத் தல் போன்றவற்றை முழுமையாக செய்திட வேண்டும் என்றால் அதற்கு அங்கே இஸ்லாமிய ஆட்சி செயலில் இருக்க வேண்டும் என்று சில அறிஞர்கள் தங்கள் கருத்துகளை முன் வைக்கின்றனர்.

நபித்துவத்தையும் ஆட்சி செய்யும் அதிகாரத்தையும் ஒருங்கிணைக்க முஹம்மது நபிக்கு இறைவன் அனுமதி அளித்தான். ஏனென்றால் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலமும் நிரா கரிப்பாளர்களை வெற்றி கொள்வதன் மூலமும் தன் பணியை முழுமை படுத்திடு வார் என்பதனாலேயாகும்.

இஸ்லாத்தை மேலோங்க செய்திடுவதில் ஆட்சி அதிகாரத்தின் அவசியத்தை அல்குர்ஆன் இப்படி கூறுகிறது.

உங்களில் எவர்கள் இறை நம்பிக்கை கொண்டு நற்செயல்கள் புரிந்தார்களோ அவர்களிடம் அல்லாஹ் வாக்குறுதி அளிக் கின்றான். என்னவெனில், அவர்களை பூமியில் பிரதிநிதிகளாக்குவான். அவர் களுக்கு முன் சென்று போன மக்களை பிரதிநிதிகளாக்கியது போன்று.

மேலும் அவர்களுக்காக அல்லாஹ் எந்த மார்க்கத்தை விரும்பினானோ அந்த மார்க்கத்தை வலுவான அடிப்படைகள் மீது நிலைநாட்டுவான். (குர்ஆன் 24:55)

இன்ஷா அல்லாஹ்
தொடரும் அபூஹாசின்

**இப்போது பரபரப்பான**
**விற்பனையில்**




விலை ரூ. 30 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**
52/1, மண்ணடி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.
தொடர்ப்புக்கு : 8148129887

# அன்பகத்தின்

## அன்பான வேண்டுகோள்!

**அன்பார்ந்த வாசகர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)**

**எமது இஸ்லாமியப் பிரச்சாரப் பணிகள் 37 ஆண்டுகளைக் கடந்து, 38 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்றன. அல்ஹம்துலில்லாஹ்.**

ஒரு நீண்ட நெடும்காலம் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும், எங்கள் பிரச்சாரங்கள் தொடர்ந்து நடந்து வருகின்றன. அல்லாஹ், எங்கள் வழி பல பிரபல்யங்களுக்கு, நேர்வழியைக் காட்டினான் அல்ஹம்துலில்லாஹ்.

அப்படி இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்கு இஸ்லாத்தின் செயல்முறைகளையும் இஸ்லாத்தின் அனைத்துப் பகுதிகளையும் கற்றுத் தருவதற்கென மூன்று கல்வி நிறுவனங்களை நிறுவியுள்ளோம். அல்ஹம்துலில்லாஹ்.

இந்த மூன்று நிறுவனங்களிலும் பல்லாயிரக்கணக்கானோர் மார்க்க கல்வியை கற்று சென்றுள்ளார்கள். அவ்வாறு நிறுவப்பட்ட மூன்றாவது கல்விக்கூடமே அன்பகம். அதுவும் தன் 10 ஆம் ஆண்டை நிறைவு செய்கின்றது. எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கல்வி கற்றுச் சென்றிருக்கின்றார்கள். அன்பகம் கடந்த 10 ஆண்டுகளாக ஒரு வாடகைக் கட்டடத்தில் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றது. இதையும் அடிக்கடி மாற்றிட வேண்டிய நிலை.

**இன்ஷா அல்லாஹ்** அதனை ஒரு சொந்தக் கட்டடத்திற்கு மாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். அதற்கு உங்கள் நிதி உதவிகளை தாராளமாக வழங்கும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

**அல்லாஹ் உங்களுக்கு அளப்பரிய கூலிகளை வழங்கிடப் போதுமானவன்.**

இவண்,

**மு. குலாம் முஹம்மது,** பேராசிரியர் **இல்யாஸ் ரியாஜி**

ஹாஜி. **அப்துல் ரவூஃப்**

**செக், டி.டி. அனுப்புவோர்**

**DARUL ISLAM FOUNDATION TRUST**

என்ற பெயருக்கு எடுத்து பின்வரும் முகவரிக்க அனுப்பவும்

51/1, மண்ணடி தெரு, 4-வது மாடி, அறை எண்.7, மண்ணடி, சென்னை - 600 001.

website : www.darulislam.in, Email : darultrust@yahoo.com,

Please draw your cheques / **DD in Favour of DARUL ISLAM FOUNDATION TRUST**

**Canara Bank A/c. 1287101017301** Branch St.Mary's Road, R.A.Puram, Chennai.

and send to : 52/1, Mannadi Street, 4th Floor, Room No.7, Mannadi, Chennai - 600 001.

**Mobile : 81481 29887,** Email : darultrust@yahoo.com, website : www.darulislam.in

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்

# வேர்கள் பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் -<br>ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் - மு. குலாம் முஹம்மத் - பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் - விரிவாக்கப்பட்ட பதிப்பு<br>- மு. குலாம் முஹம்மத் | ரூ. 60.00 |
| 8. | மால்கம் X - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மத், பக்கம் - 202 | ரூ. 110.00 |
| 17. | தீண்டாமைக்குத் தீர்வு | ரூ. 30.00 |
| 18. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மத் பக்கம்-163 | ரூ. 110.00 |
| 19. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம் மஹம்மத், பக்கம் -143 | ரூ. 90.00 |
| 20. | இஸ்லாமிய நாகரிகம் -<br>முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் - 206 | ரூ. 130.00 |
| 21. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மத், பக்கம் - 140 | ரூ. 70.00 |
| 22. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 23. | சாதி ஒழிந்தது - கன்னடம், | ரூ. 50.00 |
| 24. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 25. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மத் பக்கம்:48 | ரூ. 30.00 |
| 26. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம் -<br>செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 27. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 | ரூ. 50.00 |
| 28. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 29. | இஸ்லாமும் விஞ்ஞானமும்- பக்கம் :48 | ரூ. 30.00 |
| 30. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 50.00 |
| 31. | இஸ்லாமும் பெண்களும் - பக்கம் : 112 | ரூ. 60.00 |
| 32. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? பக்கம் : 84 | ரூ. 70.00 |
| 33. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? - விரிவாக்கப்பட்ட பதிப்பு - மு. குலாம் முஹம்மத் | ரூ. 30.00 |
| 34. | திருக்குர் ஆன் கூறும் பொறுமை -<br>டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 80.00 |
| 35. | 26/11 - விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 36. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் - அ. மார்க்ஸ் | ரூ. 20.00 |

37. முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்-
வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் - பக்கம் : 16 ரூ. 10.00
38. நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்? -
திரு. லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் - பக்கம் :8 ரூ. 10.00
39. குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்? -
சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் - அபூ. அஃப்ரஹ் - பக்கம் : 36 ரூ. 25.00
40. இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்-இன் லேப்டாப்பில் இருந்ததென்ன? பக்கம்: 27 ரூ. 20.00
41. கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான். கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் ரூ.25.00
42. கூரியூர் ஜின்னா ஷஹீத் - மு. குலாம் முஹம்மத், பக்கம் : 84 ரூ. 60.00
43. முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும், பக்கம் 16 ரூ. 20.00
44. இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு, எஸ்.எம். முஷ்ரிப், IPS, பக்கம் : 64 ரூ. 30.00
45. சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம், காந்திஜி கொலை ஏன்? எப்படி? பக்கம் : 40 ரூ. 30.00

## எமது விற்பனையில். . .

01. கோவை கலவரத்தில் எனது சாட்சியம்-
A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் ரூ. 100.00
02. மரிஜாப்பி - சி.பி.எம். அரசின் தலீத் படுகொலைகள்-
ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு ரூ. 100.00
03. குஜராத் கோப்புகள் - மறைக்கப்பட்ட கோர வடிவங்கள் -
ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, பாரதி புத்தகாலயம் ரூ. 170.00

### BOOKS IN ENGLISH

01. END OF CASTEISM - T.M. Umar Farooq,
English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam Rs. 50.00
02. THE GREAT BETRAYAL - Elyass Davidson, By Pharos Media Rs. 695.00
03. MUHAMMED THE PROPHET FOR OUR TIME - Karen Armstrong Rs. 325.00
04. KAFKA LAND - PREJUDICE, LAW AND COUNTER TERRORISM - Manisha Sethi Rs. 350.00
05. WHO KILLED KARKARE -
The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, 5th Edition Rs. 300.00
06. 26/11 - PROBE WAY JUDICIARY ALSO FAILED - S.M. Mushrif Rs. 275.00
07. ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION - Kamaluddin Ahamed Rs. 60.00
08. MUSLIMS AGAINST PARTITION OF INDIA - Shamsul Islam , Pharos Media Rs. 280.00
09. PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN (EPITOMS OF HINDU MUSLIM UNITY)
- Syed Naseer Ahamed Rs. 25.00
10. IMAGE AND SUBSTANCE - MODI'S FIRST YEAR OF OFFICE - Nilofar Suhrawardy Rs. 150.00

### BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது

### BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது - டி.எம். உமர் பாரூக் ரூ. 50.00
02. நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி - கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் ரூ. 30.00

## வேர்கள் பதிப்பகம்,

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001. தொடர்ப்புக்கு : 8148129887

வங்கி மூலம் பணம் செலுத்த விரும்புவோர்:
**DARUL ISLAM FOUNDATION TRUST,**
**CANARA BANK** Account 1287101017301
St. Mary's Road, R.A. Puram, Chennai - 600 028

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.